உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 19 திங்கட்கிழமை (03.01.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 038

# சர்வதேச மனித உரிமைகள் பேரவை அமர்வில் இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு முயற்சி

## சில ஐரோப்பிய நாடுகள் பின்னணியில்

கொழும்பு, ஜனவரி 3

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள சர்வதேச மனித உரிமைகள் பேரவையின் அமர்வின்போது இலங்கைக்கு எதிராக போர்க்குற்றப் பிரேரணை ஒன்றை முன்மொழிவதற்கான முஸ்தீபுகள் இப்போதிருந்தே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

போர்க்குற்றப் பிரேரணையை முன்மொழிவதற்கும், அதைநிறைவேற்றிக்கொள்வதற்கும் ஐரோப்பாவின் பலம் பொருந்திய சில நாடுகளின் உயர்மட்ட அமைச்சர்களுடன் தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இந்த அமர்வில் முன்மொழியப்படவுள்ள பிரேரணைக்கு வலு சேர்க்கும் வகையில் இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பாக ஆராய ஐ.நா. செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவிடமிருந்து இலங்கைக்கு எதிரானதும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு சாதகமானதுமான அறிக்கை ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் இராஜதந்திர ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (சி)

## தமிழ் கூட்டமைப்பு தனித்தா, இணைந்தா உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும்?

### நாளை கொழும்பில் கூடி முடிவு

மட்டக்களப்பு, ஜன.3

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் கட்சிகளுடன் இணைந்தா? தனித்தா? போட்டியிடுவது என்பது குறித்து முடிவு செய்ய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாளை கொழும்பில் கூடுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் மேற்கண்ட தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் போட்டியிடுவது குறித்த இறுதித் தீர்மானம் நாளை கூடும் கட்சியின் உயர்மட்ட கூட்டத்தின் பின்னர் முடிவு செய்யப்படும்.

வடக்கு, கிழக்கிலுள்ள மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கல்முனை

(02 ஆம் பக்கம் பார்க்க)

## குற்றச் செயல்கள் குறித்த விவரங்களை வெளியிட மறுத்த மானிப்பாய் பொலிஸ் நிலைய அதிகாரி

### நாடாளுமன்றில் பிரஸ்தாபிக்கப்படும் என்கிறார் சரவணபவன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜன.3

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் தொடர்பான விவரங்களை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்கு வழங்க பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மறுத்துவிட்டார்.

குடாநாட்டில் கடந்த சில நாள்களாக கொலை, கொள்ளை, ஆள் கடத்தல் போன்ற சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.

மானிப்பாய்ப் பிரதேசத்தில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் தொடர்பான விவரங்களை பெறுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றார்.

பொலிஸ் பொறுப்பதிகாரியுடன் கலந்துரையாடி குற்றச் செயல்கள் குறித்த விவரங்களைத்

(02 ஆம் பக்கம் பார்க்க)

## புலம்பெயர் தமிழருடன் தொடர்ந்து பேச்சில் ஈடுபட்டு வருகிறது அரசு

### அமைச்சர் நிமல் சிறிபால தெரிவிப்பு

கொழும்பு, ஜன.3

புலம்பெயர் தமிழர்களுடன் இலங்கை அரசு தொடர்ந்து பேச்சில் ஈடுபட்டு வருகின்றது என்றும், அவர்கள் இலங்கை அரசுக்கு உதவ முன்வந்துள்ளனர் என்றும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இதுதொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அண்மையில் தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தின. அக்கட்சிகள் முன்வைத்த தமிழர்களின் பிரச்சினைகளை ஜனாதி

(02 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி தேர்தலுக்கு ரூ. 180 கோடி

கொழும்பு, ஜன.03

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களுக்கு 180 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என தேர்தல் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தல்கள் இறுதியாக 2006ஆம் ஆண்டு நடைபெற்றன. இவற்றின் பதவிக்காலம் 2009 மார்ச் மாதத்துடன் முடிவுற்றது. அதன் பின்

(02 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசு - கூட்டமைப்பு பேச்சுக்கள் அடுத்த வாரம் ஆரம்பமாகின்றன

### சுமந்திரன் கூறுகிறார்

கொழும்பு, ஜன.3

அரசுடனான பேச்சுக்களின்போது இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஆலோசனைகளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைக்கும் என்றும் பேச்சுக்கள் அடுத்த வாரமளவில் ஆரம்பமாகும் என்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினை தீர்வுத் தொடர்பில் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து சமீபத்தில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தம்முடன் பேச்சு நடத்தினார் எனவும் சுமந்திரன் எம்.பி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் 13ஆவது அரசமைப்புத் திருத்தத்துடன் தொடர்புபட்டதாக இருக் காது. இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காணும் வகையில் ஆலோசனைகளை முன்னெடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

தமிழ்த் தேசியக்

(02 ஆம் பக்கம் பார்க்க)

மாணவர்களே! உங்களுக்கான நேரசூசிகை இன்றைய உதயனுடன்! உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!

நுளம்புகளின் தொல்லைக்கு ஒரே தீர்வு....

சொல்பெக் EW 050



Hayleys 47, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 2221292

## இந்திய - பாக். படைத் தளபதிகள் சம காலத்தில் இலங்கை வருகை

கொழும்பு, ஜன.3

இந்திய - பாகிஸ்தான் படைத் தளபதிகள் இந்த மாத நடுப் பகுதியில் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 16 ஆம் திகதி இந்திய விமானப்படைத் தளபதி எயர் சீவ் மார்சல் பிரதீப் வசந்த நாயக் ஐந்து நாள்கள் பயணமாக இலங்கை வரவுள்ளார்.

அதேவேளை பாகிஸ்தான் இராணுவத்

(02 ஆம் பக்கம் பார்க்க)

தரம் 5 புலமைப்பரிசிலில் பிரவேசிக்கும் மாணவர்களுக்கு உயர்வான வாழ்த்துக்கள்

அகரத்தில் சிகரம் பெற்று, உலகம் பகரும் வண்ணம் வாழ்வை எழுதப்போகும் உன்னத பிஞ்சுக்களை

ஆசிரியர் : திருகோணமலை எஸ்.கணேசலிங்கம் A.D.E.

அவர்களின் ஆக்கத்தில் வெளிவரும் வெற்றிச்சிகரம் மனதார வாழ்த்துகின்றது

ஜனவரி 20 முதல் பரீட்சை வரை வெற்றிச்சிகரத்தின் 20 இதழ்கள் தொடர்ந்து வெளிவரும்.. பாடசாலைகளுக்கு விஷேட கழிவு வழங்கப்படும் தொடர்புகளுக்கு...

விலை ரூபா 20

யுனிலங்காஸ் 32, சென். அன்ரனீஸ் மாவத்தை, கொழும்பு 13 0776258778

அன்னை புத்தகசாலை - யாழ்ப்பாணம் | மொடேன் ஸ்ரோர்ஸ் - நெல்லியடி | அறிவுநதி - கிளிநொச்சி

NIBM BUILDING COMPETENCIES Jaffna யாழ்ப்பாணம்

A statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development



NIBM இன் கணனிக் கற்கைநெறிகள்

கணனி தொழில்நுட்பத்தில் சான்றிதள் கற்கைநெறி (Certification in Computer Science)

அலுவலகர்களுக்கான கணனி கற்கைநெறி (certification on computers for officers)

அனுமதி பரீட்சை ஆரம்பமாகியுள்ளது

ஆகக் குறைந்த கல்வி தகைமை க.பொ.த சாதாரண தரம் (G.C.E (O/L))

தேசிய வியாபார முகாமை நிறுவனம்
40, கல்லூரி வீதி, (யாழ் இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக) யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: (021) 222 0360, 61, 62

முதலில் அனுமதிக்கப்படும் சிலருக்கு 25% கட்டணக் கழிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த ஆட்சியைக் கவிழ்க்க மக்கள் ஜே.வி.பியுடன் அணி திரள்வர்

## விஜித ஹேரத் எம்.பி. நம்பிக்கை

கொழும்பு, ஜன. 03

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கும், முதலாளித்துவப் பொருளாதார முறைமையைத் தூக்கி வீசுவதற்கும் இந்நாட்டு மக்கள் புதுவருடத்தில் இருந்து ஜே.வி.பியுடன் கைகோப்பது உறுதி - என்று நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்நாட்டு மக்கள் படும் துன்பத்தை நீக்க மஹிந்த ராஜபக்ஷவால் முடியவில்லை. அவரது முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கையால் மக்களின் பட்டினி அதிகரித்துள்ளது. வாழ்க்கைச் செலவீன அதிகரிப்புக்கு இந்த முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கையில் எதுவிதத் தீர்வும் இல்லை.

இந்த நிலைமையை நாட்டு மக்களுக்கு விளக்குவதற்காக நாம் நாடு முழுவதும் மாவட்ட கூட்டங்களை நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

அரசு தொடர்ந்தும் மக்களை ஏமாற்றக் கூடாது. அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு, பொருள்களின் விலைகளைக் குறைத்தல், தேசிய பொருளாதாரத்தை ஸ்தாபித்தல் போன்ற அரசால் வழங்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகள் மீறப்பட்டுவிட்டன. அவை உடன் நிறைவேற்றப்படவேண்டும்.

புதுவருடத்தில் தமக்கு நிவாரணம் கிடைக்கும் என்று காத்திருந்த மக்களின் எதிர்பார்ப்பு 2011ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் சிதைக்கப்பட்டுள்ளது.

புதிய மின்வரி, பொருள்களின் விலை ஏற்றம் மற்றும் அதிகரிப்பு ஆகியவற்றைச் சுமந்துகொண்டு இந்த புதுவருடம் வந்துள்ளது.

மக்களின் பிரச்சினைகளுக்கு அதிகாரிகளால் தீர்வு வழங்க முடியாதுள்ளது என்பதை மக்கள் உணர்ந்துள்ளனர்.

ஆகவே, மஹிந்த ராஜபக்ஷவின் மக்கள் விரோத ஆட்சியையும் அவரது முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கையையும் கவிழ்த்து புதியதொரு ராஜ்யத்தைக் கட்டியெழுப்ப இந்த நாட்டு மக்கள் எம்முடன் அணி திரள்வது உறுதியாகிவிட் டது.

- இப்படி அவர் தெரிவித் தார்.

# எதிர்கால அரசியல் நடவடிக்கை குறித்து ரணில் - கட்சி எம்.பிக்கள் இன்று ச்ந்திப்பு

எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் மற்றும் திட்டங்கள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும், ஐ.தே.கவின் எம்.பிக்கள் சிலருக்கும் இடையில் இன்று மாலை விசேட சந்திப்பு நடைபெறவுள்ளது என்று அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இன்று நடைபெறவுள்ள விசேட கலந்துரையாடலில் ஐ.தே.கட்சியின் எம்.பிக்களான ஜோன் அமரதுங்க, ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோருடன் தானும் கலந்து கொள்வேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் வாரமளவில் உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்டு வரும் மார்ச் மாதம் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெறவுள்ள தருணத்தில், இன்று நடைபெறும் விசேட கலந்துரையாடலின்போது, அது தொடர்பான முக்கிய சில தீர்மானங்கள் எடுக்கவுள்ளன - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 130 நாடுகளுக்கான அமெரிக்காவின் ஜீ.எஸ்.பி. சலுகை காலாவதியானது

கொழும்பு, ஜன. 03

இலங்கை உள்ளிட்ட 130 நாடுகளுக்கு அமெரிக்காவால் வழங்கப்பட்டு வந்த ஜீ.எஸ்.பி. சலுகைத் திட்டம் காலாவதியாகியுள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் குறித்த ஜீ.எஸ்.பி. சலுகைத் திட்டம் காலாவதியானது எனக் குறிப்பிடப்படுகிறது.

எனினும் இந்த வரிச் சலுகைத் திட்டம் அநேகமாக மீண்டும் நீடிக்கப்படக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய காங்கிரஸ் சபை இந்தச் சலுகைத் திட்டத்தை நீடிப்பதற்கான சாத்தியம் உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் சலுகைத் திட்டத்தை மீள வழங்குவதற்கு சில மாதங்கள் செல்லக் கூடுமென தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் முன்னணி ஆடைக் கைத்தொழில் நிறுவனங்கள் பல அமெரிக்க ஜீ.எஸ்.பி. வரிச் சலுகைத் திட்டத்தின் மூலம் நன்மை அடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### குற்றச் செயல்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தருமாறு சரவணபவன் கோரினார்.

மேலதிகாரியின் பணிப்புக்கு அமையவே விவரங்களைத் தர முடியும் என்று தெரிவித்து விவரங்களை வழங்க அவர் மறுத்து விட்டார்.

"அங்கிருந்து உயர் பொலிஸ் அதிகாரிகளுடன் சரவணபவன் தொடர்பு கொண்டபோதும், விவரங்களை வழங்காது இழுத்தடித்ததாக அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் உரிமையை பொலிஸார் மதிக்காது, உண்மை நிலையை வெளியிட மறுப்பது - மறைப்பது ஜனநாயக நடைமுறைக்கு அப்பாற்பட்டது என்பதை சரவணபவன் 'உதயனுக்குச்' சுட்டிக் காட்டினார்.

பொலிஸார் விவரம் தர மறுத்த விடயத்தை நாளை மறுதினம் நாடாளுமன்றத்தில் எழுப்பவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஒ-ஜ-68)

### இந்தியா - பாக். ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமைத் தளபதி ஜெனரல் அஸ்பக் கான் எதிர்வரும் 19 ஆம் திகதி கொழும்பு வரவுள்ளார். இவர் மூன்று நாட்கள் இலங்கையில் தங்கியிருப்பார்.

கடந்த நவம்பர் மாதம் பாகிஸ்தான் ஜனாதிபதி அசிப் அலி சர்தாரி கொழும்புக்கு மேற்கொண்ட பயணத்தின் தொடர்ச்சியாகவே இவரது பயணம் அமையவுள்ளது.

இலங்கைக்கு சமநேரத்தில் வரவுள்ள இந்திய, பாகிஸ்தான் படைத்தளபதிகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கோத்தபய ராஜபக்ஷ மற்றும் படைத் தளபதிகளைச் சந்தித்துப் பேசத் திட்டமிட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

### உள்ளூராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் ஒரு வருட கால நீடிப்பு உள்ளூராட்சிச் சபைகளுக்கு வழங்கப்பட்டது.

எதிர்வரும் மார்ச் மாதத்துடன் இச்சபைகளின் பதவிக் காலம் நிறைவடைகிறது.

யாழ். மாநகர சபை மற்றும் வவுனியா நகர சபை ஆகியவற்றுக்கான தேர்தல் சுமார் 16 மாதங்களுக்கு முன்னர் நடத்தப்பட்டது தெரிந்ததே

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இவ் வாரம் வெளியிடப்படவுள்ளது.

# ஐ.தே.கவின் தலைமை மாறினால் அதன் வாக்கு வங்கி உயரும்

## தயாசிறி ஜயசேகர கூறுகிறார்

கொழும்பு, ஜன. 03

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட்டால் வீழ்ச்சியடைந்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்கு வங்கியை 45 முதல் 50 சதவீதத்துக்கு உயர்த்த முடியும் என்று ஐ.தே.கட்சி எம்.பி. தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கட்சியை மீண்டும் வெற்றிப்பாதையில் இட்டுச் செல்ல சஜித் பிரேமதாஸவால் மாத்திரமே முடியும் என்றும் அவர் கூறினார்.

நாரஹேன்பிட்டியில் உள்ள போதி ரணசிங்க மன்றத்தில் இடம்பெற்ற புதுவருட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கு சுமார் 90 நாள்கள் உள்ளன. இத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற வேண்டும். அதற்கேற்றவாறு கட்சி பலப்படுத்தப்பட வேண்டும். கட்சியின் முக்கிய பதவிகளுக்கு உறுப்பினர்கள் உடன் நியமிக்கப்பட வேண்டும்.

எமது கட்சியின் யாப்பு மறுசீரமைக்கப்பட்டதால், இந்நாட்டு மக்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றனர். புதிய எதிர்பார்ப்புடன் உள்ளனர். இச் சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

கட்சியை வெற்றிப் பாதையில் இட்டுச்செல்ல சஜித் பிரேமதாஸவாலேயே முடியும். நாம் எதிர்வரும் தேர்தல்களில் வெற்றி பெறக்கூடியவாறு எமது செயற்பாட்டை மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டும்.

கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட்டால் ஐ.தே. கட்சியின் வீழ்ச்சியடைந்திருக்கும் வாக்கு வங்கியை 45 முதல் 50 வீதத்தால் உயர்த்த முடியும் - என்றார்.

# சப்ரகமுவ பல்கலை காலவரையறையின்றி மூடப்பட்டதற்கு மாணவர்கள் கடும் விசனம்

கொழும்பு, ஜன. 03

பகிடிவதைச் சம்பவம் தொடர்பில் எழுந்த சர்ச்சையை அடுத்து சப்ரகமுவ பல்கலைக்கழகத்தை காலவரையறையின்றி மூடியமை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல - என்று சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்களின் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அந்தப் பல்கலைக்கழகத்தின் மேலதிக உபவேந்தர் கலாநிதி எச்.எம்.எஸ். பிரியநாத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

பல்கலைக்கழக மாணவர்களின் இவ்வாறான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. இதன் காரணத்தாலேயே சப்ரகமுவ பல்கலைக்கழகக் கல்வி நடவடிக்கையை மறுஅறிவித்தல்வரை தற்காலிகமாக இடைநிறுத்தும் முடிவுக்கு வந்தோம் - என்றார்.

இந்நிலையில், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் இடம்பெற்று வரும் பகிடிவதைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அந்த நடவடிக்கையில் ஈடுபடும் மாணவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பகிடிவதைச் சம்பவம் தொடர்பாக எழுந்த சர்ச்சையை அடுத்து நேற்றுமுன்தினம் முதல் காலவரையறையின்றி சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக நேற்று நடைபெறவிருந்த பரீட்சை ஒன்றும் பிற்போடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### அரசு - கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்புடன் பேச்சு நடத்த ஜனாதிபதி அமைச்சர்களடங்கிய குழுவொன்றை நியமிப்பார். இக் குழுவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் குழு பேச்சுகளை நடத்தும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் இப் பேச்சுகளில் கலந்துகொள்ள மாட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன் வைக்கும் ஆலோசனைகளை அரசு ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் அவற்றை அமுல்படுத்தத் தேவையானால் புதிய அரசமைப்புத் திருத்தம் கொண்டு வருவது குறித்தும் தீர்மானிக்கப்படும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பின்பேரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவரை சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர் சந்தித்துப் பேச்சு நடத்தியமை தெரிந்ததே.

### தமிழ் கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநகர சபைகள் உட்பட அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிச்சயம் போட் டியிடும் எனத் தெரிவித்த அவர் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது, மேயர், தவிசாளர், வேட்பாளர் நியமனம் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து இக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். [illegible]

### புலம்பெயர் தமிழருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதி கருத்தில் கொண்டுள்ளார்.

புலம்பெயர் தமிழ் மக்கள் இன்னும் புலிகளின் பிடியில் உள்ளனர். இருப்பினும் அதில் இப்போது மாற்றம் ஏற்பட்டு வருகின்றது.

ஜனாதிபதியுடன் சேர்ந்து ஐ.நா.சபைக்கு மேற்கொண்ட விஜயத்தின்போதும், ஆஸ்திரேலியாவுக்கான விஜயத்தின் போதும் நான் அதை அவதானித்தேன்.

ஆரம்பத்தில் மிகவும் பலமாக இருந்த புலம்பெயர் தமிழர்களின் கட்டமைப்பு புலிகள் தோற்கடிக்கப்பட்டதும் சிதைந்துவிட்டது. இருப்பினும் வெளிநாடுகள், புலிகள் பலமாக இருக்கின்றார்கள் என்று காண்பிப்பதற்காக புலம்பெயர் தமிழர்களைப் பயன்படுத்துகின்றன.

அரசு இப்போது புலம்பெயர் தமிழர்களுடன் தொடர்ச்சியாகப் பேச்சு நடத்தி வருகின்றது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு அரசு ஆற்றி வரும் சேவை பற்றி நாம் புலம்பெயர் தமிழர்களுக்கு விளக்கிக் கூறியுள்ளோம். அவர்கள் உண்மை நிலையை இப்போது விளங்கிக் கொண்டுள்ளனர். அதனால் தான் அவர்கள் எமது அரசுக்கு உதவ முன்வந்துள்ளார்கள்.

தமது சகோதரர்களான வடக்கு, கிழக்கு தமிழர்களின் எதிர்காலம் நல்லபடியாக அமைய வேண்டும் என்றால் புலம்பெயர் தமிழ் மக்கள் எமது அரசுக்கு உதவ வேண்டும். அதனூடாக எம்மால் மேலும் மேலும் வடக்கு, கிழக்கு தமிழர்களின் எதிர்காலத்தை வளமாக்க நடவடிக்கை எடுக்க முடியும்.

- இவ்வாறு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டிக்கு நேற்றுமுன்தினம் சென்ற உரும்பிராய் ஓட்டோ சாரதி திரும்பவில்லை

## அவரது மனைவி மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன.3

உரும்பிராய், சிவகுல வீதியைச் சேர்ந்த ஓட்டோ சாரதி ஒருவர் நேற்றுமுன்தினம் மாலையில் இருந்து காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேயிடத்தைச் சேர்ந்த எஸ். கோபிநாத் (வயது 27) என்பவரே காணாமற் போயுள்ளவராவார். அவர் ஒரு பிள்ளையின் தந்தையாவார்.

நேற்றுமுன்தினம் மாலை 6.45 மணியளவில் பிரஸ்தாப நபர் உரும்பிராய் சந்தியில் நின்றார். அங்கு வந்த ஓர் ஆணும் பெண்ணும் அளவெட்டிக்குச் செல்வதற்காக அவரை வாடகைக்கு அமர்த்தினர். அவர்களை ஏற்றிச் சென்ற சாரதி நேற்று மாலை வரை வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக பிரஸ்தாப சாரதியின் மனைவி மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஓ-ஐ)

# வடக்கில் 17 விளையாட்டு அலுவலர்கள்; ஆளுநரால் நியமனக்கடிதங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜன.3

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நேற்றுமுன்தினம் புதிதாக நியமனம் பெற்ற 17 விளையாட்டு அலுவலர்களுக்கும் மூன்று விளையாட்டு பயிற்றுனர்களுக்கும் நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த விளையாட்டு அலுவலர்கள் மூவர் இரண்டாம் கட்டமாக நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் விளையாட்டுப் பயிற்றுனர்களாக நியமனம் பெற்றுள்ளார்கள்.

கொழும்பு பத்தரமுல்லையில் அமைந்துள்ள வடமாகாண் ஆளுநரின் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.


இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் நியமனக்கடிதங்களை வழங்கியதுடன் வடமாகாண கல்விப் பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை செயலாளர் க. இளங்கோவன், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.ரங்கராஜன், வடமாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் சி.அண்ணாத்துரை உட்பட மற்றும் ஆளுநர் அலுவலக அலுவலர்களும் கலந்துகொண்டார்கள். (ஐ-86)

# இந்திய அறிஞர்களின் உரைகள் இன்று

யாழ்ப்பாணம், ஜன.3

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கருத்தரங்கில் தமிழ்நாடு பாண்டிச்சேரி பல்கலைக்கழகப் பீடாதிபதி பேராசிரியர் சம்பந்தன் மற்றும் அப் பல்கலைக்கழக காந்திக் கல்வி நிறுவன இயக்குநர் பேராசிரியர் மூர்த்தி ஆகியோர் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு புவியியல்துறை விரிவுரை மண்டபத்தில் கருத்துரை வழங்கவுள்ளனர்.

பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் வி.பி. சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த கருத்தரங்கில் பேராசிரியர் சம்பந்தன் ''உலகலாவிய நிதி நெருக்கடிகளின் விளைவுகளும், அமெரிக்க சீன நாடுகளுக்கிடையிலான நாணயப் போர்கள்'' என்ற தலைப்பிலும் பேராசிரியர் மூர்த்தி '' உலகலாவிய சமாதான வாய்ப்புக்களும் 21ஆம் நூற்றாண்டுக்கான சவால்களும்'' என்ற தலைப்பிலும் உரையாற்றவுள்ளனர். இக் கருத்தரங்கில் ஆர்வலர்கள் கலந்து பயன் பெறுமாறு பொருளியல் துறையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (ஐ)



இணுவில், மருதனார்மடத்தில் அமைந்துள்ள அருள்வளர் சுந்தர ஆஞ்சநேயர் ஆலய வருடாந்த தேர்த் திருவிழாவையொட்டி நேற்றுக் காலை 9.15 மணியளவில் தேர் உற்சவம் இடம்பெற்றது.

2001 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆலயம் துரித வளர்ச்சி பெற்று நேற்று புதிய சித்திரத் தேரில் பஞ்சமுக ஆஞ்சநேயர் வீதியுலா வந்து அடியவர்களுக்குக் காட்சி கொடுத்தார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வருகை தந்த அடியவர்கள் பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டார்கள். (ஓ-86)

# ஆசிரியர் கலாசாலைகளில் ஜன.18 முதல் பரீட்சைகள்

ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 18 திகதி தொடக்கம் 5 தினங்களுக்கு நடைபெறவுள்ளது. 10 ஆயிரம் ஆசிரியர்கள் மேற்படி பரீட்சைக்கு தோற்றுகின்றனர். 9 ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளிலும் 44 தொலைக்கல்வி நிலையங்களிலும் இந்தப் பரீட்சை நடைபெறவுள்ளது.

ஆசிரியர் பயிற்சித் துறைக்கான புதிய பாடத்திற்கு அமைய பயிற்சி அளிக்கப்பட்டவர்களுக்கு முதற்தடவையாக இந்தப் பரீட்சை நடைபெறுகின்றது. தொழில் சார் கல்விக்கான ''கல்வி உளவியல்'' ''கல்வித் தத்துவம்'' கற்பித்தல் முறையும் மதிப்பீடும் ஆகிய மூன்று பாடங்களுக்கும் ஆசிரியர்கள் எல்லோரும் தோற்ற வேண்டும்.

மேற்படி பரீட்சை, பயிற்சி பெறும் பாடத்துக்கான விசேட துறைசார் நிலையில் பரீட்சை நடைபெறும்.

ஆங்கிலம், அழகியல் பாடத் துறைகளான நடனம், சங்கீதம், சித்திரம் மற்றும் மனையியல் பாடத்துறை ஆசிரியர்கள் வாய்மொழி பரீட்சை என்ற வகையில் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

18ஆம் திகதி ஆரம்பமாகி அதேவேளை பகுதி நேரமாக விடுமுறை நாள்களில் ஆசிரியர் பயிற்சியை மேற்கொள்வது சமகால கள்நிலைக்கும் பொருளாதார வள நிலைக்கும் ஏற்புடையதல்ல'' என ஆசிரியர் உதவியாளர் ஒன்றியம் எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்வதோடு தமது கோரிக்கையை வலியுறுத்தி மகஜர்களையும் சம்மந்தப்பட்டவர்களுக்கு சமர்ப்பித்திருந்தது.

யாழ். மாவட்ட ஆசிரியர் உதவியாளர்களின் கோரிக்கையை ஏற்று 2012ஆம், 2013ஆம் ஆண்டுகளில் நியமனம் பெற்ற பாடரீதியாக ஆசிரியர் கலாசாலைகளில் ஆசிரியர் பயிற்சி வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. (ஐ-11)

# இலங்கைத் தமிழ் அகதிகளை ஆஸி. நாடு கடத்தக்கூடாது

## சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து

கொழும்பு, ஜன.03

ஆஸ்திரேலியாவுக்கு அகதி அந்தஸ்துக் கோரிச் சென்றுள்ள இலங்கைத் தமிழர்களை அந்நாட்டு அரசு நாடு கடத்தக் கூடாது என்று சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு 'ஒஷியானிக் வைக்கிங்' கப்பல் மூலம் சென்ற இலங்கைத் தமிழர்கள் ஆஸ்திரேலிய நாட்டில் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும், பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர்களை ஏற்றுக்கொள்ள கனடாவும், அமெரிக்காவும் மறுத்ததையடுத்து ஆஸ்திரேலிய அரசு அவர்களை நாடு கடத்த முயற்சிக்கின்றது என்றும் மன்னிப்புச் சபை கூறியுள்ளது.

அகதிகள் நாடு கடத்தப்பட்டால் இலங்கையில் அவர்களுக்கு ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு ஆஸ்திரேலிய அரசே பொறுப்பேற்ற வேண்டும் என்றும்,

ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனப்படி அகதிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களை மீண்டும் அவர்களது நாட்டுக்குதிருப்பி அனுப்புவதை எற்றுக்கொள்ள முடியாது என்றும் சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த வருடம் 'சன் சீ கப்பல் மூலம் இலங்கையிலிருந்து 492 தமிழர்கள் கனடா சென்றடைந்தமை தெரிந்ததே. இதனையடுத்து ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகள் பேச்சு நடத்தி அகதிகள் வருகையைக் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டமையும் தெரிந்ததே.

இந்நிலையில் ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அகதி அந்தஸ்துக் கோரிச் செல்பவர்களின் எண்ணிக்கை கணிசமாக குறைவடைந்துள்ளது என அந்நாடுகளின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஓ-சி)

# ஆசியாவின் பெரும் அரிசி ஆலை இலங்கையில் அமைக்கத் திட்டம்

கொழும்பு, ஜன.3

ஆசியாவிலேயே மிகப் பெரிய அரிசி ஆலையை இலங்கையில் நிறுவவுள்ளதாகவும் அதன் பின் உள்நாட்டுத் தேவைக்கு மேலதிகமாக உள்ள அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இத்திட்டத்திற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பர்ணாந்து தெரிவித்தார்.

தற்சமயம் பல பிரபல முன்னணி தனியார் நிறுவனங்கள் துபாய், கனடா உள்ளிட்ட சில நாடுகளுக்கு அரிசியை ஏற்றுமதி செய்கின்றன. இந்த நாட்டு அரிசி தரத்தில் சிறந்ததாக இருப்பதால் வெளிநாடுகளில் அதற்கு நல்ல வரவேற்பு உள்ளது. வெளிநாடுகளில் வதியும் இலங்கயர்கள் இலங்கை அரிசியில் விருப்பம் உள்ளவர்களாக இருப்பதால் விற்பனை அதிகரிக்கின்றது.

30 வருடங்களின் பின் 2010ஆம் வருடத்தில் அரிசி விளைச்சல் உயர்மட்டத்தை எட்டியுள்ளது. யுத்தத்தின் பின் வடக்கு, கிழக்குப் பிராந்தியங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் நெல் விளைவிக் கப்படுவதால் வருங்காலத்தில் அரிசி உற்பத்தி மேலும் அதிகரிக்கும். அதே சமயம் அரிசிக்கு விதிக்கப்பட்டுள்ள நிர்ணய விலை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் இவ்வாறு அமைச்சர் ஜோன்ஸ்டன் பர்ணாந்து கூறினார். (ஐ-5)

# பிரதேச சபை செயலாளர்களாக இருவர் பதவியேற்பு

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றிய உள்ளூராட்சி உதவியாளர்கள் இருவர் பிரதேச சபைச் செயலாளர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

வலி. வடக்கு மல்லாகம் பிரதேசசபையில் திட்டமிடல் பிரிவு பொறுப்பதிகாரியாகக் கடைமையாற்றிய உள்ளூராட்சி உதவியாளர் ஆர்.அறிவரசன் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் செயலாளராகவும்-

வலி. மேற்கு சுழிபுரம் பிரதேச சபையில் திட்டமிடல் பிரிவு பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய உள்ளூராட்சி உதவியாளர் திருமதி சோமராஜ் ஜெயந்தா வலி.கிழக்கு பத்தார் பிரதேச சபையின் செயலாளராகவும் பதவி உயர்வு பெற்றுள்ளார். (ஓ-302)

# பருவப் பெயர்ச்சி மழை மாத இறுதிவரை தொடரும்

கொழும்பு, ஜன. 03

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பதினொரு மாவட்டங்களில் தென்கிழக்குப் பருவப்பெயர்ச்சியுடன் ஆரம்பமான கடும் மழை இம் மாதம் இறுதிவரை நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் சிரேஷ்ட வானிலை நிபுணர் லக்ஷ்மி லத்தீப் 'உதயனு'க்கு நேற்றுத் தெரிவித்தார்.

தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடைமழையினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் 74 தற்காலிக முகாம்களில் 5,444 குடும்பங்களைச் சேர்ந்த 20,181 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளம் காரணமாக 11 மாவட்டங்களில் 1,11,646 குடும்பங்களைச் சேர்ந்த 4,19,190 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கூறிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி 1,488 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன என்றும் 3,962 வீடுகள் ஓரளவு சேதமடைந்துள்ளன என்றும் தெரிவித்தார்.

அடைமழையால் மட்டக்களப்பு மாவட்டத்துக்கே அதிக பாதிப்பு என்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை, ஒழுங்கான வடிகாலமைப்பு வசதியில்லாமையாலேயே தாம் அதிக பாதிப்புகளை எதிர்நோக்க வேண்டியதாயிற்று என்று மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஓ-சி)

# குடு சமிந்த ஹெரோயின் விழுங்கி மரணம்

கொழும்பு,ஜன.3

ராஜகிரிய ஒபே சேகர புர பாலத்தின் அருகில் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட பிரபல போதைப் பொருள் வியாபாரியொருவர் பொலிசார் பிடியிலிருந்து தப்பியோடி தன்னிடமிருந்த 2 ஆயிரம் மில்லி கிராம் ஹெரோயின் பக்கற்றுகள் இரண்டை விழுங்கி தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்று நுகே கொட பொலிஸார் தெரிவித்தனர்.

ராஜகிரிய, ஒபேசேகரபுர, இராமோதய மாவத்தை வாசியான கொடிப்பிலி, ஆராச்சிலாகே, சமிந்த அல்லது குடுசமிந்த எனும் 32 வயது நபரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார். (ஓ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



*பலாலி வீதி ஆரியகுளத்தை வசிப்பிடமாகக் கொண்ட*

**ஆழ்வார் செல்லையா**

(சமூக சேவகர்)

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

**அப்பலோ வைத்திய நிலையம்**
இல.16, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

நிர்வாகியும்,
பணியாளர்களும்.

## கண்ணீர் அஞ்சலி



*யா/ அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் உப. அதிபராகக் கடமை புரியும்*
திருமதி சாவித்திரிதேவி யோகதாசன்
*அவர்களின் அன்புத் தந்தை*

அமரர் வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

*அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.*

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை

## கண்ணீர் அஞ்சலி



**அருட் சகோதரி**

**மேரி எவறில்டா அ.கா.**

*(ஓய்வுபெற்ற அதிபர், 06.01.1952 - 28.01.1970 யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி)*

எமது கல்லூரியின் அதிபராக (1952 - 1970) கடமையாற்றி இருந்து மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகவும், கல்லூரியின் வளர்ச்சிக்காகவும் அயராது அர்ப்பணிப்போடு சேவையாற்றிய அருட் சகோதரி மேரி எவறில்டா அ.கா அவர்களின் பிரிவுச் செய்தியறிந்து ஆழ்ந்த துயருறுகின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் திருகோணமலை புனித வளனார் கன்னியர் மடத்தில் இன்று (03.01.2011) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளன. அவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**மாணவர்கள், சிற்றூழியர்கள்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**பழைய மாணவர் சங்கம்**
**யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.**

## நிப்லோ பிளவு கலப்பை விற்பனைக்கு

*நிப்லோ பிளவு கலப்பை (ஒறிஜினல் யப்பான்), நிப்லோ (கொழும்பான்) ஆகியவை விற்பனைக்குண்டு.*

விற்பனை முகவர்:
திரு.மதி,
சிவன் வீதி, ஆவரங்கால்,
புத்தூர். 0770564672 (108394)

தொடர்பு:
**0777243395,**
**0717035363**

## தாயாரை மீட்டுத் தரும்படி வேண்டுகோள்



31.12.2010 அன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் யோகநாதன் புஸ்பாதேவி என்பவரை வெள்ளை வானில் வந்த ஆயுததாரிகள் வீட்டினுள் புகுந்து பலவந்தமாக தாயை இழக்க தாயைக் காப்பாற்றச் சென்ற பிள்ளைகளுக்கு ஆயுதங்களைக் காட்டி அவர்களை அச்சுறுத்திவிட்டு பலவந்தமாக தாயை வெள்ளை வானில் கடத்திச் சென்றனர். கடத்தப்பட்ட தாயாரை மீட்டுத்தரும்படி பிள்ளைகள் கலங்கி நிற்கின்றனர்.

*மணியம் பாடசாலை வீதி,*
*அல்வாய் கிழக்கு,*
*அல்வாய்.* (சி-574197)

*கடத்தப்பட்ட தாயாரின் பிள்ளைகள்:*
**வினோதா, யசோதா,**
**விஜித்திரா.**

## வட்டக்கச்சியில் இன்று ஜெயந்தி விழா

வட்டக்கச்சி,ஜன.03

வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 2.00 மணிக்கு ஆஞ்சநேயர் ஜெயந்தி விழா ஆரம்பமாகி நடைபெறும்.

இராம நாம ஜெபம், அபிஷேக ஆராதனைகள் விசேட பூசை வழிபாடு, சமயச் சொற்பொழிவு, ஸ்ரீ ராமர், ஆஞ்சநேயர் உள்வீதி வலம்வருதல் போன்ற சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

(450)

## சிவபூமி அறக்கட்டளை நன்றி கூறுகிறது

எமது அறக்கட்டளைக்கு உதவிய அன்பர்கள், எமது உறவுகள் ஆகியோருக்கு எமது நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**சிவபூமி சிறுவர் மனவளர்ச்சிப் பாடசாலை,**
**கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.**

புதிய ஆண்டுக்கான அனுமதிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 5-15 வயதுக்கு உட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**சிவபூமி முதியோர் இல்லம்,**
**தொல்புரம், சுழிபுரம்.**

தற்சமயம் 51 முதியோர் இந்த இல்லத்தில் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர்.

ஆதரவற்ற உறவினர்கள் எவரும் இன்றி வாழும் முதிய வர்கள் விண்ணப்பங்களை அனுப்பலாம். எவ்வித உதவியும் இன்றி அல்லற்படும் 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர் இந்த இல்லத்தில் தங்குவதற்கு விவரங்கள் யாவும் உறுதிப் படுத்தப்பட்ட பின்னர் தகுதியானவர்களாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

சிவபூமி முதியோர் இல்லம்,
தொல்புரம், சுழிபுரம்.
2250085. (சி/574188)

நிர்வாக சபை,
சிவபூமி அறக்கட்டளை,
கோண்டாவில்.
0212227938

## சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) விசேட பொதுச்சபைக் கூட்ட அறிவித்தல்

எதிர்வரும் 09.01.2011ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தலைவர் திரு.செ.குமாரசிங்கம் அவர்களின் தலைமையில் விசேட பொதுச்சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது. எனவே சகல பொதுச்சபை உறுப்பினர்களையும் தவறாது சமுகம் தருமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

தலைவர் : திரு.செ.குமாரசிங்கம் (ச/நீ) அவர்கள்
காலம் : 09.01.2011ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு
இடம் : சங்க தலைமைக் காரியாலயம்.
குறிப்பு: சகல பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் நிகழ்ச்சி நிரல் அனுப்பிவைக்கப்படும்.

தலைவர். (சி/574179) செயலாளர்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 05.01.2011 விநியோகிக்கப்படும்.

* ராஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

தொ.பே: 0776090926,0212222867

## ஞானஉதய அக்கடமி சங்கத்தானை, சாவகச்சேரி

யாழில் முன்னணி பெறுபேறுகளை என்றும் அள்ளி வழங்கும் ஆசிரியர் குழுவால் ஒன்றிணைந்த சேவையில்

**A/L 2013 கலை, வர்த்தகப் பிரிவு பிரிவுகள் ஆரம்பம்**

காலம் : 2011-01-05 புதன் காலை 9.00 மணி

## நவாலி தெற்கில் HSCMF முன்பள்ளி ஆரம்பம்

2011 புதிய ஆண்டில் நவாலி தெற்கில் ஹேமலதா முன்பள்ளி பாடசாலையில் மூன்று வயது முதல் 5 வயது வரை மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். பதிவுகளை இன்று (2[illegible].01.2011) [illegible]

தலைவர் [illegible] HSCMF

## ஓய்வு நிலை அதிபர் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களின் பவளவிழா



*காலம் : 08.01.2011 சனிக்கிழமை பிற்பகல் 3 மணி*
*இடம் : கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில்.*

*யாழ். இந்துக் கல்லூரிகளின் மூலம் இலங்கையில் மட்டுமல்லாது உலக நாடுகளிலும் மாணவர்களை உருவாக்கிக் கல்விக்கு வித்திட்ட கல்வி உலகின் வைர ஏணியாய் விளங்கும் பண்பாளனை வாழ்த்துகின்றோம்.*

**இரா. அருட்செல்வம்,**
**A.T.C கல்வி நிலையம்,**
*இணுவில்.* (சி/574133)

## மின் இணைப்பாளர் பதவி

*29.12.2010ஆம் திகதி உதயன் பத்திரிகையில் பிரசுரித்த விளம்பரத்திற்கேற்ப விண்ணப்பிப்பவர்கள் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த திருமணமான ஆண்கள் மட்டும் நா.கந்தையா (ஓய்வுபெற்ற மின் இணைப்பாளர் )மருதங்குளம் வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி என்ற முகவரிக்கு விண்ணப்பம் செய்யவும்.* (சி/574199)

## கண்ணீர் அஞ்சலி



*திரு. சூரிப்பிள்ளை பாலயோகன் B.Sc.*
(முன்னாள் ஆசிரியர், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)

எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும், கல்லூரியின் முன்னாள் ஆசிரியை அமரர் திருமதி சீதாலக்சுமியின் அன்புக் கணவருமாகிய

**திரு. சூ.பாலயோகன்**

அவர்களின் மறைவையிட்டு எமது கல்லூரிச் சமூகம் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றது. அவர்தம் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கமும் நம்பிக்கை நிதியமும்,
கொக்குவில் இந்துக்கல்லூரி

(சி/574186)

## கண்ணீர் அஞ்சலி



*எமது சங்க உறுப்பினரான*
**கலாநிதி J.P.ஜெயதேவன்**
அவர்களின் சகோதரன்

ஜெயரட்ணம் சாமுவேல் ஜெயமோகன்

காலமான செய்தி கேட்டு யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞான பீட விரிவுரையாளர்கள் சார்பாக எமது கண்ணீர் அஞ்சலியையும் அவரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**விஞ்ஞான பீட ஆசிரியர் சங்கம்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

## மரண அறிவித்தல்

### திருமதி ஆறுமுகம் பாக்கியம்



வித்தகபுரம், தெல்லிப்பழையை நிரந்தர முகவரியாகவும் குழமங்கால், மல்லாகத்தைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பாக்கியம் நேற்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் குஞ்சு, பாமா, இராதா, செல்லம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பவா, றஞ்சி, தேவன், பத்மினிதேவி, லீலாதேவி, குமார் (ஜேர்மனி), காலஞ்சென்ற நிசார் ஆகியோரின் அன்புத் தாயும் சிவலிங்கம், தேவராசா, வசந்தாதேவி ஆகியோரின் அன்பு மாமியும் பிரதீபன், தேனுஷா, விந்தன், குகன், கஜிபன், ஜெனு, தனுசியா, மயூரி, கோபி, அபிராஜினி, கிருசாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கபிசனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது தற்காலிக வசிப்பிடத்தில் இன்று (03.01.2011) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் தும்புத்தொழிற்சாலையடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குழமங்கால்,*
*மல்லாகம்.* (108404)

*தகவல் :*
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஐ.நா. செயலாளரின் தாமதம் புலப்படுத்துவது எதனை?.....

இலங்கையில் போர்க்குற்றங்கள் இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு ஐ.நாவின் செயலாளர் நாயகம் பான் கி-மூன் நியமித்துள்ள, அமைத்துள்ள நிபுணர்குழுவின் இலங்கை விஜயம் குறித்தும், இங்கு அதன் செயற்பாடுகள் எந்த வகை சார்ந்தவையாக இருக்கும் என்பதிலும், மாறுபாடான தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

முன்னர் வெளிப்பட்ட தகவல்களில் இருந்து- இலங்கை அரசாங்கம் தெரிவித்ததன் பிரகாரம்-நிபுணர் குழு கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவுடன் பேச்சு நடத்தும் என்பதே குழுவின் விஜயத்தின் போதான செயற்பாடாக இருக்குமெனக் கொள்ளப்பட்டது; அனுமானிக்கப்பட்டது.

அப்போதும் கூட, ஐ.நா. நிபுணர்குழுவின் இலங்கை விஜயம் குறித்து, டிசெம்பர் மாதம் பதின்னேழாம் திகதியன்று செயலாளர் நாயகம் அறிவித்திருந்த போதிலும், இலங்கை அரசாங்கத்துடனோ, வெளிநாட்டு அமைச்சர் என்ற வகையில் தம்முடனோ அது சம்பந்தமாக எந்தவித பேச்சும் நடத்தவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அவநம்பிக்கை தெரிவித்திருந்தார்.

அது ஒருபுறம் இருக்க, அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல, ஐ.நா. நிபுணர் குழு நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க மட்டுமே அரசாங்கம் விசா வழங்கும் என்று ''கெப்போர்'' பேசினார்.

இவற்றுக்கு மத்தியில், ஐ.நா. நிபுணர் குழு, இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழுவை வெளிநாடு ஒன்றிலும் சந்திக்கக்கூடும் என்று செயலாளர் நாயகத்தின் தகவல் பிரிவினர் ஒரு சந்தர்ப்பத்தில், தெரிவித்தனர்.

மொத்தத்தில், ஐ.நாவின் செயலாளர் நாயகத்துக்கு இலங்கை அரசு மீதான போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, இலங்கை அரசின் நல்லிணக்க ஆணைக்குழுவை சந்தித்து பேசும் என்பது வெறும் செய்தியாக மட்டுமே வாதப் பிரதிவாதங்களை தோற்றுவித்திருக்கிறது.

ஐ.நா. நிபுணர்குழு இலங்கைக்கு வரக்கூடாது, நல்லிணக்க ஆணைக்குழுவைச் சந்திக்கக்கூடாது, அங்கு அளிக்கப்பட்ட சாட்சியங்களைப் பெறக்கூடாது என்பன போன்ற எதிர்ப்பு அலைகள் ஆளும் தரப்புகளிடமிருந்து ஆரம்பத்திலேயே எழுந்திருந்தன.

நிபுணர் குழு இலங்கை வருவதற்கான சம்மதத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துவிட்டார் என்றும்,-

இலங்கையில் போர் முடிந்த பின்னர் ஐ.நா. செயலாளர் நாயகமும் ஜனாதிபதியும் ஒப்புக்கொண்ட ஓர் அடிப்படையிலேயே, அதன் நீட்சியாகவே நல்லிணக்க ஆணைக்குழுவும் சரி, நிபுணர் குழுவும் சரி நியமிக்கப்பட்டன என்பதும் சர்வதேச மட்டத்திலும் ஐ.நா. மட்டத்திலும் பேசு பொருளாக இருந்தது.

ஆனால், இப்போது வரும் தகவல்கள், ஐ.நா. நிபுணர் குழு, இலங்கை அரசின் நல்லிணக்க ஆணைக் குழுவைச் சந்திப்பது குறித்த முடிவு பூர்வாங்கமானது மட்டுமே; இறுதியானது அல்ல என்ற தோற்றத்தைத் தருகிறது.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல முன்னர் ஒரு தடவை கூறியிருந்தது போன்று, நல்லிணக்க ஆணைக்குழுவைச் சந்திப்பதற்கு மட்டுமே நிபுணர் குழு உறுப்பினர்களுக்கு இலங்கைக்கு வருவதற்கு விசா வழங்கப்படும் என்ற அரசின் நிலைப்பாடு, ஐ.நா. செயலாளர் அலுவலக வட்டாரங்களில் சந்தேகத்தையும் தடுமாற்றத்தையும் தந்திருக்கவும் கூடும்.

எங்கள் விடயத்தை (விவகாரத்தை) நாங்களே கையாள்வோம், அதில் ஐ.நா. நிபுணர் குழுவாக இருந்தால் என்ன வேறு எந்த உலக அமைப்பாக இருந்தால் என்ன தலையிட இடமளிக்கக்கூடாது என்று வீம்பு பேசும் அமைச்சர் வீரவன்ஸ போன்ற இலங்கைத் தரப்புகளுக்குச் சார்பாக விடயம் நடத்தேறுமோ என்ற சந்தேகமும் சிலதரப்புகளில் இப்போது நிலவுகிறது.

நிபுணர் குழு, இலங்கை நல்லிணக்க ஆணைக் குழுவை சந்திப்பதோடு மட்டுமன்றி நிற்காது அதன் பணி விஸ்தரமானதாக அமையுமென்று ஒருபுறத்திலும்-

இருதரப்புகளுக்குமிடையிலான சந்திப்பு வேறு நாடு ஒன்றில் நிகழக்கூடும் என்பது மறுபுறத்திலுமாக - தகவல்கள் வெளியாகிக்கொண்டிருப்பது ஐ.நா. தரப்பின் குழம்பிய நிலையைப் புலப்படுத்துவதாகவே உள்ளது. ஐ.நா. செயலாளர் தரப்பின் இந்தத் தாமதம் இது தொடர்பில் அதன் தயக்கத்தைக் காட்டுவதாகவும் கொள்ள இடமுண்டு.

ஐ.நா. செயலாளர் நாயகம் தரப்பு இவ்விடயத்தில் காட்டும் அசமந்தப் போக்கு ஆரோக்கியமானதாக இல்லை என்பதும், அது பாதிக்கப்பட்டவர்கள் தரப்புக்கு நியாயம் செய்வதற்குப் பின்னிற்கிறதோ என்ற சந்தேகத்தையும் உண்டாக்குகிறது.

# ரணிலை ஓரம்கட்ட கடும் முயற்சி சஜித் குழுவினர் களத்தில் குதிப்பு

நேற்று 02.01.2011 அன்று சண்டே ரைம்ஸ் பத்திரிகை எழுதியிருந்த அரசியல் விமரிசனத்திலிருந்து ஒருபகுதி

இந்தியாவுக்கு மேலும் ஒரு தடவை விஜயம் மேற்கொண்டுவிட்டு ஐ.தே. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த புதன் கிழமை நாடு திரும்பினார். அவரைக் கட்சியின் உயர் பதவியிலிருந்து தூக்கி எறிவதற்கான முயற்சிகள் கொழும்பில் நடைபெற்றுக் கொண்டிருந்த போது அவர் புதுடில்லியில் இருந்தார்.

அங்கு அவர் தமது கட்சி எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தவிர்ந்த பல்வேறு விடயங்கள் குறித்தும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, உள்துறை அமைச்சர் பி.சிதம்பரம் ஆகியவர்களுடன் ஆலோசனைகள் நடத்தியிருந்தார்.

அவர்வந்து சேர்ந்த சில மணிநேரங்களுக்குள் கட்சியின் முக்கிய தலைவர் கருஜயசூரியவுக்கும் அவருக்குமிடையில் கேம்பிரிட்ஜ் ரெரெஸிலுள்ள எதிர்க் கட்சித்தலைவர் அலுவலகத்தில் முக்கிய கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. ஐ.தே.க.வில் உருவாகியுள்ள அதிமுக்கிய பிரச்சினை ஒன்று தொடர்பாக இந்த 20 நிமிட சந்திப்பு இடம்பெற்றதாகத் தெரிகின்றது.

ஹம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஒருகுழு கட்சியின் பிரதித் தலைவர் என்ற வகையில் தம்மைச் சந்தித்து தெரிவித்தாகச் சில தகவல்களை கருஜயசூரிய விக்கிரம்சிங்கவிடம் தெரிவித்தார்.

விக்கிரமசிங்கவை கௌரவமான முறையில் கட்சித் தலைமைப் பதவியிலிருந்து விலகிக்கொள்ளும்படி கூறுமாறு சஜித் குழுவினர் தெரிவித்ததாக ஜயசூரிய கூறினார். அவ்வாறு செய்யத் தவறினால் ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் நடைபெறவிருக்கும் கட்சித் தலைவருக்கான தேர்தலில் அவரை எதிர்த்துப் பிரேமதாஸ போட்டியிடப் போவதாகத் தெரிவித்ததாகவும் ஜயசூரிய கூறினார். மேலும் அவர்களுடனான சந்திப்பில் இடம்பெற்றவைகளையே விசுவாசத்துடன் தாம் தம் தலைவரிடம் தெரிவிப்பதாகவும் ஜெசூரிய கூறினார். தலைவர் என்ற முறையில் விக்கிரமசிங்க சரியான முடிவை எடுப்பார் என்ற முறையிலேயே இவைகளை அவரிடம் கூறியதாகவும் கட்சி எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கிடையில் அது பிளவுபட்டுப் போவதைத்தாம் விரும்பவில்லை என்றும் ஜயசூரிய தெரிவித்தார்.

என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதைத் தாம் நன்றாக அறிவார் என்றும் கட்சியின் உயர் மட்டத் தலைவர்களுடன் இதுபற்றி ஆராய்வாரென்றும் விக்கிரமசிங்க பதில் அளித்துள்ளார்

மேலும் பிரதித் தலைவர் ஜயசூரிய கட்சியின் அதிருப்திக் குழுவொன்று தாம் கருதுபவர்களுடன் சந்திப்பொன்றை நிகழ்த்தியிருப்பது விக்கிரமசிங்கவுக்கு திருப்தியாக இல்லை. இதில் அதிருப்தியும் கோபமும் அடைந்திருப்பதாக அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

பழைய வருடம் கழிந்து புதுவருடம் உதயமான காலகட்டத்தில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் பிரிவினருக்கும் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கும் பிரிவினருக்குமிடையிலான மோதல்கள் கூர்மைபெற்றதுடன் பகிரங்கமாகவும் தொடங்கின. கட்சியின் புதிய தலைவரைத் தெரிவுசெய்யும் 78பேர் கொண்ட தேர்தல் குழுவில் யாருக்கு அதிக ஆதரவு இருக்கிறது என்பதே இப்போது ஏற்பட்டுள்ள பிரச்சினை. இக்குழு கட்சியின் செயற்குழு மற்றும் ஐ.தே.க. வின் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கிறது.

பிரேமதாசாவுக்கு விசுவாசமானவர்கள் தங்களுக்கே தேர்தல் குழுவில் பெரும்பான்மை ஆதரவு இருப்பதாகத் தெரித்துள்ளார்கள். ஆனால் விக்கிரமசிங்க ஆதரவு குழுவினரோ தங்களுக்கே ஆதரவு பெரும்பான்மை யாக உள்ளது என்கிறார்கள்.

விக்கிரமசிங்க சவால்களை எதிர்கொண்டு தேர்தலுக்கான போட்டியில் நிற்பார் என்கிறார்கள் அவருடைய ஆதரவாளர்கள்.

வெற்றியோ தோல்வியோ கட்சியின் புதிய யாப்பின் பிரகாரம் தேர்தல் நடக்குமாயின் விக்கிரமசிங்க போட்டியிடுவது நிச்சயம் என்று தோன்றுகின்றது.

விக்கிரமசிங்க வெற்றி பெறுவாரானால் கட்சியின் உயர் பீடத்தில் அவர் அமர்வது ஒருபுறமிருக்க சஜித் குழுவினர் ஓரங்கட்டப்பட்டு விடுவார்கள். விக்கிரமசிங்க தோல்வியுறுவாரானால் கட்சியின் தலைவர் பதவியை மட்டுமன்றி எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் அவர் இழக்கநேரும்.

விக்கிரமசிங்க சிரேஷ்ட தலைவர் என்ற பதவியை ஏற்க மறுப்பாரானால் தோல்வியுறும் பட்சத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் அவருக்கு வாய்ப்பது சாத்தியமில்லை என்கிறார்கள் சஜித் குழுவைச் சேர்ந்தவர்கள். இவை அனைத்தும் இவ்வருடம் ஏப்ரல் மாதத்திற்குள் நடந்து முடிவடையவேண்டியது முக்கியமாகும்.

கட்சியின் புதிய யாப்பு ஏற்கனவே அமுலுக்குவந்துள்ள நிலையில் தலைவர் உட்பட கட்சித்தலைவர்களுக்கான தேர்தல்கள் 120 நாள்களுக்குள் நடந்து முடியவேண்டும் என்பது யாப்பின் முக்கிய பிரிவுகளில் ஒன்றாகும்.

எனவேதான் 2011 ஆம் ஆண்டு ஐ.தே.கட்சிக்கு யார் தலைவராகப் வரப் போகி றார் என்பதில் நிச்சயமற்ற ஆண்டாக மலர்ந்திருக்கிறது. தேர்தல் குழு எப்போது கூடப்போகிறது என்பது பற்றி இன்னமும் நிச்சயிக்கப்படவில்லை. கட்சி எந்தத்திசையில் நகரப்போகிறது என்பதும் தெரியாமல் இருக்கிறது.

கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இப்போது பிரிட்டனில் இருக்கிறார். அவர் வரவை எதிர்பார்த்து காத்திருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க. அந்த நிகழ்வு இந்த மாதம் முற்பகுதியிலேயே இடம்பெறக்கூடும் என்று முன்பு எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் புதிதாகத் தோன்றியுள்ள நிலைமை காரணமாக அது இன்னும் தாமதமாகுமா என்பது இனிமேல்தான் தெரியவரவேண்டும். எதுவானாலும் வரும் நாள்களில் இருதரப்பினரும் தமது வேட்பாளர்களுக்காகக் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் தீவிர பிரசாரத்தில் ஈடுபடுவார்கள் என்பது நிச்சயமாகியுள்ளது. இரு தினங்களுக்கு முன்னர் சஜித் ஆதரவாளர்கள் புதுவருடப் பிறப்பை பத்திரிகையாளர்களை அழைத்து பால் சோறு வழங்கித் தமது பலத்தை வெளிப்படுத்த முயன்றிருந்தார்கள். ஹோட்டல் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரும் இப்போது சஜித் ஆதரவாளர்க ளின் முக்கிய பொதுப்பணியாளருமான போதிரணசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

வீட்டின் கூரையில் ஒலிபரப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருந்தன. கூட்டத்தில் சுமார் 200 பேர்வரை பிரசன்னமாய் இருந்தனர். தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜயலத் ஜயவர்த்தன, கயந்த கருணாதிலக்க, தயா சிறி ஜயசேகர மற்றும் றோசிசேனாநாயக்க போன்றோரும் நியமனப் பிரதி நிதிகளான எரான் விக்கிரமரட்ன, மற்றும் ஹர்ஷா டிசில்வா ஆகியவர்களும் கலந்துகொண்டிருந்தார்கள். க்ட்சித்தலைமையை எதிர்த்து நின்ற போதிலும் கட் சிக்குள் ஒற்றுமை நிலவவேண்டியது தொடர்பாகவும் அரசாங்கத்தை எதிர்த்துச் செயல்படவேண்டியிருப்பது தொடர்பாகவும் சஜித் பிரேமதாஸா உரை நிகழ்த்தினார்.

### ஐ.தே.கவுக்கு அதிர்ச்சிதரும் அறிவிப்பு

இந்தச் சூழ் நிலையில் ஐக்கிய தேசிய கட்சிக்கு அதிர்ச்சி தரும் வகையில் அரசாங்கம் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது. அதுதான் ஜனவரி 10 ஆம் திகதியுடன் சகல உள்ளூராட்சி மன்றங்களும் கலைக்கப்படும் என்பதாகும் புதிய தேர்தலுக்கான திகதி அதற்கு அடுத்தாற்போல் அறிவிக்கப்படவிருக்கின்றது. இந்தத் தேர்தலுக்கு முன்னராகக் புதிய தேர்தல் சட்டங்கள் குறித்து ஐ.தே.க.வுடன் அரசு கலந்துரையாடல்களை ஆரம்பித்திருந்தது. என்றாலும் அக்கட்சியில் உள் பூசல் ஏற்பட்டிருப்பதை அரசு பயன்படுத்திக்கொள்ள விரும்புவது போல் தெரிகின்றது. உள்ளூராட்சித் தேர்தல்கள் ஏற்கனவே அமுலில் உள்ள விகிதாசார முறை யிலேயே நடைபெறவிருக்கின் றன. முன்பு கூறப்பட்டதுபோல் விகிதாசாரம் மற்றும் பழைய வட்டார முறை ஆகிய கலப்பு முறையில் நடைபெறமாட்டாது.

தொகுப்பு: **கோகுலன்**

உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறும் சமயத்தில் விக்கிரமசிங்கவே ஐ.தே.க. தலைவராக நீடிப்பாரானால் இத்தேர்தலில் போட்டியிட அவரது ஆதாரவாளர்களே வேட்பாளர்களாகப் போட்டியிடும் வாய்ப்பு இருக்கிறது. உயர்ந்து கொண்டுபோகும் வாழ்க்கைச் செலவு, அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை யேற்றம் மற்றும் மின்சாரக்கட்டண உயர்வு போன்ற வைகள் ஐ.தே. கட்சியின் பிரசாரத்துக்குச் சாதகமாக இருக்கின்றன.அக்கட்சி ஒற்று மையாக இருக்குமானால் தேர்தல் வாய்ப்புக்கள் அதற்குச் சாதகமா கவே இருக்கலாம்.

(26 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கை சீர்குலைக்க அரசு சாரா நிறுவனங்கள் சதியாம்

## நாளை

| | | |
|---|---|---|
| மார்கழி 20 | | 04.01.2011 |
| | | செவ்வாய்க்கிழமை |
| திதி: | : | அமாவாசை |
| | | பி.ப 3.06 |
| நட்சத்திரம் | : | பூராடம் |
| | | பி.இ.04.24 வரை |
| சுபநேரம் | : | 11.01 - 12.31 வரை |
| ராகுகாலம் | : | 03.31 - 05.01 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி குட்டித்தம்பி- கண்மணி

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குட்டித்தம்பி கண்மணி 01.01.2011 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனியர்- பொன்னு தம்பதியரின் அன்புமகளும் , காலஞ்சென்ற குட்டித்தம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னவி- சிதம்பரம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, செல்லையா, இராசையா மற்றும் அரியகுட்டி, சிவமயம், அன்னம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் நவரத்தினம் (கனடா), இராசலட்சுமி, இராமசாமி (வெள்ளை- ஜேர்மனி), கமலா, பாக்கியலீலா, தர்மவதி (சுவிஸ்), இரத்தினசிங்கம் (ஜேர்மனி), சரஸ்வதி (வவா- ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும், பிள்ளையம்மா (கொழும்பு), பரமேஸ்வரி (கனடா), பூபாலு, மகேஸ்வரி (ஜேர்மனி), காலஞ்சென்ற நல்லையா மற்றும் சற்குணராசா, ரோகினி (ஜேர்மனி), தவராசா (சுவிஸ்), சுகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், றசீவி (U.K), றஜனி (இத்தாலி), ரங்கன் (U.K), றமா (பிரான்ஸ்), ஸ்ராலின் (கனடா), லெனின் (கனடா), றொஸ்கி (கனடா), சாமினி (கனடா), பரதன் (அவுஸ்திரேலியா), கோவன் (சுவிஸ்), ஜெனோ (U.K), ஜபிதாஸ் (சொக்கன்- ஜேர்மனி), கோகிலா (அவுஸ்திரேலியா), றொஷானி (ஜேர்மனி), வரதரூபன் (கண்ணன்- ஜேர்மனி), றமேஸ் (சுவிஸ்), றஜிதா (வவுனியா), ரவி (கனடா), றதீனா, மயூரன் (U.K) நிரோசன் (பிரான்ஸ்), அபர்ணா (சுவிஸ்), சோபனா (சுவிஸ்), றமணன் (சுவிஸ்), நிரோசினி (ஜேர்மனி), நித்தியா (ஜேர்மனி), ரஜீவன் (ஜேர்மனி), சுதர்மிலா (ஜேர்மனி), மதுமிதா (ஜேர்மனி), சீனு (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பாணுஜா, வஸ்மினா (U.K), ஜனோஷன், லுக்ஷனா, அனோஜன் (U.K), கரிஸ்ராகவன் (சுவிஸ்), றித்திகன் (சுவிஸ்), அபினயா (அவுஸ்திரேலியா), அக்ஷயா (அவுஸ்திரேலியா), கேஷி (கனடா), கரிஸ் (கனடா), நெலிஷா (கனடா), லெஷான் (கனடா), நேடன் (கனடா), ஜனில் (ஜேர்மனி), ஷைந்திகன் (சுவிஸ்), பிரியங்கா (அவுஸ்திரேலியா), ஆந்திரியாஸ் (சுவிஸ்), சரீனா (சுவிஸ்), மியூசிகா (இத்தாலி), சிகானா (U.K), சுஜன் (ஜேர்மனி), சுகிர் (ஜேர்மனி), லக்ஷிகா (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2011) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம் பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

தகவல்:
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தாண்டு தினத்தன்று இரவு

# சண்டிலிப்பாயில் தனித்திருந்த பெண் குத்தப்பட்டு நகைகள் கொள்ளை

சண்டிலிப்பாய்,ஜன.3

நள்ளிரவு நேரம் பார்த்து தனிமையில் வாழ்ந்து வந்த குடும்பப்பெண்ணின் வீட்டுக்குச் சென்ற கொள்ளையர் அந்தப் பெண்ணின் கழுத்தைக் கத்தியால் பதம் பார்த்துவிட்டு அவர் அணிந்திருந்த சங்கிலி, காப்பு உட்படப் பல ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்தக் கொள்ளை பற்றி அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற பொலிஸார், ஆபத்தான நிலையில் இரத்த வெள்ளத்தில் கிடந்த பெண்ணை உடனடியாக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதித்துள்ளனர்.

இந்தத் துணிகரமான சம்பவம் மானிப்பாய் பொலிஸ் பிரிவிலுள்ள சங்குவேலி தெற்கில் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கொள்ளை பற்றிக் கூறப்படுவதாவது;

பிரஸ்தாப பெண்ணின் கணவர் பல வருடங்களுக்கு முன் காணாமல் போனதைத் தொடர்ந்து இவர் தனது வீட்டில் தனிமையாக வாழ்ந்து வந்தார்.

புதுவருடத்தினமான சனிக்கிழமை நள்ளிரவு இந்தப் பெண்ணின் வீட்டுக்குச் சென்ற கொள்ளையர் தனிமையில் படுத்திருந்த இவரின் கழுத்தில் கத்தியால் குத்திவிட்டு, அவர் அணிந்திருந்த சங்கிலி, காப்பு உட்படப் பல ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

காயத்துக்குள்ளான பெண் தனது நிலை குறித்துத் தெரிவிப்பதற்காக அடுத்த வீட்டுக்குச் சென்றபோதும் அங்கு எவரும் உதவிக்கு முன்வராததினால் மீண்டும் தனது வீட்டுக்கு வந்து படுத்துவிட்டாராம். இது பற்றி அயலவர் மானிப்பாய்ப் பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து அங்கு விரைந்து சென்ற பொலிஸார், இரத்த வெள்ளத்தில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த பெண்ணை உடனடியாக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதித்துள்ளனர்.

இந்தக் கொள்ளை பற்றி விசாரணையில் ஈடுபட்டுள்ள பொலிஸார் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து பெண்ணைக் குத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட கத்தியையும் மீட்டுள்ளனர்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்பும் நள்ளிரவு நேரம் சங்குவேலியிலுள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டிற்குச் சென்ற கொள்ளையர்கள் ஆயுதங்களைக் காட்டிப் பயமுறுத்தி 5 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளை அடித்துச் சென்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தங்கத்தின் பெறுமதி நாளுக்கு நாள் அதிகரித்து, தற்பொழுது 45 ஆயிரம் ரூபாவைத் தாண்டி விட்டது. தங்கத்தின் விலை அதிகரிப்பே தற்பொழுது இடம்பெறும் கொள்ளைகளுக்குக் காரணம் என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள். (ஜ-115)

மக்கள் சேவை....




ஆரம்பம்:கொடிகாமத்திலிருந்து சாவகச்சேரி, தனங்களப்பு, நாவற்குழி ஊடாக யாழ்ப்பாணத்திற்கான தனியார் சிற்றூர்திச் சேவை நேற்று முன்தினம் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 532 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் டிராவீன் தொட்டம் பிட்டிய தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் உட்பட பொதுமக்கள் ஆகியோர் ஆரம்ப சேவையில் பயணித்த போது கொடியசைத்து சேவையை ஆரம்பித்து வைக்கின்றனர். (201-207)

# புதிய ஆண்டுக்கான கற்றல் செயற்பாடு இன்று பாடசாலைகளில் ஆரம்பம்

வலி.வடக்கு,ஜன.3

அரச பாடசாலைகள் 2011 ஆம் ஆண்டுக்காக இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன. கடந்த ஆண்டு மாணவர்களின் வகுப்பேற்றப்பரீட்சையைத் தொடர்ந்து விடுமுறை விட்ட பாடசாலைகள் 2011 ஆம் ஆண்டுக்கான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்காக மீண்டும் இன்று ஆரம்பிக்கின்றன.

நீண்டகாலமாக ஆசிரியர்களின் இடமாற்றம் வடமாகாணத்தில் இழுபறியாக இருந்த நிலையில் குறிப்பிட்டளவு ஆசிரியர்கள் உள்ளகமாகவும் மாவட்ட ரீதியாகவும் இடமாற்றம் பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில் வடமாகாணப் பாடசாலைகள் புதிய ஆண்டு கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ளவுள்ளன.

இதேவேளை க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை வினாத்தாள்கள் திருத்தும் பணிகள் நடைபெறும் பாடசாலைகளான வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் என்பன எதிர்வரும் 10ஆம் திகதியே தமது செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

# மகேஸ்வரனின் நினைவு நிகழ்வுகள்

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம், சைவ கலைப் பண்பாட்டுப் பேரவை ஆகியவற்றின் ஏற்பாட்டில் ஐ.தே.கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் தியாகராசா மகேஸ்வரனின் 3 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்றது. நிகழ்வில் ஆசிரியர் க.கைலைநாதன், டாக்டர் கதிரவேள்பிள்ளை, சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் ஆகியோர் உரை நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்ட முதியவர்களுக்கு அமரர் மகேஸ்வரனின் ஞாபகார்த்தமாகப் உடுபுடைவைகள் வழங்கப்பட்டன.(201-236)

# யாழ்.மத்திய கல்லூரி 10 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.3

யாழ்.மத்திய கல்லூரி க.பொ.த. (சா/த) பரீட்சையின் விடைத்தாள் மதீப்பீட்டு நிலையமாகச் செயற்படுவதனால் எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் எனப் பாடசாலை உதவி அதிபர் எஸ். பத்மநாதன் அறிவித்துள்ளார்.

இன்று திங்கட்கிழமை கல்லூரியின் ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கல்லூரிக்கு சமுகமளிக்குமாறும் அவர் அறிவித்துள்ளார். (ற)




# குழந்தைகள், மகப்பேற்று வைத்திய நிபுணர்களை சாவகச்சேரி வைத்தியசாலையில் நியமிக்கக் கோரிக்கை

தென்மராட்சி,ஜன.3

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குக் குழந்தைகள் வைத்திய நிபுணர்,மகப்பேற்று வைத்திய நிபுணர் ஆகியோரை நியமிக்குமாறு தென்மராட்சிப் பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை தென்மராட்சிப் பிரதேசம் மட்டுமல்ல பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு, பூநகரி போன்ற பிரதேசங்களின் மக்களுக்குப் பெரிய வைத்தியசாலையாகத் திகழ்கிறது. இந்த வைத்தியசாலையில் உரிய வைத்திய நிபுணர்கள் கடமையாற்றும் பட்சத்தில் இப்பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் யாழ்.போதனா வைத்தியசாலையை நாடும் அவசியம் பெருமளவில் குறைந்துவிடும்.

மேலும் இந்த வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் ஏறக்குறைய 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட குழந்தைகள் வருடாந்தம் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவற்றில் நூற்றுக்கணக்கான குழந்தைகள் விடுதிகளில் அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களில் பெரும்பாலோனோர் யாழ். போதனா வைத்தியசாலைக்கும் கொண்டு செல்லப்படுகின்றனர்.

இங்கு குழந்தைகள் பிரிவுக்கென வசதிகளுடான தனியான இரு மாடி விடுதிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. விடுதிகளில் அனுமதிக்கப்படும் குழந்தைகள் உரிய மருத்துவ அதிகாரி இன்மையால் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லவேண்டிய நிலை ஏற்படுகிறது.

எனவே இந்த வைத்தியசாலைக்கு நிரந்தர குழந்தைகள் வைத்திய நிபுணர் ஒருவர் நியமிக்கப்படும் பட்சத்தில் அனைத்து மக்களுக்கும் ஏற்படும் மேலதிக செலவுகளைக் குறைக்க முடியும். அத்துடன் வசதிகள் கொண்ட பிரசவ விடுதி உள்ள போதிலும் மகப்பேற்று வைத்திய நிபுணர் இல்லாதது பெரும் குறையாக உள்ளது.

பிரசவத் தாய்மார்களுக்குப் பிரசவகாலத்தில் ஏற்படும் பிரசவச் சிக்கல், இரத்தப்போக்கு, இரத்த அழுத்தம் ஆகியவற்றுக்கு உரிய சிகிச்சை வழங்குவதற்கு உரிய மகப்பேற்று வைத்திய நிபுணர் அவசியமாக உள்ள போதிலும் அந்த வசதியில்லாததால் யாழ்.போதனா வைத்தியாலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

எனவே இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குக் குழந்தைகள் வைத்திய நிபுணர், மகப்பேற்று வைத்திய நிபுணர் ஆகியோரை விரைவில் நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது. (201-207)

# சங்கானை பேருந்து நிலையம், நூலக கட்டடப் பணிகளை துரிதப்படுத்துக

நாடாளுமன்ற உறுப்பினர் உரை

சங்கானை,ஜன.3

சங்கானையில் தற்போதுள்ள பேருந்து நிலையத்துக்கு நவீன முறையில் புதிய கட்டடங்கள் அமைப்பதற்கும் வலி.மேற்குப் பிரதேச சபையின் சங்கானை நூலகத்தை நவீனமயமாக்குவதற்கும் கட்டட வேலைகளை துரிதப்படுத்துமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் சம்பந்தப்பட்ட பிரதேச சபைக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சங்கானை வர்த்தகர் கைத்தொழில் உரிமையாளர் சங்கத்தின் பொதுக்கூட்டம் கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி கூட்டத்துக்குச் சங்கத் தலைவர் எஸ்.சாம்பசிவம் தலைமைதாங்கி உரை நிகழ்த்துகையில்: தவிர்க்க முடியாத சில காரணங்களினால் கடந்த பல வருடங்களாக இச் சங்கம் புனரமைக்கப்படாமல் இருந்தது. எனவே இதனால் வர்த்தகர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர் என அவர் கூறினார்.

மேலும் இக்கூட்டத்தில் வலி.மேற்குப் பிரதேச செயலர் திருமதி.தே.பாபு, வலி.மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி, சங்கச் செயலாளர் மற்றும் ஈ.பி.டி.பியின் வட்டுக்கோட்டைத் தொகுதி புதிய அமைப்பாளர் ஜீவன் உட்பட வர்த்தக சங்க அங்கத்தவர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினரிடம் வலி.மேற்கு பிரதேச செயலர் பூர்த்தியடையாமல் உள்ள சங்கானைக் கலாசார மண்டபத்தைக் கட்டி முடிப்பதற்கு [illegible] டபத்தின் மதிப்பீட்டைத் தந்தால் அதற்கான நிதி ஒழுங்குகளைத்தான் மேற்கொள்ள வசதியாயிருக்கும் எனவும் தெரிவித்தார்.

மேலும் சங்கானை நூலகம் கட்டி முடிப்பதற்கு 70 லட்சமும், மரக்கறிச் சந்தைக்கு ரூபா 40 லட்சமும், மீன் சந்தைக்கு 20 லட்சம் ரூபாவும் தேவைப்படுவதாகப் பிரதேச சபைச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தார். நிதிக்கான ஒழுங்குகளைத்தான் மேற்கொள்வதாகவும் நிதி மூலம் முழு வேலைத்திட்டமும் பூரணப்படுத்தப்படல் வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார்.

வர்த்தக சங்கத்தினால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சிலவற்றை நிறைவேற்றித் தருவதாகவும் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் 130 வர்த்தக நிலையங்கள் இங்கு இருந்தும் புதிய நிர்வாக சபையைத் தெரிவு செய்வதற்கு கோரம் காணாது என்றும், நிர்வாக சபைத் தெரிவை பிற்போடுமாறும் சபையில் வேண்டுகோள் விடுத்தார்.

மேற்படி பொதுக்கூட்டத்தில் பல்வேறு பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டதோடு பொதுமக்கள்,வேலையற்ற பட்டதாரிகளின் மகஜர்களும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் சமர்பிக்கப்பட்டன. (201-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011 ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படி?




உங்கள் ராசிக்கு இரண்டில் கேது, எட்டில் ராகு, ஆறில் சனி, பன்னிரெண்டில் குரு என்கிற நிலையில் பிரதான கிரகங்களின் அமர்வு உள்ளது. சனிபகவான் மிகுந்த அனுகூல பலன் தருகிற வகையில் உள்ளார். தாமதமான செயல்களை நிறைவேற்றுகிற லட்சிய எண்ணம் மனதில் மலரும். குருபகவானின் பார்வை பதிகிற இடங்களின் வழியாக நற்பலன் கிடைக்கும். பெரியவர்களிடம் பேசுகிற வார்த்தையில் நிதானம் பின்பற்ற வேண்டும். வீடு, வாகனத்தில் தேவையான மாற்றங்களைச் செய்து மகிழ்வீர்கள். தாய்வழி உறவினர் பாசத்துடன் நடந்துகொள்வர். புத்திரர்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள பிடிவாத குணத்துடன் செயற்படுவர். பூர்வீக சொத்தில் கிடைக்கிற வ்ருமானம் சுமாராக இருக்கும். வழக்கு விவகாரத்தில் சாதகமான தீர்வு கிடைக்கும். உடல்நலம் திருப் திகரமாக இருக்கும். எதிரிகள் விலகிச் செல்வர். தம்பதியர் குடும்பநலன் கருதி ஒற்றுமையுடன் நடந்து கொள்வர்.

தொழிலில் இருந்த குறுக்கீடு விலகும். பணியிட மாற்றம், பதவி உயர்வு போன்றவை பெறுவதில் உள்ள முயற்சி அனுகூல பலன் தரும். கிடைக்கிற பணவரவை முக்கிய தேவைகளுக்குப் பயன்படுத்துவதால் கடன்சுமை ஏற்படாத நன்னிலை உருவாகும். அரசு தொடர்பான காரியங்கள் நிறைவேற இதமான அணுகுமுறை பின்பற்ற வேண்டும். வெளிநாட்டு வேலைவாய்ப்பில் அனுகூல பலன் உள்ளது. தொழிலதிபர்கள் பொருளின் தரத்தை உயர்த்த நவீன யுக்திகளைக் கடைப் பிடிப்பர்.

உற்பத்தியை உயர்த்துவர். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். வெளியூர் பயணங்கள் மூலம் அதிக நன்மை பெறுவர். உபதொழில் தொடங்கும் முயற்சியை பின் வரும் காலங்களில் நிறைவேற்றுவது நல்லது. எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். நகை, புடைவை, வாகனம், மருந்துப்பொருள்கள், விவசாய விளைபொருள்கள், பாத்திரம், மின்சாதனப்பொருள்கள், கட்டுமானப் பொருள்கள், காய்கறி, பழங்கள், தளபாடம் ஆகியன விற்பனை வியாபாரிகளுக்கு சந்தையில் இருந்த போட்டி குறையும். மற்ற வியாபாரிகளுக்கு பணவரவு சீராக இருக்கும். அரசு, தனியார் துறையில் பணிபுரிபவர்கள் தமக்குள்ள பொறுப்பை உரிய கவனத்துடன் நிறைவேற்றுவர். பணியிடத்தில் இருந்த குறுக்கீடு விலகும். சம்பள உயர்வு, நிலுவைப் பணவரவு ஆகியவை கிடைக்கும். கடன்மிகுதிகளை ஓரளவு செலுத்துவீர்கள்.

**பெண்கள்:**

பணிபுரியும் பெண்கள் அலுவலகத்தில் உள்ள மாறுபட்ட சூழ்நிலைகளைக் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டியிருக்கும். வேலைப்பளு உயரும் என்றாலும் அதை ஏற்கும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்வீர்கள். நிர்வாகக் குளறுபடியால் சிலருக்கு வெளியூர் மாற்றம் ஏற்படும். குடும்பப் பெண்கள் கணவரின் குணநலன், பணவரவு, குடும்ப சூழ்நிலை இவற்றைக் கருத்தில் கொண்டு செயற்படுவர். முக்கிய தேவைகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். சுயதொழில் புரியும் பெண்களுக்கு உற்பத்தி பெருகும். விற்பனை ஓரளவுக்கு இருக்கும். கடனுக்குக் கொடுப்பதை இயன்ற அளவு தவிர்ப்பது நல்லது. லாபம் நன்றாக இருக்கும்.

**மாணவர்கள்:**

மாணவர்கள் கல்வியில் உற்சாகத்துடன் செயற்படுவர். அதிக புள்ளிகள் கிடைக்கும். சக மாணவர்களுடன் வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். படிப்பை முடித்தவர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ப வேலைவாய்ப்பு கிடைக்கும். உடல்நலம் சிறப்பாக அமையும். உறவினர்களின் உதவியால் முன்னேற்றம் அடைவீர்கள்.

**விவசாயிகள்:**

விவசாயப் பணிகளை நிறைவேற்ற தேவையான அனுகூலம் அத்தனையும் கிடைக்கும். பயிர் , கால்நடை வளர்ப்பில் முன்னேற்றம் வந்து தாராள பணவரவு பெறுவீர்கள்.




உங்கள் ராசியில் கேது, ஐந்தில் சனி, ஏழில் ராகு, பதினொன்றில் குரு என்ற நிலையில் பிரதான கிரகங்களின் அமர்வு உள்ளது. குருபகவான் மிகுந்த நற்பலன்கள் வழங்கும் விதத்தில் உள்ளார். சமூகத்தில் இருக்கிற நற்பெயர் தொடர்ந்திருக்கும். இளைய சகோதரர் கூடுதல் பாசத்துடன் நடந்துகொள்வர். வீடு, வாகனத்தில்ப் பெறுகிற வசதியைச் சரியாகப் பயன்படுத்துவது போதுமானது. தாயின் எண்ணங்களை அறிந்து தேவையை நிறைவேற்றுவதால் மட்டுமே குடும்பத்தில் ஒற்றுமையும் சந்தோஷமும் வளரும். புத்திரர்கள் தமது நண்பர்களின் சகவாசத்தினால் கல்வியில் பின்தங்குகிற கிரகநிலை உள்ளது. அதேசமயம் இவர்களை அளவுடன் கண்டிக்க வேண்டும். தவிர்த்தால் பெற்றோரிடம் மனக்கசப்பும், பிரிந்து வேறிடம் செல்கிற எண்ணமும் வளர்ந்திடும். பூர்வீக சொத்துக்களைப் பாதுகாப்பதிலும் அதன் மூலம் வருமானம் பெறுவதிலும் கண்காணிப்புடன் செயற்படுவது அவசியம். தம்பதியரிடையே சிறுசிறு பிரச்சினைகள் உருவாகி குருவருளால் சரியாகும். தந்தை வழி உறவினர்கள் மூலம் சில நன்மை கிடைக்கும்.

தொழில் சார்ந்த வகையில் கண்ணும் கருத்துமாகப் பணிபுரிவதால் மட்டுமே குறைபாடு வராத சிறந்த நிலைமை உருவாகும். வெளிநாடு வேலைவாய்ப்பில் சுமாரான நன்மை கிடைக்கும். சுயதொழில் தொடங்கும் வாய்ப்புக்களைச் செயற்படுத்தத் தேவையான முதலீடு, தொழில்நுட்பம் வருட பிற்பகுதியில் கிடைக்கும். தொழிலதிபர்கள் உற்பத்தியை அதிகரித்து புதிய ஒப்பந்தமும் பெறுவர். பணியாளர்களின் ஒத்துழைப்பு ஓரளவுக்கே கிடைக்கும். லாபம் சுமாராக இருக்கும். நகை, புடைவை, மின்சாதனப் பொருள்கள், கட்டுமானப் பொருள், தோல், பிளாஸ்டிக், இறப்பர் ஆகியவற்றை விற்பனை செய்பவர்கள் கூடுதல் வாடிக்கையாளர் கிடைத்து பணவரவில் முன்னேற்றம் காண்பர். மற்றவர்களுக்கு சுமாரான லாபம் கிடைக்கும். கூட்டு வியா பாரம் செய்பவர்கள் கருத்து பேதம் கொள்வர். அளவான மூலதனம், சீரான வாடிக்கையாளர் சேவை என்கிற கொள்கையை பின்பற்றுவதால் வியாபாரம் மேலும் சிறக்கும். தொடர்பில்லாத ஏனைய வியாபாரங்களில் ஈடுபட முயற்சிக்க வேண்டாம். அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்கள் உயர் அதிகாரிகளின் வழிகாட்டுதலைப் பெரிதும் மதித்து பின்பற்றுவர். பணி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். தொழில் சார்ந்த பயிற்சி அல்லது புதிய தொழில்நுட்பப் பயிற்சி பெற வாய்ப்பு உருவாகி நிறை வேறும். வாகன பயணத்தில் மித வேகம் பின்பற்றுவது நல்லது. சக பணியாளர்களுடன் சுமூக நட்பு தொடர்ந்திட தேவையற்ற விவாதத்தைத் தவிர்க்கவேண்டும்.

**பெண்கள்:**

பணிபுரியும் பெண்கள் கூடுதல் முயற்சியுடன் பணிபுரிந்து திட்டமிட்ட இலக்கை நிறைவேற்றுவர். பதவி உயர்வு, எதிர்பார்த்த சலுகை கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டா லும் முயற்சியால் கிடைத்து விடும். குடும்பப் பெண்கள் கணவரின் வருமானத்திற்கேற்ப செலவுகளில் சிக்கனம் பின்பற்றுவர். எதிர்கால வாழ்வு பற்றிய நம்பிக்கை வளரும். சுயதொழில் புரியும் பெண்கள் சுமாரான உற்பத்தி, எதிர் பார்த்த பணவரவு கிடைக்கப்பெறுவர். போட்டி குறைந்து நிம்மதியான மனநிலையைப் பெறுவர்.

**மாணவர்கள்:**

மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர். கல்விக்கான பணவசதி எதிர்பார்த் தபடி கிடைக்கும். சக மாணவர்களுடன் கருத்துபேதம் வராத அளவிற்கு பேசுவது நல்லது. படித்து முடித்தவர்களுக்கு சில தடங்கல்களைச் சந்தித்தாலும் வேலைவாய்ப்பு உறுதியாகக் கிடைக்கும்.

**விவசாயிகள்:**

விவசாயிகளுக்கு சிறந்த பொருள்களுக்கு சந்தையில் நல்லவிலை கிடைக்கும். கால்நடை வளர்ப்பில் அளவான நன்மை பெறுவீர்கள். குடும்பத்தில் திட்டமிட்ட சுபநிகழ்ச்சி நிறைவேறும்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

தோற்றம் 02 . 07 . 1968



மறைவு 02 . 12 . 2010

### அமரர் கணேசு தர்மகுலசிங்கம்

கடந்த (02.12.2010) வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (03.01.2011) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் சுன்னாகம் சிவன் கோயில் மண்டபத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(108375)


## 21 வயதுக்கு மேற்பட்ட பெண்களே பணிப்பெண்களாகச் செல்ல முடியும்

கொழும்பு,ஜன.3

வெளிநாடுகளில் பணிப்பெண்களாகத் தொழில் புரியச் செல்லும் பணிப் பெண்களின் வயது குறைந்தபட்சம் 21 ஆக இருக்க வேண்டுமென அமைச்சு ஆலோசித்துள்ளது.

இது சம்பந்தமான பிரேரணையை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்க வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி மற்றும் நலன்புரி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போது பணிப்பெண்களாகச் செல்பவர்களின் குறைந்த பட்ச வயது 18ஆக உள்ளது. இதனை 21ஆக அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா கருத்துத் தெரிவிக்கையில்:

வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்லும் இலங்கையர்கள் தங்களது தொழில்தருநர்களைத் தூதரகங்களில் அவ்வப்போது சந்திக்க வசதிகள் ஏற்படுத்தித் தரப்படுமானால் அவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமென ஆலோசனை கூறியுள்ளார். (ம-5)

## நிதிமோசடி செய்த நபருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜன.3

கொரியாவில் வேலைவாய்ப்புப் பெற்றுத்தருவதாக ஏமாற்றி பெரும் எண்ணிக்கையான இளைஞர், யுவதிகளிடமிருந்து சுமார் 25 லட்சம் ரூபாவை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஹரிஸ்பத்துவ பிரதேச சபையின் உபதலைவரை ஜனவரி 5ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

சந்தேக நபருக்கு எதிராக மேலும் முறைப்பாடுகள் வந்தவண்ணம் உள்ள [illegible] துக்குத் தெரிவித்ததையடுத்தே விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. (ம-5)


## உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 582

திகதி 2011/01/01

சுப்பர் இலக்கம் 25

வெல்லப்பட்ட இலக்கங்கள் 01 56 65 70

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| [illegible] பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் [illegible] | ரூ. 35,246,854.40 விகிதம | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 விகிதம | 01 |
| இரண்டாம் பரிசு | [illegible] | ரூ. 50,000.00 விகிதம | 12 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 விகிதம | 348 |
| நான்காம் பரிசு | [illegible] | ரூ. 1,000.00 விகிதம | 711 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 விகிதம | 17,403 |
| ஆறாம் பரிசு | [illegible] | ரூ. 40.00 விகிதம | 10,098 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம | 251,940 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம | 40,252 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 10,995,060.00

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ 35,840,982.40

தேசிய லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த ஆண்டுக்கான உரிமங்களை பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச சபை அறிவிப்பு

கிளிநொச்சி, ஜன.3

கிளிநொச்சி மாவட்டம் கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட மக்கள் தமக்குரிய உரிமங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான சூழல் பாதுகாப்பு உரிமம், வியாபார உரிமம், துவிச்சக்கர வண்டிகளுக்கான உரிமம், வளர்ப்பு மிருகங்களுக்கான உரிமம் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறே அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தொழில் அல்லது வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவோர் சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற்றுக் கொள்ளுதல் அவசியமெனவும் இந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் கரைச்சிப் பிரதேச சபையுடன் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்தபின் சமர்ப்பித்து உரிய கட்டணத்தினையும் செலுத்தி உரிமங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்த உரிமம் பெறாது தொழில் அல்லது வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவது குற்றச் செயலாகக் கருதப்பட்டு சட்ட நடிவடிக்கை எடுக்க முடியும்.

அத்துடன் வியாபார நிலையங்களை நடத்துவோரும் இதன் பிரகாரம் உரிமங்களைப் பெற்றே தமது தொழிலை நடத்த முடியும். இதைப்போன்றே பிரதேச சபை எல்லைக்குள் துவிச்சக் கரவண்டிகள் வைத்திருப்போரும் நாய்களை வளர்ப்போரும் அவற்றிற்கான உரிமங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இவை தொடர்பான மேலதிக விவரங்களை பிரதேசசபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச சபைச் செயலாளர் திருமதி மோ.அருள்சோதி தெரிவித்தார். (க-405)

# சேதமடைந்த பாடசாலைக் கட்டடங்களால் ஆசிரியர்களும் மாணவர்களும் பாதிப்பில்

பூநகரி, ஜன.3

பூநகரி விநாசியோடை அ.த.க.பாடசாலை சேதமடைந்த நிலையிலேயே தொடர்ந்தும் காணப்படுவதால் மாணவர்களும், ஆசிரியர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகக் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்தப் பாடசாலை யுத்தத்தின்போது அழிக்கப்பட்ட நிலையில் புனரமைப்பு எதுவும் செய்யப்படாது காணப்படுகின்றது. பாடசாலையின் சுவர்கள் ரவைகளால் துளைக்கப்பட்ட நிலையிலும், வெடித்த நிலையிலும் காணப்படுகின்றன. தரைப் பகுதி வெடித்த நிலையில் நடமாட முடியாத நிலையில் காணப்படுகின்றது. பாடசாலைக் கூரைகள் பனையோலையால் தற்காலிகமாக வேயப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

அத்துடன் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சீரான சுகாதார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இதனால் மாணவர்களும், ஆசிரியர்களும் பெரும் சிரமங்களின் மத்தியிலேயே தமது கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பின் தங்கிய இந்தக் கிராம மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும்பொருட்டு பாடசாலையை அபிவிருத்தி செய்வதோடு மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (க-406)

# உடைக்கப்பட்டது இரத்தினபுரம் பாலம்; அலைந்து திரிகின்றனர் பொதுமக்கள்

கிளிநொச்சி, ஜன.3

கிளிநொச்சி இரத்தினபுரம் பாலம் உடைக்கப்பட்டுக் காணப்படுவதால் அவ்வீதியால் பயணிக்கும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இப்பாலத்தின் திருத்தப் பணிக்ளுக்கென பாலம் உடைக்கப்பட்டு ஒரு மாத காலம் கடந்த நிலையிலும் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் கரடிப் போக்கு, திருவையாறு, வட்டக்கச்சி போன்ற பிரதேசங்களுக்குச் செல்வோர் சுற்றுப் பாதைகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

தமது சிரமங்களைக் கருத்தில் கொண்டு நிறுத்தப்பட்டுள்ள இரத்தினபுரம் பாலப் புனரமைப்புப் பணிகளை விரைவில் மேற்கொள்ளுமாறு பொது மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (க-313)

# மீள்குடியேறி வசதிகள் எதுவுமின்றி அல்லற்படும் பொன்னகர் கிராம மக்கள்

கிளிநொச்சி, ஜன.3

கிளிநொச்சி பொன்னகர் கிராம மக்கள் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி அல்லற்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கிராமத்தில் மக்கள் மீள்குடியேறி ஒரு வருடம் கழிந்தபோதிலும் அடிப்படை வசதிகள் எதுவும் இவர்களுக்குச் செய்து தரப்படவில்லை. குறிப்பாக வீட்டு வசதிகள், தண்ணீர் மற்றும் உணவு வசதிகள் சீராக மேற்கொள்ளப்படாத நிலை காணப்படுகின்றது.

அத்துடன் இம்மாதம் மீள்குடியேற்ற அமைச்சினால் வழங்கப்பட்ட வெள்ள நிவாரணப் பொருள்களும் இவர்களுக்குக் கிடைக்கவில்லை.

சுமார் 80 குடும்பங்கள் இந்தக் கிராமத்தில் வசித்து வருகிறார்கள். இவர்கள் விவசாயம், கூலித் தொழில் போன்றவற்றிலேயே ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால் இவற்றிலிருந்து போதிய வருமானம் கிடைக்காமையால் ஏழ்மை நிலையிலேயே வாழ்ந்து வருகின்றார்கள். தற்போது மழைக்காலம் ஆரம்பித்துள்ளதால் தொழில் எதுவும் இல்லாமல் வருமானமின்றி உள்ளனர்.

யுத்தத்தின்போது உள்ளவற்றையெல்லாம் இழந்து மிகவும் வறிய நிலையிலுள்ள தமக்கு அடிப்படை வசதிகளையாவது வழங்குமாறு இந்த மக்கள் உருக்கமான வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-313)

# புனரமைக்கப்படாத நிலையில் காணப்படும் முல்லைத்தீவு மாவட்டத்தின் கிறிஸ்தவ தலங்கள்

முல்லைத்தீவு, ஜன.3

முல்லைத்தீவு மாவட்டத்தில் தண்ணீரூற்று, முள்ளியவளை, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்கள் புனரமைக்கப்படாத நிலையில் உள்ளதால் கிறிஸ்தவ மக்கள் தமது வழிபாடுகளை நடத்துவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

யுத்தத்தின் போது இந்த கிறிஸ்தவ தேவாலயங்கள் அழிவடைந்தன. ஆனால் இப்பிரதேசங்களில் மக்கள் மீள்குடியேறியுள்ள போதிலும் வணக்கத் தலங்கள் புனரமைக்கப்படாத நிலையில் உள்ளமை இவர்களது மனங்களில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஏனைய இடங்களில் உள்ள வணக்கத் தலங்களின் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் இந்த இடங்களில் மட்டும் இந்த வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. கிறிஸ்தவர்களின் நத்தார், புதுவருடப் பண்டிகைகள் முடிந்த நிலையிலும் இவை கூரைகளின்றியும், கட்டடங்கள் சிதைந்த நிலையிலும் காணப்படுகின்றமை வேதனையளிப்பதாக இந்த மக்கள் தெரிவிக்கின்றனர். (க-500)

# டெங்கு நோய் விழிப்புணர்வு


முல்லைத்தீவு,ஜன.3

கிளிநொச்சி மாவட்டத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க அனுசரணையுடன் கிளிநொச்சியில் டெங்கு நோய் விழிப்புணர்வுப் பிரசார நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளில் வீடு வீடாகச் சென்று டெங்கு நோயை இல்லாது ஒழிப்பது தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டு டெங்கு நோய் பற்றிய விழிப்பணர்வுப் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (க-405)




## கிறிஸ்துவின் பாதையில்...



நல்ல சமர்ப்பணம்: கிறிஸ்மஸ் காலத்தையொட்டி கிளிநொச்சி புனித அந்தோனியார் தேவாலயத்தில் இரத்ததான நிகழ்வு நடைபெறுகின்றது.

# அடிப்படை வசதிகள் எதுவுமின்றி காணப்படும் முறிகண்டி ஆலயச் சூழல்

முல்லைத்தீவு,ஜன.3

முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்தில் மலசல கூட வசதிகள், போதிய தண்ணீர் வசதிகள் என்பன இல்லாமையால் ஆலயத்தில் தங்கிச் செல்லும் பயணிகள் அவலங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

ஏ-9 வீதியில் இந்த ஆலயம் அமைந்துள்ளதால் இதனூடாகப் பயணம் மேற்கொள்ளும் பயணிகள் ஆலயத்தில் தங்கி நின்றே தமது பயணத்தைத் தொடர்கின்றனர். ஆனால் ஆலய சுற்றாடலில் அமைக்கப்பட்டுள்ள மலசலகூடங்கள் மக்களின் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்படவில்லை. அத்துடன் ஆலயச் சுற்றாடலில் உள்ள மலசல கூடங்களைப் பயன்படுத்த முடியாததால் அருகிலுள்ள காடுகளையே அதிகமானோர் நாடுகின்றனர்.

இதனால் ஆலயச் சுற்றாடலில் துர்நாற்றம் வீசுவதோடு சுகாதாரச் சீர்கேடும் காணப்படுகின்றது. புனிதமாகப் பேணப்பட வேண்டிய ஆலயச் சுற்றாடல் சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படுவது பக்தர்களின் மனங்களில் வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

பழமை வாய்ந்த முறிகண்டி ஆலயத்தில் சகல இன மக்களும் பக்தியுடன் வழிபட்டு வந்துள்ளனர். யுத்தத்தின் போது இந்த ஆலயத்தில் பூசை வழிபாடுகள் எதுவும் நடைபெறாது இருந்து வந்தது. மக்கள் தற்போது மீள் குடியமர்ந்த நிலையில் தினமும் இந்த ஆலயத்துக்கு பெருமளவு பக்தர்கள் வருகை தந்த வண்ணமுள்ளனர்.

எனவே மற்றவர்கள் சுட்டிக் காட்டும் வரை காத்திருக்காது இந்த ஆலயத்துக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தருமாறு பயணிகள் சார்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (க-313)

# கிளிநொச்சியில் இனங்காணப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் கையளித்தல்

(நேற்றைய தொடர்ச்சி)

| | | | |
|---|---|---|---|
| 182. HI - 9051 | 203. HZ - 2888 | 224. HY - 4965 | 245. 152 - 4659 |
| 183. JC - 3725 | 204. HD - 6491 | 225. GW - 5560 | 246. 94 - 7653 |
| 184. MD- 7982 | 205. MB - 4386 | 226. NPGQ - 9405 | 247. TL - 4894 |
| 185.GG -3315 | 206. GW - 5621 | 227. 118 - 2831 | 248. ME - 3598 |
| 186. MF - 4693 | 207. JS - 4094 | 228. MC - 7568 | 249. 140 - 3977 |
| 187. JD - 7122 | 208. 500 - 4008 | 229. HH - 1832 | 250. MQ - 8426 |
| 188. GO - 6072 | 209. MK - 4325 | 230. 148 - 0461 | 251. JS - 7552 |
| 189. JB - 0035 | 210. TL - 4721 | 231. MF - 1819 | 252. HT - 6281 |
| 190. HG - 0588 | 211.151 - 9269 | 232. MJ - 3627 | 253.MF - 3335 |
| 191. 149 - 0003 | 212. MB - 0528 | 233. JB - 4070 | 254. GD - 7712 |
| 192. 151 - 1368 | 213. 502 - 0321 | 234. HK - 9904 | 255. GY - 3812 |
| 193. MQ - 6689 | 214. GN - 9777 | 235. MT - 9937 | 256. HO - 4016 |
| 194. MG - 6828 | 215. 500 - 6001 | 236. HM - 1412 | 257. 145 - 7698 |
| 195. MH - 0262 | 216. 500 - 0212 | 237. MI - 8696 | 258. HE - 7320 |
| 196. JD - 4160 | 217. GN - 9732 | 238. HE - 7269 | 259. 134 - 6941 |
| 197. TS - 7963 | 218. MC - 4267 | 239. MA - 2797 | 260. MB - 1663 |
| 198. JZ - 5700 | 219. HE - 9668 | 240. JJ - 0560 | 261. HX - 3315 |
| 199. MM - 3840 | 220. NPGQ - 7463 | 241. JG - 7054 | 262. 131 - 9616 |
| 200. [illegible] - 7308 | 221. [illegible] - 2952 | 242. HA - 5961 | 263. 113 - 8633 |
| 201. [illegible] - 7871 | 222. HS - 9950 | 243. MN - 1611 | 264. 146 - 8547 |
| 202. JQ - 1092 | 223. ME - 9993 | 244. HP - 6234 | 265.ME - 8072 |

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தொலைபேசிப் பாவனை பெரிய அளவில் வளர்ச்சி கண்டுள்ளது

கொழும்பு,ஜன.3

இலங்கையில் நிலையான மற்றும் செல்லிடத் தொலைபேசிப் பாவனையில் பெரிய வளர்ச்சி உள்ளதாக பொதுசன மதிப்பீடுகள் மற்றும் புள்ளி விவரத் திணைக்களத்தின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டின் இறுதிக் காலாண்டு தொடர்பாக மேற்படித் திணைக்களத்தினால் வெளியிடப்பெற்ற உத்தியோகபூர்வ அறிக்கைக்கு அமைய நூறு இலங்கையருக்குள் 95.8 பேர் தொலைபேசி வசதிகளைக் கொண்டிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டின் இறுதிக் காலமாகும்போது தொலைபேசி உரிமையாளர்களின் எண்ணிக்கை 82 வீதமாக இருந்துள்ளது.

ஓராண்டு காலத்துள் இந்த அளவுப் பிரமாணம் நூற்றுக்கு 14 வீதம் வரையில் அபிவிருத்தியடைந்துள்ளது.

போட்டிபோடும் ரீதியில் தொலைபேசி நிறுவனங்கள் தமது சேவைகளை வழங்கியுள்ளன.

கவர்ச்சிகரமான தொழில்நுட்ப முறைமைகள் கொண்ட தொலைபேசிகளை அறிமுகப்படுத்தியமை இப்பெரிய வளர்ச்சிக்குக் காரணமாகியுள்ளதாகப் பொதுசன மதிப்பீடுகள் மற்றும் புள்ளி விவரத் திணைக்களம் சுட்டிக் காட்டுகிறது.

தற்போது இலங்கையில் 195 லட்சம் நிலையான மற்றும் செல்லிடத் தொலைபேசிகள் இயங்கி வருகின்றன. அவற்றை ஒன்பது தொலைபேசி நிறுவனங்கள் நிர்வகித்து வரு கின்றன. (ம-22)

## கஞ்சா விநியோகம் செய்த முன்னாள் பொலிஸ் அதிகாரி கைது

கொழும்பு, ஜன.3

தனமல்வில, பதியத்தலாவ, அம்பாறை ஆகிய பிரதேசங்களில் இருந்து பெருந்தொகை கஞ்சாவைக் கடத்தி வந்து கண்டியில் பல பிரதேசங்களுக்கு விற்பனை செய்துவந்த முன்னாள் பொலிஸ் உயரதிகாரி ஒருவர் கடந்த 30ஆம் திகதி கட்டுகஸ்தோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 10 கிலோ கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளது.

பழைய பொலிஸ் ஜீப் ஒன்றுக்கு சமனான ஜீப் ஒன்றின் ஆசனங்களுக்குக் கீழும் சைலன்ஸருக்கு உள்ளேயும் சூட்சுமமாக அமைக்கப்பட்ட சிறு பெட்டிகளில் கஞ்சாவைக் கடத்தி வந்துள்ளார்.

நீண்டகாலமாக இந்த வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ள இவர் கட்டுகஸ்தோட்டை, கண்டி, மாவனெல்ல, கடுகண்ணாவ உள்ளிட்ட பல பிரதேசங்களுக்கு அதனை விற்பனை செய்து வந்துள்ளார்.

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி தியகெலி நாவலவின் தலைமையில் சென்ற பொலிஸ் குழுவே சந்தேக நபரைக் கைது செய்தது. (ம-5)

## மோட்டார் சைக்கிள் திருட்டுப் போனது

யாழ்ப்பாணம், ஜன.3

அல்லைப்பிட்டி சென்.மேரிஸ் தேவாலயத்துக்கு அருகில் உள்ள வீட்டில் பூட்டிய நிலையில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் நேற்று முன்தினம் இரவு திருட்டுப் போயுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளைப் பறிகொடுத்த ஆ.செபமாலைமுத்து என்பவரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார். (ம-14)

## ப.நோ.கூ.ச.பணியாளர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் படி

யாழ்ப்பாணம், ஜன.3

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கான வாழ்க்கைச் செலவுப் படியின் ஒரு பகுதி மீண்டும் வழங்கப்படுகின்றது.

அந்த வகையில் கடந்த டிசெம்பர் மாதத்திற்கு உரிய படியாக ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சங்கத்தின் செயற்பாடுகள் தற்போது சிறந்த முறையில் இடம்பெற்று வருவதாலும் சங்கம் லாபத்தில் செயற்படுவதாலும் மேற்படி செலவுப் படி வழங்கப்படுவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (201-26)


## ST. JOHN' S COLLEGE, JAFFNA
### ADMISSION - 2011 FOR SRI LANKAN/ LONDON ADVANCED LEVEL (TAMIL/ ENGLISH - MEDIUM)

தரம்12 இற்கு (A/L 2013 Batch) தமிழ், ஆங்கிலமொழி மூலமும் லண்டன் (A/L) கற்பதற்கான விண்ணப்பப்படிவங் கள் சென். ஜோண்ஸ் கல்லூரியினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

குறிப்பு:
1. விஞ்ஞான, கணித, வர்த்தக துறைகளுக்கு ஆங்கிலமொழி மூலக் கற்கைநெறியும் உண்டு.
2. லண்டன் A/L கற்கைக்கு வயதுக்கட்டுப்பாடு இல்லை.
3. தரம் 12 (A/L 2013 Batch) விண்ணப்பதாரி 01.02.1994 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
4. அனுமதிப்பரீட்சை கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்- 05.01.2011 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும்.
5. புதிய வகுப்புக்கள் 10.01.2011 ஆரம்பமாகும்.
6. அனுமதிப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில புலமைப்பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.

விண்ணப்பப்படிவங்கள் கல்லூரியில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 4.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

அதிபர்.



ජාතික සම්පත

சீட்டிழுப்பு இலக்கம் - 87 திகதி - 01.01.2011

ஜாதிக சம்பத Jathika Sampatha உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து V அதிர்ஷ்ட இலக்கம் 06 வெற்றி இலக்கம் 8 1 6 0 8

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | V 06 8 1 6 0 8 | ரூ. 6,529,350.00 | - |
| 1 பரிசு | 06 8 1 6 0 8 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 8 1 6 0 8 | ரூ. 100,000.00 | 04 |
| 3 பரிசு | 1 6 0 8 | ரூ. 10,000.00 | 27 |
| 4 பரிசு | 6 0 8 | ரூ. 1,000.00 | 267 |
| 5 பரிசு | 0 8 | ரூ. 50.00 | 2634 |
| 6 பரிசு | 8 | ரூ. 20.00 | 25129 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| 7 பரிசு | 8 1 6 0 | ரூ. 1,000.00 | 27 |
| 8 பரிசு | 8 1 6 | ரூ. 100.00 | 264 |
| 9 பரிசு | 8 1 | ரூ. 50.00 | 2642 |
| 10 பரிசு | V | ரூ. 20.00 | 10399 |
| 11 பரிசு | V 06 | ரூ. 100.00 | 1183 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,083,060.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு ரூ.6,870,607.00



## கண்ணீர்க் காணிக்கை



எமது சக மாணவன் சி. சஞ்சயன் அவர்களின் அன்புத் தந்தை

**மார்க்கண்டு சிவலிங்கம்**

(பிரதிக் கல்விப் பணிப்பாளர்- வலிகாமம்)

அவர்களின் பிரிவால் துயருறும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

(108372) நண்பர்கள்.



## தொழிற் பயிற்சிகள்

வெளிநாடுகளில், உள்நாட்டு நிறுவனங்களில் தொழில் நுட்பத்துறையில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும், சுய மாக தொழில் ஆரம்பிப்பதற்கும் ஏற்றமுறையில் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

* Mobile Phone Repairing, Basic Electronics, Software, Phone circuit, Flashing, Hard ware, Basic Computer Hardware — காலம் :- 3 மாதம்
* றேடியோ - ரெலிவிசன் றிப்பியரிங் றேடியோ CD, DVD Player ரெலிவிசன் Monitor வீடியோ டெக் UPS — காலம் :- 9 மாதம்
* எலக்ரிக்கல் வயறிங் & றிவைண்டிங், வீட்டு மின்சுற்றுவேலை Motor, Fan, Transformer வீட்டுமின் பொருள்கள் திருத்துதல். றீ வைன்டிங் செய்தல் — காலம் :- 6 மாதம்
* எயர்கொண்டிசனிங் Window Ac Refrigerator Splite Ac Deep Frizer — காலம் :- 6 மாதம்
* Computer Hardware Engineering — காலம் :- 3 மாதம்
* Plumping — காலம் :- 2 மாதம்

பயிற்சிகள் ஆரம்பம் :- 06-01-2011, 09-01-2011

விபரங்களுக்கு

JAFFNA TECHNICAL INSTITUTE

இல. 46, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். T.P.0718561654

கிளை NEW ASIAN CENTER 56/15B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.0779254078

குறிப்பு:- தொழில் புரிவோர்களுக்கு சனி, ஞாயிறு மாலை நேர பயிற்சி வகுப்பு நடைபெறும். (சி/574162)



## 3 ஆம்ஆண்டு நினைவஞ்சலி



**காயாரோகணர் ஜெயசீலன்**

(முன்னாள் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்- (உடற்கல்வி ) வலயம் -கிளி)

மண்ணில் 09.01.1964
விண்ணில் 07.01.2008
திதி: சதுர்த்தசி 03.01.2011

ஆயிரம் நாள்கள் ஓடியும் ஆறவில்லை
எம் கண்களின் நீரோட்டம்
மூன்று ஆண்டுகள் கடந்தும்
முடியவில்லை உங்கள் நினைவுகள்
ஆத்மா சாந்திபெற இறைவன் பாதம் பணிகின்றோம்.

நி. முகவரி: செல்வாநகர், கிளிநொச்சி.
த. முகவரி: சங்கத்தானை, சாவகச்சேரி.

உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்
T. P.No. 077 7481394



## கண்ணீர் அஞ்சலி



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுத சுரபி அன்னதான சபையின் ஆரம்பகால நிறுவுநர் திலகங்களில் ஒருவரும் முன்னாள் தலைவரும், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபை முன்னாள் உறுப்பினரும் பிரபல வர்த்தகரும், சிறந்த சமய, சமூக சேவையாளருமாகிய

**ஸ்ரீமான் V. K. T. தம்பிமுத்து**

அவர்களின் மறைவையொட்டி எமது கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.
அமரரின் ஆத்ம சாந்திக்காக ஸ்ரீ நாக பூஷணியம்மனைப் பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி!!!

பிரதானசாலை, நயினாதீவு. 2 தொ. பேசி. 021 3213575

நிர்வாகம், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை.



## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2187 திகதி 01 – 01 – 2011

ஆங்கில எழுத்திற்கும் U

வெற்றி எண்கள் 03 38 45 61 போனஸ் இல: 10

ஜக்பொட் பரிசு ரூ. 29,188,625/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 202545 | 20/- | 4,050,900/- |
| 2 இல | 14439 | 100/- | 1,443,900/- |
| 3 இல | 288 | 1,000/- | 288,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7889 | 40/- | 315,560/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 602 | 1,000/- | 602,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 17 | 10,000/- | 170,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 29,188,625/- | - |
| 1 இல + போனஸ் இல | 9676 | 100/- | 967,600/- |
| 2 இல + போனஸ் இல | 452 | 500/- | 226,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 358 | 200/- | 71,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 17 | 1,500/- | 25,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| மொத்தம் | | | 9,811,060/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 236300 | | 10,411,060/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| புத்தளம் | 302693596-9-42 |
| அம்பாந்தோட்டை | 302694577-8-14 |
| மொணராகலை | 302694663-7-08 |
| வவுனியா | 302694272-2-16 |
| நுவரேலியா | 302697120-6-33 |
| பொலன்னறுவை | 302697778-3-04 |
| கம்பஹா | 302698537-7-31 |
| யாழ்ப்பாணம் | 302695989-2-38 |
| காலி | 302701213-5-06 |
| அம்பாறை | 302699479-7-35 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 29,741,100/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.பியின் சொத்துகளை அரசுடைமையாக்கினால் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கலாம்

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 3

கே.பியின் சொத்துகளை அரச உடைமையாக்கினால் அரச ஊழியர்களின் சம்பளத்தை இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு அதிகரித்துக் கொடுக்க முடியும் என்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வெள்ளியன்று கூறினார்.

அவரது அலுவலகத்தில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ரணில் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அரச ஊழியர்களுக்கு 2,500 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என்று பொய் கூறியே மஹிந்த ராஜபக்ஷ 2010ஆம் ஆண்டை ஆரம்பித்து வைத்தார். அவரது பொய்யுடன் தான் 2010ஆம் ஆண்டு உதயமானது.

அந்தப் பொய் வாக்குறுதி அளிக்கப்பட்டு ஒரு வருடம் முடிந்துவிட்டது. ஆனால், சம்பள அதிகரிப்பின்றி அரச ஊழியர்கள் கஷ்டப்படுகின்றனர். அவர்களால் குடும்பங்களைக் கொண்டு நடத்த முடியாதுள்ளது.

சர்வதேச நாணயநிதியத்துக்கு அடிபணிந்தே அரசு சம்பள உயர்வை வழங்காதுள்ளது. இதுதொடர்பான அரசின் நிலைப்பாட்டை அரசு நாடாளுமன்றில் கூறவேண்டும்.

பிறக்கின்ற புதுவருடம் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுக்கும் எமது போராட்டம்மிக்க ஆண்டாக அமையும். அதற்காக நாம் தொடர்ந்து போராடுவோம். இதை அடிப்படையாகக் கொண்டே எமது போராட்டம் ஜனவரி 26ஆம் திகதி முன்னெடுக்கப்படும்.

கே.பியிடம் இருக்கும் சொத்துகளை அரசுடைமையாக்கினால் அரச ஊழியர்களின் சம்பளத்தை இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு அதிகரித்துக் கொடுக்க முடியும். ஆனால், அப்படியான ஏற்பாடுகள் எவையும் இடம்பெறுவதாகத் தெரியவில்லை.

-இவ்வாறு ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (சி)

# இந்தியாவிலிருந்து இறக்குமதியான முட்டை ஒன்றின் நிறை 35 கிராம்

## ஐ. தே. க. எம். பி. கூறுகிறார்

கொழும்பு, ஜன. 3

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள முட்டை ஒன்றின் எடை 35 கிராம் என்று ஐ.தே.க.எம்.பி ஜோஸப் மைக்கல் பெரேரா வெள்ளியன்று கூறினார். ஆனால் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் முட்டையின் எடை 60கிராம் என்றும் அவர் சொன்னார். குறைந்த விலையில் முட்டை கிடைக்கின்றது என்று சந்தோஷப்பட்டு இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டையை வாங்கிய மக்கள் மிகவும் ஏமாற்றமடைந்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

பொருள்களின் தட்டுப்பாட்டை நீக்குகின்றோம். சில பொருள்களின் விலைகளைக் குறைக்கின்றோம் என்று கூறிக் கொண்டு அரசு இவ்வாறு மக்களை ஏமாற்றுகின்றது என்று ஜோஸப் மைக்கல் பெரேரா கூறினார். (சி)

# தமிழ் எழுத்தாளர் மாநாடு கொழும்பில்

சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் நடத்தும் சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு கொழும்பில் நடை பெறவுள்ளதாக ஒன்றியத்தின் மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். எதிர் வரும் 06, 07, 08, 09 ஆம் திகதிகளில் உருத்திரா மாவத்தை இல.7, 57ஆம் ஒழுங்கை கொழும்பில் அமைந்துள்ள கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் மாநாடு நடைபெறும். ஆய்வரங்குகள் மற்றும் கலை நிகழ்வுகள் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்திலும், நிறைவுநாள் நிகழ்வு கள் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்திலும் நடைபெறவுள்ளன. (க)

# 7 பொலிஸ் நிலையங்களால் தேடப்பட்டு வந்த இரு குற்றவாளிகள் மொரட்டுவையில் கைது

கொழும்பு,ஜன. 3

பல்வேறு கொள்ளைச்சம்பவங்களுடன் தொடர்பு பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஏழு பொலிஸ் நிலையங்களால் தேடப்பட்டு வந்த இரு நபர்கள் மொரட்டுவையில் வைத்து சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான திருட்டுப் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன எனத்தெரிவிக்கப்படுகிறது.

மொரட்டுவை நகரில் கைது செய்யப்பட்ட இவ்விரு நபர்களிடமும் மேற்கொண்ட விசாரணைகளின் போது பண்டாரகம, பாணந்துறை,கெசல்வத்த, பிலியந்தலை ஆகிய பிரதேசங்களில் நடந்த பதினொரு கொள்ளைகளுடன் இவர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

கைதான இருவரும் பாணந்துறை கெசல்வத்தை பிரதேச வாசிகளெனவும் அவர்கள் 37 மற்றும் 47 வயதினரெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மொரட்டுவை பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி உபுல செனவிரத்னவின் தலைமையில் குற்றத்தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (சி)

## எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள

# கொழும்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள அமைச்சர்களுக்கும் ஐ.தே.கட்சி அழைப்பு

கொழும்பு, ஜன. 3

இந்த மாதம் 26ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியால் கொழும்பில் நடத்தப்படவுள்ள ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள அமைச்சர்களுக்கும் அழைப்பு விடுப்பதாக அக்கட்சி கடந்த வெள்ளிக்கிழமை கூறியது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜோஸப் மைக்கல் பெரேராவே இவ்வாறு கூறினார்.

அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

தற்போதைய வாழ்க்கைச் செலவின அதிகரிப்புக்கு ஏற்ப 2,000 ரூபா சம்பள அதிகரிப்புக்கூட போதாது. 2,500 ரூபா சம்பள அதிகரிப்புக்கும் இணங்கவில்லை. இருப்பினும், 2,500 ரூபா வழங்கப்போவதாக அரசு வழங்கிய வாக்குறுதியையாவது நிறைவேற்றுமாறு நாம் அரசைக் கேட்கின்றோம்.

மக்களின் நிலைமை தொடர்பாக நாம் கூறுவதையே அமைச்சர்களும் கூறுகின்றனர். அமைச்சர்களால் கிராமங்களுக்குச் செல்ல முடியவில்லை.

வாழ்க்கைச் செலவின அதிகரிப்புத் தொடர்பாக மக்கள் அமைச்சர்களிடம் கேள்வி கேட்கின்றனர். அவர்கள் தாம் படும் துன்பத்தை அமைச்சர்களிடம் கூறுகின்றனர். இதனால்தான் அமைச்சர்களும் நாம் கூறுவதையே கூறுகின்றனர்.

சம்பள அதிகரிப்பை வழங்கக் கோரி நாம் ஜனவரி 26ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்துகின்றோம். இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளுமாறு நாம் அமைச்சர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

இந்த ஆர்ப்பாட்டம் அரசைக் கவிழ்க்கும் ஆர்ப்பாட்டம் அல்ல. அரச ஊழியர்களின் உரிமையைப் பாதுகாப்பதற்கும், அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு அழுத்தம் கொடுப்பதற்குமே நாம் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துகின்றோம்.

- இவ்வாறு ஜோஸப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.(சி)

# டெங்கு நோயாளருக்கான சிகிச்சையில் தவறான முறையில் 'சேலைன்' உட்செலுத்தல்

## நோய் உக்கிரமடைய இது காரணமாகிறதாம்

கொழும்பு, ஜன.3

இலங்கையில் டெங்குக் காய்ச்சலுக்கு உள்ளான நோயாளர்களுக்கு மருத்துவ மனைகளில் சிகிச்சைகள் வழங்கும் போது மருத்துவர்கள் தவறான 'சேலைன்' உட்செலுத்தல் அளவுகளை வழங்குதல் மூலம் அவர்களது நோய்த்தன்மையை உக்கிரமடையச் செய்துள்ளதாக உலக சுகாதார அமைப்பினால் மேற் கொள்ளப்பட்டுள்ள ஆய்வொன்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பினால் நியமனம் செய்யப்பட்டுள்ள தாய்லாந்து நாட்டவரான பெண் மருத்துவ நிபுணரொருவரால் இலங்கையில் மேற்படி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த ஆய்வில் நோயாளர்களின் நோய்த்தன்மை உக்கிரமடைவதற்குத் தவறான விதத்தில் சேலைன் உட்செலுத்தப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு உயிர்கொல்லி நோய் விஞ்ஞானப் பிரிவின் உடலியல் மருத்துவ நிபுணரான கோலித்த செல்லஹேவா இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

மரணமடைந்த டெங்கு நோயாளர்களது நோய் உறுதிப்படுத்தல் குறிப்புக்கள் மற்றும் அவர்களுக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ள விதத்தைப் பரிசீலித்தபோது, இது தெரியவந்துள்ளது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட 50 நோயாளர்களுள் அரைவாசிக்கு மேற்பட்டோருக்குத் தேவையான அளவுப் பிரமாணத்தை விட அதிகளவில் சேலைன் ஏற்றப்பட்டுள்ளது.

ஏனையோருக்கு குறைந்த அளவுப் பிரமாணத்திலேயே சேலைன் உட்செலுத்தப்பட்டுள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்று மருத்துவர் செல்லஹேவா தெரிவித்துள்ளார்.

டெங்கு நோயாளர்களுக்குச் சிகிச்சைகள் வழங்குவது தொடர்பாக முறையான மருத்துவ ஆலோசனை இல்லாமையே இந்த நிலைப்பாட்டுக்குக் காரணமாகியுள்ளதாக மருத்துவ நிபுணர் கோலித்த செல்லஹேவா மேலும் தெரிவித்துள்ளார். (ம-22)

# சுற்றுலா வர விரும்புவோருக்கு இணையத்தளம் மூலம் விசா

## அரசு தீர்மானம்

கொழும்பு, ஜன. 3

இலங்கைக்கு சுற்றுலாவுக்காக வர விரும்புவோருக்கு இணையத்தளம் மூலம் விசா பெற்றுக்கொள்ள அனுமதிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த வெள்ளியன்று மாலை அலரி மாளிகையில் நடந்த கூட்டத்திலே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

2011ஆம் ஆண்டு சுற்றுலா ஆண்டாக அறிவிக்கப்பட்ட நிலையில், வெளிநாடுகளிலுள்ள தூதரகங்களுக்குச் செல்லும் பயணிகளுக்கு ஏற்படும் சிரமங்களை இல்லாமல் செய்யவே இந்த ஏற்பாட்டை செய்யும்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

இந்த இணையத்தளம் வருடத்தின் 365 நாள்களும் 24 மணித்தியாலங்களிலும் செயற்படும்.

கலந்துரையாடலில் அமைச்சர்களான ஜி.எல். பீரிஸ், பசில் ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரும் கலந்து கொண்டனர். (சி)

# சிறார்களுக்கு எதிரான குற்றங்கள்; 2010 இல் 4,200 முறைப்பாடுகள்

சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் சம்பந்தமாக 2010 ஆம் ஆண்டில் சுமார் 4,200 முறைப்பாடுகள் சிறுவர் மகளிர் பொலிஸ் செயலணிக்குக் கிடைத்துள்ளன. சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகம், கடத்தல், வல்லுறவு உள்ளிட்ட 2,033 முறைப்பாடுகளும், 1,173 சிறு முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன என செயலணி தெரிவித்துள்ளது. அண்மையில் அநுராதபுரத்தில் நடைபெற்ற சிறுவர் அபிவிருத்திக்கான குழுக் கூட்டத்தில் சிறுவர் மற்றும் பாதுகாப்பு அமைச்சருக்குக் கிடைத்துள்ள தகவல்களின்படி அநுராதபுர மாவட்டத்தில் மட்டும் 162 சிறுவர்கள் இம்சைப்படுத்தப்பட்டுள்ளனர். 2009ஆம் வருடத்தில் இத் தொகை 165 ஆக இருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# ஊவா வெல்லஸ்ஸ பல்கலையில் உளச்சார்புப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஜன.3

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழத்தின் உளச்சார்புப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் தினம் எதிர்வரும் 18ஆம் திகதியுடன் முடிவடைவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழகத்தில் உளச்சார்பு பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்கள் ஜி.சீ.ஈ (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று பாடங்களிலும் 'எஸ்' பெறுபேற்றை பெற்றிருப்பதுடன் பொதுப் பரீட்சையில் 30 வீதம் குறையாத புள்ளியினையும் பெற்றிருக்கவேண்டும்.

விண்ணப்பத்துடன் ஒவ்வொரு பாடத்துக்குமான பரீட்சைக் கட்டணமாக 250 ரூபாவை வங்கியில் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டு மற்றும் ஜி.சீ.ஈ (உ/த) 2010 பரீட்சை பெறுபேற்றின் போட்டோக்கொப்பி பிரதி, தேசிய அடையாள அட்டையின் போட்டோக்கொப்பி பிரதி என்பனவும் இதனுடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

பாடக் கட்டணங்களை 31 14820 என்ற இலங்கை வங்கியின் பதுளை பிராந்தியக் காரியாலயத்தில் வரவு வைக்கப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் போது கடித உறையின் இடது பக்க முலையில் 'Aptitude test 2010/2011' என்று குறிப்பிட்டு பிரதிப் பதிவாளர், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் பாசறை வீதி, பதுளை என்னும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

மேலும் விண்ணப்பப் படிவத்தில் கேட்கப்பட்டுள்ள நகர இலக்கமாக, யாழ்ப்பாணம் (10) மன்னார் (12), வவுனியா (14) என்ற இலக்கங்களை குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். (ம-15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# DSI ரயரும் ரியூப்பும்

## சில்லறை விலைப்பட்டியல் (2011.01.01 தொடக்கம்)

### துவிச்சக்கர வண்டி ரயர்

| விவரம் | சில்லறை விலை | ரூபா |
|---|---|---|
| STANDARD NORMAL | 28" * 1 1/2" | 655.00 |
| HEAVY DUTY YELLOW LINE | 28" * 1 1/2" | 715.00 |
| STANDARD SCHOOL MATE | 28" * 1 1/2" | 540.00 |
| STANDARD NO PUNCTURE | 28" * 1 1/2" | 620.00 |
| LEISURE RIDING -GREEN LINE | 700 * 35 | 495.00 |
| SPORT | 26" * 1 3/8" | 655.00 |
| SPORT SCHOOL MATE | 26" * 1 3/8" | 540.00 |
| RACING GUM WALL | 27" * 1 1/4" | 645.00 |
| RACING FULL BLACK | 27" * 1 1/4" | 620.00 |
| RACING | 27" * 1 3/8" | 670.00 |
| RACING | 700 * 20/22/23 | 645.00 |
| MOUNTAIN GUM WALL | 26" * 2.125"/1.9"/1.75" | 675.00 |
| MOUNTAIN FULL BLACK | 26" * 2.125"/1.9"/1.75" | 665.00 |
| MOUNTAIN | 26" * 2.3" | 675.00 |
| MOUNTAIN SINGLE STRIP | 26" * 2.125"/1.9"/1.75" | 675.00 |
| MOUNTAIN DOUBLE STRIP | 26" * 2.125"/1.9"/1.75" | 685.00 |
| SPORT | 26" * 1 1/2" | 580.00 |
| MOUNTAIN | 24" * 2.125"/1.9"/1.75" | 615.00 |
| SPORT | 24" * 1 3/8" | 600.00 |
| SPORT | 24" * 1 1/2" | 600.00 |
| B. M . X | 20" * 2.125"/1.9"/1.75" | 540.00 |
| B. M . X | 16" * 2.125"/1.9"/1.75" | 465.00 |
| B. M . X | 14 " * 1 3/8" * 1 5/8" | 395.00 |
| B. M . X | 12.5" * 1.75" * 2 1/4" | 360.00 |

### மோட்டார் சைக்கிள்கள் ரயர்

| விவரம் | சில்லறை விலை | ரூபா |
|---|---|---|
| MC TYRES | | |
| 350 * 8 - 4 PR | SRI/MC- 14 | 2,210.00 |
| 300 * 10 - 4 PR | SRI/MC- 30 | 1,970.00 |
| 350 * 10 - 4 PR | SRI/MC- 05 | 2,285.00 |
| 350 * 10 - 4 PR (NEW) | SRI/MC- 20 | 2,435.00 |
| 100 / 90 * 10 - 4 PR | SRI/MC- 21 | 2,400.00 |
| 275 * 14 - F - 4 PR | SRI/MC- 04 | 2,250.00 |
| 275 * 14 - R - 4 PR | SRI/MC- 03 | 2,250.00 |
| 250 * 16 - (F & R) - 4 PR | SRI/MC- 27 | 1,930.00 |
| 300 * 16 - R - 4 PR | SRI/MC- 10 | 3,055.00 |
| 350 * 16 - R - 4 PR | SRI/MC- 09 | 3,295.00 |
| 110/ 90*16- 4 PR MEGA SPORT | SRI/MC- 34 | 5,650.00 |
| 110/ 90*16 -4 PR TUBE LESS | SRI/MC- 34 | 6,130.00 |
| 225 * 17 - F - 4 PR | SRI/MC- 07 | 1,880.00 |
| 250 * 17 - F - 4 PR | SRI/MC- 02 | 2,085.00 |
| 250 * 17 - R - 4 PR | SRI/MC- 01/03 | 2,085.00 |
| 275 * 17- F - 4 PR - RIB | SRI/MC- 31 | 2,370.00 |
| 275 * 17- R - 4 PR | SRI/MC- 37 | 2,370.00 |
| 300 * 17 - F - 4 PR | SRI/MC- 02 | 2,815.00 |
| 300 * 17 - R - 4 PR | SRI/MC- 01 | 2,815.00 |
| 300 * 17 - R - 4 PR X MILE | SRI/MC- 35 | 3,210.00 |
| 90/ 90*17- F - 6 PR SAFE RUNNER | SRI/MC- 32 | 3,800.00 |
| 90/ 90*17- F - 6 PR TUBE LESS | SRI/MC- 32 | 4,460.00 |
| 100/ 90*17 R -6 PR MASTER GRIP | SRI/MC- 33 | 4,545.00 |
| 100/ 90*17 R -6 PR DISCOVERY | SRI/MC- 38 | 4,980.00 |
| 250*18 - F - 4 PR | SRI/MC- 08 | 2,170.00 |
| 275 * 18 - F - 4 PR | SRI/MC- 15 | 2,680.00 |
| 275 * 18 - F - 4 PR SUPERIOR | SRI/MC- 31 | 2,575.00 |
| 275 * 18 - R - 4 PR | SRI/MC- 06 | 2,425.00 |
| 300 * 18 - R - 4 PR | SRI/MC- 11 | 2,640.00 |
| 300 * 18 - R - 4 PR "NG" | SRI/MC- 18 | 2,765.00 |
| 300 * 18 - R - 4 PR SUPERIOR | SRI/MC- 28 | 3,120.00 |
| 300 * 18 - R - 4 PR SUPER PLUS | SRI/MC- 36 | 3,315.00 |
| 325 * 18 - R - 4 PR SUPERIOR | SRI/MC- 24 | 3,440.00 |
| 90 / 90 * 18 R - 4 PR TUBE LESS | SRI/MC- 26 | 4,330.00 |
| 100 / 90 * 18 R - 4 PR TUBE LESS | SRI/MC- 25 | 4,820.00 |
| 1.10/1.00*18 R -4 PR(MOTOR CROSS) | SRI/MC- 17 | 7,755.00 |
| 410 * 18 - R - 4 PR - TRAIL | SRI/MC- 12 | 6,510.00 |
| 275 * 21 - F - 4 PR - TRAIL | SRI/MC- 13 | 4,180.00 |
| 80/1.00*21 F- 4 PR (MOTOR CROSS) | SRI/MC- 16 | 5,265.00 |
| THREEWHEELER TYRES | | |
| 400 * 8 - 6 PR | SRI/TW- 01 | 2,090.00 |
| 400 * 8 - SAVIBALA - 6 PR | SRI/TW- 04 | 2,510.00 |
| 400 * 8 - JAWAYA - 6 PR | SRI/TW- 05 | 2,785.00 |
| LIGHTTRUCK TYRES | | |
| 450 * 12 - 8 PR | SRI/LT- 01 | 5,230.00 |
| AGRICULTURE TYRES | | |
| 500 * 12 - LM - 4 PR | SRI/AGR- 01 | 5,585.00 |
| 500 * 12 - LM - 4 PR STREET | SRI/AGR- 02 | 5,570.00 |
| 600 * 12 - LM - 4 PR | SRI/AGR- 03 | 8,065.00 |

### துவிச்சக்கர வண்டி ரியூப்

| விவரம் சில்லறை விலை | ரூபா |
|---|---|
| JOINTED TUBE | |
| 28" * 1 1/2" STANDARD | 265.00 |
| 26" * 1 3/8" SPORT | 265.00 |
| 26" * 1 1/2" | 265.00 |
| 24" * 1 1/2" | 255.00 |
| 24" * 1 3/8" | 270.00 |
| 22" * 1 3/8" | 265.00 |
| 14" * 1 3/8" | 190.00 |
| 12" * 1 1/2" | 165.00 |
| MOULDED TUBE( SEAMLESS) | |
| 28" * 1 1/2" STANDARD | 255.00 |
| 26" * 1 3/8" SPORT | 255.00 |
| 27" * 1 1/4" RACING | 270.00 |
| 26" *1.75" /1.9"/ 2.125" | 270.00 |
| 26"*1.75"/1.9"/2.125" BPM (67.5mm) | 450.00 |
| 26"*1.75"/1.9"/2.125" BAM (48 mm) | 360.00 |
| 26" * 2.3" | 320.00 |
| 24"*1.9"/2.0"/2.125" | 265.00 |
| 20"*1.9"/2.0"/2.125" | 255.00 |
| 16"*1.9"/2.0"/2.125" | 245.00 |
| 14" * 1 3/8" BAM | 225.00 |
| DUTCH TUBE (SEAMLESS) | |
| 700 * 35 NDAC | 265.00 |
| 700 * 19/23 BPAC | 440.00 |

### மோட்டார் சைக்கிள் ரியூப்

| விவரம் சில்லறை விலை | ரூபா |
|---|---|
| 225 / 250 * 17 DSI | 595.00 |
| 275 / 300 * 14 DSI | 595.00 |
| 275 / 300 * 18 DSI | 690.00 |
| 350 * 10 DSI | 640.00 |
| 275 / 300 * 17 DSI | 690.00 |
| 100/90*17 DSI | 740.00 |
| 400 * 8 DSI | 600.00 |
| 250 * 18 DSI | 620.00 |
| 225 / 250 * 16 DSI | 595.00 |
| 275 / 300 * 21 DSI | 885.00 |
| 300 * 10 DSI | 615.00 |
| 410 * 18 DSI | 885.00 |
| 350 / 375 * 16 DSI | 765.00 |
| 450 / 500 * 12 DSI | 690.00 |
| 550 / 600 * 12 DSI | 785.00 |

ISO 9001 REGISTERED
MGMT SYS. RvA C.024
DNV Certification B.V. The Netherlands

சர்சன் றபர் தொழிற்சாலை (தனியார்)
ஜினசேன மாவத்த, மகர, கடவத்த.
தொலை பேசி இல : 011-2926065
பக்ஸ் : 011-2925179



## யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
## 2011ஆம் ஆண்டு பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

காலம்: 05.02.2011 சனிக்கிழமை நேரம்: முற்பகல் 10 மணி
இடம்: யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

அங்கத்தவர்களுக்கு அன்பான வேண்டுகோள்!

01. ஆராய வேண்டிய விடயங்கள் இருப்பின் அங்கத்தவர்கள் தங்கள் விண்ணப்பத்தை 22.01.2011க்கு முன் கழகப் பணிமனையில் சமர்ப்பிக்கவும்.

02. அங்கத்தவர்கள் மட்டுமே வாக்களிக்கவும் தேர்வில் இடம்பெறவும் அனுமதிக்கப்படுவர்.

03. நிகழ்ச்சி நிரல் அங்கத்தவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும். சகல கழக அங்கத்தவர்களையும் தவறாது சமூகமளித்து வலுவான நிர்வாக அமைப்பை ஏற்படுத்தி வளமான எதிர்காலம் அமைப்பீர்.

165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
31.12.2010

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.
(சி/574118)



## பகிரங்க ஏல விற்பனை

எமது சங்கத்தில் பயன்படுத்தாத நிலையில் உள்ள பஜாஜ் 39-1272 இலக்க ஓட்டோ வாகனம் 10.01.2010ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குச் சங்க வளாகத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. ஏலத்தில் வாகனத்தைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் வாகனத்தை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். தெரிவு செய்யப்படும் ஏலதாரர் அன்றைய தினமே பணத்தைச் செலுத்தி வாகனத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
(சி/574161)



STUDY& WORK IN
LONDON NEW ZEALAND
USA CANADA IRELAND SINGAPORE FRANCE
SWEDEN MALAYSIA INDIA NORWAY ITALY



1. மேற்கூறிய நாடுகளில் கல்வியைத் தொடர Visa க்கள் உறுதிப்படுத்தப்படும்.
2. IELTS தகைமை இல்லாமல் சில பாடநெறிகளுக்கு Visa பெற்றுத்தரப்படும். (No Need IELTS for Level 6 & 7 program)
3. Courses:- Business Management, Computer Science, Engineering, Travel & Tourism, Beauty Culture and over 200 Courses
4. Expert free guidance for sponsorship
5. எதிர்பார்க்கப்படும் குறைந்த தகைமை (G.C.E. O/L)
6. Part time job guaranteed

MILLENNIUM BUSINESS ACADEMY (MBA)
# 286, R. A. De Mel Mawatha, Colombo 03.
(Near the Liberty Plaza, Next to Don Karolis)
Hotline: Hasan - 0773507663
E-mail: hasan_abdul10@yahoo.com
Web: www.millmba.com



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள் — 1256 சிகப்பு

மிதுனம் 05 42 48 55 — 31-12-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 247,571 | 20/- | 4,951,420/- |
| 2 இலக்கங்கள் | 22,727 | 40/- | 909,080/- |
| 1 இல. + லக்கினம் | 22,510 | 60/- | 1,350,600/- |
| 2 இல. + லக்கினம் | 2,105 | 200/- | 421,000/- |
| 3 இலக்கங்கள் | 607 | 1000/- | 607,000/- |
| 3 இல. + லக்கினம் | 62 | 10,000/- | 620,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 9,459,100/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 663 | | 630,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 296,248 | | 10,089,100/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,105,850/-

[illegible]

## இரண்டாவது வாய்ப்பு
வெற்றி இலக்கங்கள்

இடபம் 04 30 43 46 — ஜக்பொட் பரிசு ரூபா. 400,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 660 | 500/- | 330,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 400,000/- | |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 663 | | 630,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 500,000/-

[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார ரீதியிலான பாடசாலைப் பையை யாழ். மாணவர்கள் பெற முடியாத நிலை

## பெற்றோர் கவலை தெரிவிப்பு

அச்சுவேலி,ஜன.3

கல்வி அமைச்சால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள சுகாதார ரீதியிலான பாதுகாப்பான உடல், உளரீதியில் பாதிப்பில்லாத பாட்சாலை ''பை''யை யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்கள் பெற்றுக் கொள்ள முடியாத நிலை உள்ளதாக மாணவர்களின் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கல்வி அமைச்சு மாணவர் நலன் கருதி புதிய பாடசாலை பையை உரிய முறையில் வடிவமைத்து அறிமுகம் செய்து 170 ஆவது முகவர்களிடம் பையைக் கொள்வனவு செய்யலாம் என அறிவித்துள்ளது.

அத்துடன் பாடசாலை 'பை' கொள்வனவு செய்வதற்கு அறிவிக்கப்பட்ட தயாரிப்பு விற்பனை முகவர்களின் பெயர் விவரப் பட்டியலும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் யாழ்ப்பாணம் உட்பட வடபகுதியைச் சேர்ந்த முகவர் பெயர் எதுவும் குறிப்பிடப்படவில்லை. முழுமையாக வெளிமாகாணங்களை அதாவது தென்பகுதியைச் சேர்ந்தவர்களின் விவரமே உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மேற்படி முகவர்களுடன் தொடர்பு கொள்வதோ பாடசாலை பைகளின் மாதிரிகளைப் பார்வையிடுவதோ, விலைக் கோரல்களைப் பெற்று பைகளின் தரநிலையைத் தீர்மானிப்பதோ இயலாத விடயம் எனக் கூறுகின்றனர். மேற்படி பாடசாலைப் பைகள் ஐந்து வேறுபட்ட அளவுகளில் உள்ளன. அந்த வகையில் விலை வேறுபாடும் உள்ளது. இந்த விடயத்தில் வடக்கு மாகாண கல்வி நிர்வாகமோ எந்தவிதமான கருத்துக்களும் தெரிவிக்கவில்லை.

எனவே மாணவர்களின் ஆரோக்கியம் சார்ந்தது என அறிவிக்கப்பட்ட ''பை''யை ஆரோக்கியமான முறையில் பெற்றுப் பயன்படுத்த முடியாமல் இருப்பதாக மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (201-11-72)

# வீதிக்கருகில் பாழடைந்த கிணறு; அச்சத்தின் மத்தியில் பயணிகள்



கைதடி,ஜன.3

நாவற்குழி அரச உணவுக் களஞ்சியத்துக்கு முன்பாக ஏ-9 வீதிக்கு மிக அருகில் கிணறு ஒன்று பாழடைந்த நிலையில் இடிந்து காணப்படுகின்றது. இதனால் வீதியால் பயணம் செய்வோரும் வாகனங்களும் விபத்துக்குள்ளாகும் நிலை உள்ளதாகப் பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி வீதியில் காணப்படும் இந்தக் கிணற்றின் மேற்கட்டுக்கள் உடைந்த நிலையில் நிலத்தோடு நிலமாக உள்ளது. தற்போது பெய்து வரும் கடும் மழையால் நீர் நிறைந்து நிலத்து மட்டத்தில் கிணறு இருப்பதால் பலர் கிணறு இருப்பதை அறியாது இதில் தவறுதலாக வீழ்ந்து உயிராபத்தை எதிர்நோக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி கிணறு பல வருடங்களாக இதே நிலையில் இருப்பதை வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரும், யாழ். செயலக அதிகாரிகளும் கண்டும் இதனைப் புனரமைப்பதற்கோ அல்லது இடித்து மூடவோ நடவடிக்கை எடுக்காது இருப்பது கவலையளிப்பதாகவும் அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே, இந்த விடயத்தில் தகுந்த கவனம் எடுத்து பொது மக்களினது உயிரின் பெறுமதியை உணர்ந்து மேற்படி கிணற்றை மூடவோ, புனரமைக்கவோ நடவடிக்கை எடுக்கு மாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (201-288)

## கௌரவிப்பு...



ஊக்குவிப்பு: மானிப்பாய் [illegible] லயன்ஸ் கழகத்தினரால் கடந்தாண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சண்டிலிப்பாய் கல்விக்கோட்டத்தில் சித்தியடைந்த 77 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவன் ஒருவருக்கு 306பி மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.எஸ்.தங்கராஜா பரிசில் வழங்குகிறார்.(201)

# மானிப்பாய் ப.நோ.கூ. சங்கத்தின் கிளைகள் மூடப்படும் நிலையில்

சண்டிலிப்பாய்,ஜன.3

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தற்போது குறைந்த எண்ணிக்கையுடைய கிளைகளுடன் இயங்கி வருகின்றது. அந்த வகையில் முன்பு 23 கிளைகளுடன் இயங்கி வந்த இந்தச் சங்கம் தற்போது 14 கிளைகளுடன் செயற்பட்டு வருகின்றது.

இதேவேளை இயங்கி வரும் இந்தக் கிளைகளும் விரைவில் மூடப் படவுள்ளதாக பணியாளர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

மானிப்பாய், ஆனைக்கோட்டை, நவாலி, சுதுமலை, சண்டிலிப்பாய் ஆகிய ஐந்து கிராமங்களில் வசிக்கும் மக்களின் நலன் கருதி ஆரம்பிக்கப்பட்ட மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 23 கிளைகளை அமைத்து, மக்களுக்குச் சேவை செய்து வந்தது. இதனால் மக்களும் நன்மை அடைந்தனர்.

அண்மைக்காலமாகச் சங்கத்திற்கு ஏற்பட்ட எதிர்பாராத விதமான நட்டத்தைத் தொடர்ந்து, கிளைகள் நாளுக்கு நாள் மூடப்பட்டு இதுவரை ஒன்பது கிளைகள் மூடப்பட்டுள்ளன. மிகுதியாக இருக்கும் 14 கிளைகளில் மேலும் சில கிளைகளை மூடுவது பற்றி சங்க நிர்வாகம் ஆலோசித்து வருகிறது.

இதேவேளை, சங்கத்தின் தற்போதைய நிலையை உணர்ந்த சில பணியாளர்கள் தாமாகவே சங்கத்திலிருந்து விலகி வருகின்றனர். இதுவரை ஐந்து மாதங்களாகப் பணியாளர்களுக்கு வேதனம் வழங்கப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (201-115)

# வாக்காளரின் புதிய இடாப்புகள் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன

வலி.வடக்கு,ஜன.3

2010ஆம் ஆண்டுக்கான புதிய வாக்காளர் திருத்தம் செய்யப்பட்ட இடாப்புக்கள் பொது மக்களின் பார்வைக்கு வைப்பதற்காக யாழ். மாவட்ட தேர்தல் திணைக்கத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த இருபத்தைந்து வருடத்தின் பின்னர் வீடு வீடாக உரிய படிவங்கள் கொடுத்து பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.




உரிய இடங்களில் இல்லாதவர்கள் வெளிநாடுகளில் வாழ்பவர்கள், உரிய படிவங்கள் மீள நிரப்பிக் கொடுக்காத பலரின் பெயர்களும் வாக்காளர் இடாப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட தேர்தல் தொகுதிகள் தோறும் ஏற்கனவே வாக்காளர் இடாப்பில் பெயர்கள் இணைக்கப்பட்டிருந்தன. ஆயிரக்கணக்கானவர்களின் பெயர்கள் நீக்கப்பட்ட நிலையில் 2010 இற்கான வாக்காளர் இடாப்பு தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வாக்காளர் இடாப்புகளை பிரதேச செயலகங்கள், கிராம அலுவலர் அலுவலகங்கள், பிரதேச சபைகள் என்பவற்றில் பார்வையிட முடியும்.

நீக்கப்படும் பெயர்கள் அடங்கிய 'ஏ' நிரல் பட்டியலும், புதிதாக சேர்த்துக் கொள்ளப்படும் பெயர்கள் அடங்கிய 'பி' நிரல் பட்டியலும் பார்வைக்குவைக்கப்பட்டுள்ளன.

இந்த வாக்காளர் பட்டியல்கள் இன்று தொடக்கம் ஜனவரி 31ஆம் திகதிவரை பார்வைக்கு வைக்கப்படுமெனவும் இவை தொடர்பான முறைப்பாடுகளை இக்காலப்பகுதியில் மேற்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (201-207-86)

# குடிதண்ணீர் தேவை பூர்த்தி

கைதடி,ஜன.3

கைதடி மத்தி வளர்மதி கல்விக் கழக மாணவர்களின் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக சுவிஸில் வசிக்கும் நா.தங்கராஜா மற்றும் லண்டனில் வசிக்கும் சி.குகேஸ் ஆகியோர் இணைந்து குழாய்க் கிணறு ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இந்தக் குழாய்க் கிணறு அமரர்களான இராசசுந்தரம், தவராஜா, சின்னத்துரை, சின்னம்மா ஆகியோரின் நினைவாகவே அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வளர்மதி கல்விக் கழக ஆசிரியர்கள், மாணவர்கள் வளர்மதி சனசமூக நிலைய நிர்வாகத்தினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



இந்தக் குழாய்க் கிணற்றுடன் மின்சாரத்தில் இயங்கும் நீர்ப்பம்பியையும் மேற்படி கல்வி நிலையத் தலைவரிடம் வழங்கியுள்ளனர்.

இந்தக் குழாய்க் கிணற்றை மாணவர்களின் பாவனைக்காக அமரர்.இராசசுந்தரத்தின் மனைவி திருமதி தவமணி திறந்து வைத்துள்ளார். (204-288)

# கட்டாக்காலிகளால் நெற்பயிர்கள் சேதம்

தென்மராட்சி தெற்கு தனங்கிளப்பு, மறவன்புலோ ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்செய்கைப் பயிர்கள் பன்றிகள், கட்டாக்காலி மாடுகள் ஆகியவற்றினால் அழிக்கப்படுவதாக நெற் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நெற்பயிர்கள் கதிர்கள் வெளிவரும் இந்தவேளையில் மிருகங்களால் பயிர்கள் அழிக்கப்படுவது குறித்து கவலை தெரிவித்த நெற் செய்கையாளர்கள் கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளைக் கோரியுள்ளனர். (201-207)

# தூசிகள் கிளம்பும் நிலையில் வீதிகள் பயணிப்போர் அசௌகரியத்தில்

யாழ்ப்பாணம்,ஜன.3

யாழ்.குடாநாட்டின் வீதிகளில் பொதுமக்கள் பயணிக்க முடியாதளவிற்கு தூசிகள் கிளம்புவதால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.குடாநாட்டில் கடந்த மாதம் பெய்த தொடர் மழை காரணமாக முக்கிய வீதிகள் உட்பட பல வீதிகள் மிக மோசமாகச் சேதமடைந்திருந்தன. இவற்றில் அதிகமாக சேதமடைந்த சில வீதிகளுக்கு மதவாச்சியிலிருந்து கொண்டு வரப்பட்ட தரப்படுத்தப்பட்ட கல்லின் மூலம் தற்காலிகமாக செப்பம் செய்யப்பட்டன.

வெயில் காலங்களில், குழிகளில் நிரப்பப்பட்ட மண் மற்றும் குழிகளால் வெளிக் கிளம்பிய மண்ணும் கனரக வாகனங்கள் செல்லும் போது தூசிகளாக பறப்பதால் ஏனையவர்கள் பயணிக்க முடியாதநிலை ஏற்படுகின்றது.

அத்துடன் மேற்படி தூசிகளால் ஒரு கையினால் மூக்கைப் பொத்தியபடி வீதிகளில் பயணிக்க வேண்டி ஏற்படுகின்றது. இதனால் சில வேளைகளில் விபத்துக்களும் சம்பவிக்கின்றன. அத்துடன் தூசிகளை சுவாசிப்பதனால் சுவாச நோய்களுக்கும் ஆளாக வேண்டி ஏற்படுகின்றது.

எனவே வீதி அபிவிருத்தி அதிகார சபையினர், பொது மக்களின் இத்தகைய அசௌகரியங்களைப் புரிந்து கொண்டு வீதிகளை உரிய முறையில் புனரமைத்துத் தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (201-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**
வரவேண்டிய பணவரவு ஒன்றைக் கேட்டு வாங்குவீர்கள். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காகச் சில செலவுகளைச் செய்வீர்கள். நண்பர்களுடன் சேர்ந்து தொழில் ரீதியாகச் சில நல்ல காரியங்களைச் செய்ய முற்படுவீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட வேலை நெருக்கடிகளால் அவதிப்படலாம். விருந்து, விசேடம் உண்டு.

**இடபம்:**
சக ஊழியர்கள் வழியில் பெருமைப்படும் உதவிகள் கிடைக் கலாம். வருமானத்தைப் பெருக்கும் வழிகளில் நாட்டம் செல்லும். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு. பணிபுரிவோர் மேலதிகாரிகளின் ஆலோசனைகளைப் பெறலாம். கடன் மிகுதிகளைச் செலுத்துவீர்கள்.

**மிதுனம்:**
பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் சம்பவங்கள் நடக்கலாம். பல நாள்களாக மனதைக் குடைந்து கொண்டிருந்த பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். தொலைபேசி வழிச்செய்திகள் தொல்லை தருவதாக அமையும். சிலருக்குக் கொடுத்த வாக்கை அவசரமாக நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் உருவாகலாம். மந்தம், கவனமாகச் செயற்படுவீர்கள்

**கடகம்:**
பணிபுரியும் இடத்தில் கோபமாக நடந்து கொள்ளலாம். தாய் வழி உறவுகளால் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். பிள்ளைகளுடன் சந்தோஷமாக பொழுதைக் கழிப்பதில் நாட்டம் செல்லும். பேச்சைக் குறைத்து எந்த விடயத்திலும் செயலில் காட்ட நினைப்பீர்கள். அலைச்சல், திரிச்சல் உண்டு. உடல் நலத்தில் அதிகஅக்கறை காட்டுவீர்கள்.

**சிங்கம்:**
அதிக செலவு இல்லாமல் எதிலும் சிக்கனமாக காரியங்களை முடிப்பீர்கள். மனதிற்கு இதம் தரும் செய்தி ஒன்றை கேட்கலாம். குடும்ப உறுப்பினர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். மாற்று மத நண்பர்கள் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். மற்றவர்கள் ஆதாயம் பெற உதவிகரமாக இருப்பீர்கள்.

**கன்னி:**
உறவுகள் வலுக்கும் நாள். வீடு, இடமாற்றங்கள் தொடர்பான சிந்தனைகள் அதிகரிக்கும். மாமன், மைத்துனர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். நாடி வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். பணிபுரிவோர் அலுவலகத்தில் சிலருடன் வாக்குவாதம் செய்யலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம்.

**துலாம்:**
எதிர்பார்த்த பணவரவுகள் எளிதில் வந்து சேரும் நாள். மனைவி வழியில் உருவான தொல்லைகள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். காலை நேரத்தில் முக்கியமான நபர் ஒருவரைச் சந்திக்க நேரிடலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். வியாபாரிகள் உற்சாகமாகக் காணப்படுவர். கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு.

**விருச்சிகம்:**
ஆரோக்கியக் குறைவுகளைத் தவிர்க்க உடல் நலத்தில் கவனம் அவசியம். முக்கியமான வேலை ஒன்றுக்காக வெளியூர்ப் பயணம் செல்லலாம். புதியவர்கள் சிலரின் உதவி கிடைக்கும். ஒருவர் உதவி செய்ய முன்வந்தும், கௌரவம் கருதி அதை வேண்டாம் என, மறுப்பீர்கள். உங்களின் யோசனைகளுக்குக் குடும்பத்தினர் மத்தியில் வரவேற்பு உண்டு.

**தனுசு:**
உங்களுக்கு உதவி செய்த ஒருவருக்கு பதில் உதவி செய்வீர்கள். பொல்லாத உறவினர்களால் ஏற்பட்ட தொல் லைகள் விலகி நிம்மதி பெறுவீர்கள். ஆடம்பரப் பொருள் கள் வாங்குவதில் நாட்டம் செல்லும். நிதி நிலைமையில் மேம்பாடு காணப்படும். நண்பர் ஒருவர் உங்களுக்காகச் செலவு செய்யலாம். வெளியிடங்களுக்குச் செல்லும் போது சிலரின் அறிமுகம் கிட்டும்.

**மகரம்:**
நீண்ட நாள்களாகத் தள்ளிக் கொண்டே வந்த காரியங்கள் இன்று நடக்க வாய்ப்பு உருவாகும். பழகிய சிலர் மூலம் பணவரவுகளைப் பெறலாம். சொத்து விவகாரங்களில் சிறு பிரச்சினை ஏற்படலாம். தொழில் ரீதியான உங்களின் செயற்பாடுகளை மற்றவர்கள் பாராட்டலாம். இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும். குடும்ப பாசம் கூடும்.

**கும்பம்:**
அரசியல்வாதிகளை நம்பி இறங்கிய காரியங்கள் நல்ல விதமாக முடியலாம். திடீரென உருவாகும் நோய் உபாதைகளால் அவதிகளுக்கு ஆள்படலாம். நண்பர்களின் செயற்பாட்டினால் வியப்படைவீர்கள். மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும் நாள். மருத்துவசிகிச்சைக்கு செல்லும் சிலருடன் துணைக்குச் செல்லலாம். சிலர் மீது சந்தேகப்படுவீர்கள்.

**மீனம்:** கனவுகளால் தொல்லைகள் உண்டு. சேமிப்பு கரையும் வகையில் எதிர்பாராத திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் நாணயக் குறைவுக்கு ஆள்படலாம். தேவையற்ற பொருள் களை வாங்க நேரிடலாம். வெளியிடங்களுக் குச் செல்லும் போது நேரத்தில் பஸ் கிடைக்காமல் கூடுதல் நேரம் காத்திருக்கலாம்.

# உலக ஈரநிலங்கள் தினத்தையொட்டி புகைப்படப் போட்டிக்கு ஆக்கம் கோரல்

யாழ்ப்பாணம்,ஜன.3

எதிர்வரும் பெப்ரவரி 2 ஆம் திகதி அனுட்டிக்கப்படவுள்ள உலக ஈரநிலங்கள் தினம் மற்றும் ரம்ஸா ஒப்பந்தத்தின் 40 வருட நிறைவு என்பவற்றையொட்டி வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் மத்திய சூழல் அதிகாரசபை ஒன்றிணைந்து புகைப்படப் போட்டியை நடத்தவுள்ளன.

போட்டிக்கான ஆக்கம் ஈரநிலமொன்றின் இயற்கை அழகு வெளிப்படும் விதமாக அமைந்த புகைப்படம் எடுக்கப்படல் வேண்டும். அத்துடன் ''நீரும் ஈரநிலத்துக்குமான காடுகள்'' என்னும் தலைப்பில் அமைதல் வேண்டும்.

மேற்படி போட்டி திறந்தபோட்டி, பாடசாலைப்போட்டி என இருவகையாக இடம் பெறவுள்ளது. அந்தவகையில் திறந்த போட்டிக்குக் கறுப்பு, வெள்ளை அல்லது வர்ணத்தில் இயற்கை வனப்பு மற்றும் செயற்பாடுகள் கொண்ட ஈரநிலத்தின் 3 புகைப்படங்கள் முற்படுத்தல் வேண்டும்.

பாடசாலை மட்டத்திலான போட்டியில் இயற்கை வனப்பு மற்றும் செயற்பாடுகள் உட்பட்ட ஒரு போட்டோ மட்டும் போட்டியில் சமர்ப்பிக்க வேண்டும்.போட்டிக்கான நிபந்தனைகள் வருமாறு:-இலங்கைப்பிரஜையாக இருக்க வேண்டும், பாடசாலை விண்ணப்பதாரர்கள் இலங்கையிலுள்ள ஏதாவதொரு பாடசாலை ஒன்றில் கல்வி கற்கின்றவர் என்பதோடு தமது விண்ணப்பங்களை மேற்படி பாடசாலை அதிபர் உறுதிப்படுத்த வேண்டும். அனைத்துப் புகைப்படங்களும் இலங்கையில் பிடிக்கப்பட்டதாக இருக்கவேண்டும். அத்துடன் அந்தப் புகைப்படங்களில் டிஜிற்றல் மாற்றங்கள் எதுவும் செய்திருக்கக் கூடாது. புகைப்படத்துடன் அதன் நகல் பிரதியும் இமேஜ் சீடியும் ஸ்கேன் செய்து அனுப்ப வேண்டும். புகைப்படத்தின் நீளம் ''12-18'' அளவாக இருப்பதோடு அகலம் ''8-12'' ஆகவும் இருக்க வேண்டும். படங்கள் மவுன்ட், லெமினேட்டின் முறையில் இருத்தல் கூடாது. புகைப்படத்தின் பின் பக்கத்தில் விண்ணப்ப மாதிரியின்படி விண்ணப்பதாரியின் பெயரும் விலாசமும் எழுதப்படல் வேண்டும். பாடசாலைப் போட்டியாளர்கள் மேலதிகமாக பாடசாலையின் பெயர், பிரிவின் பெயர் ஆகியவற்றை எழுத வேண்டும். மேலே புகைப்படம் பிடித்த இடம் கமரா மற்றும் லென்ஸ் பற்றிய சிறு விளக்கமும் குறிப்பிடப்படல் வேண்டும்.மேற்படி போட்டிக்கு அனுப்பப்படும் அனைத்துப் புகைப்படங்களினதும் உரிமை விண்ணப்பதாரியினதாக இருக்க வேண்டும். அத்துடன் இதற்கு முன்னர் ஏதாவது போட்டிக்கு சமர்ப்பிக்கப்படாததாகப் புகைப்படம் இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் புகைப்படங்களை திணைக்களம், தனது ஊடக விளம்பரச் செயற்றிட்டங்களுக்கு பயன்படுத்தும். போட்டிக்குவரும் புகைப்படங்கள் திரும்பி அனுப்பப்படமாட்டாது. போட்டிக்கான புகைப்படங்களை ''வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், இலக்கம் 811/A, ஜயந்தபுர, பத்தரமுல்ல'' என்னும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்துக்கோ அல்லது வனசீவிகள் பாதுகாப்புத் திணைக்கள பிரதேச அலுவலகங்களுக்கோ (பிரதிப்பணிப்பாளர் அலுவலகம், உதவிப் பணிப்பாளர் அலுவலகம்) தேசிய பூங்கா அலுவலகங்களுக்கோ எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் தபால் மூலமோ, நேரடியாகவோ சமர்ப்பிக்க முடியும்.

மேலதிக விவரங்களுக்கு வனசீவிகள் பாதுகாப்புத் திணைக்களம் 011-2888585, 2871531, மத்திய சுற்றாடல் அதிகாரசபை 011-2872346, 2872278 என்னும் தொ.பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம். (201)

## நன்மைக்கான வெள்ளோட்டம்....





தேருக்கேற்ற கலசம்: இணுவில் மருதனார்மடம் சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தின் சித்திரத் தேர் வெள்ளோட்ட நிகழ்வில் தேர்க்கலசம் வீதியுலாவாக எடுத்துவரப்பட்டுத் தேரில் பொருத்தப்படுகின்றது. (86)

## எனக்காக.... எல்லாம் எனக்காக........



முன்னொரு காலத்தில் இடம்பெற்ற அரசசபை ஒன்றில் அந்த்ரே ஒருமுறை ஓர் அழகான பட்டுத்தொப்பி அணிந்து கொண்டு வருகின்றார். அந்தத் தொப்பியைப் பார்த்தும் அரசருக்கே அதன் மீது ஆசை வந்துவிட்டது. ''எனக்குத் தருவாயா?'' என்று வாய்விட்டுக் கேட்டுவிட்டார் அரசர். அந்த்ரே சிரித்தபடி

''தொப்பியைத் தந்தால் நீங்கள் என்ன தருவீர்கள்?'' என்று கேட்டான்.

''நீ கேட்டதைத் தருகின்றேன்'' என்று மிடுக்குடன் சொன்னார் அரசர். அந்த்ரே ''உங்கள் மகுடத்தைத் தர முடியுமா?'' என்றார்.

திடுக்கிட்ட அரசர் ''என்ன விளையாடுகிறாயா'' இதுவும் அதுவும் ஒன்றாகுமா?''

என்று கோபப்பட்டார்.

''அரசே ஏழையாகிய எனக்கு இந்தத் தொப்பி ஒரு மகுடத்திற்குச் சமம்தான். உங்களுக்கு அது எப்படியோ அப்படித்தான் எனக்கும் இது'' என்கிற அருமையான கருத்தை உதிர்த்து விட்டு மேலும்,

''உம்மிடம் இருப்பது ஒரு மகுடம். அது போல் என்னிடம் இருப்பது ஒரு தொப்பி. உம்மைப் போன்ற அரசர் ஓர் எழையின் தொப்பிக்கு ஆசைப்படலாமா?'' என்று கேட்டுவிட்டு நகருகிறான் அந்த்ரே.

மன்னர் மௌனமானார். மறுநாள் சபைக்கு அந்த்ரே தொப்பியின்றி வருகிறான். ''உன்னுடைய தொப்பி எங்கே?'' என்று மன்னர் கேட்க ''பிறர் ஆசைப்பட்ட பொருளை வைத்திருக்கக் கூடாது என்று தோன்றியது வீசி எறிந்து விட்டேன்'' என்று கூறிவிட்டுக் குழந்தை போல் சிரித்தான்.

அரசரோ ''இவன் ஆசைப்பட்ட மகுடத்தை நாம் இப்படி எறிய முடியாதே'' என்று வெட்கத்தில் கூனிக் குறுகிப்போய் நின்றார்.

அந்த்ரே செல்வனாகிவிட்டான் மன்னரோ பிச்சைக்காரர் ஆகிவிட்டார்.

பல சந்தர்ப்பங்களில் பெரும் செல்வர்கள் பிறர் பொருளுக்கு ஆசைப்பட்டு ஒரு பிச்சைக்காரனைப் போல நடந்து கொள்கிறார்கள்.

பிறர் பொருளுக்கு ஆசைப்படுகிறவர்கள் தான் உலகத்தையே போர்க்களமாக்கி, மக்களைப் பிணங்களாக்கி மண்ணுலகையே அதிக துர்நாற்றம் உடையதாக்கி இருக்கிறார்கள்.

சுகி.சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையறுநிலைச் சமூகத்தை கைவிட்டு ஒதுங்கும் புலம்பெயர் மக்கள்...!

> அரசைப் பொறுத்தவரையில் தமிழர்கள் தமிழர்களுக்கு உதவுவதை தடுக்கப்போவதில்லை. ஆனால், பாதிக்கப்பட்ட நமது மக்களுக்காக அரசு பெரியளவில் எதனையும் செய்யப்போவதில்லை.

"**போர்** அழிவுகளைக் கொண்டு வரும் - போராட்டம் அழிவிலிருந்து மீட்சியைக் கொண்டுவரும்"- இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர்களில் ஒருவர் மேடையில் பேசும் போது, அதனை பார்வையாளர் வரிசையில் அமர்ந்த வாறு மயிர்கூச்செறியகேட்ட அனுபவத்தை இப்போது நினைத்துப்பார்க்கும் போது எங்குமே வெறுமை மட்டும்தான்மிஞ்சுகிறது.

சமீபத்தில் கிளிநொச்சிப் பக்கம் சென்ற போது நான் அவதானித்த சில விடயங் களால் மேற்படி வாசகத்தையே மீண்டும் ஒரு முறை அசை போட்டுக் கொள்ள நேர்ந்தது.

**வெல்லும் போராட்டமே மீட்சியைத் தரும்**

போராட்டம் மீட்சியைக் கொண்டுவரும் என்பது உண்மைதான். ஆனால் அது வெற்றி பெற்றால் மட்டும்தான் என்பதை நாம் ஏனோ மறந்துவிட்டோம் போலும்.

இறுக்கமான மரபார்ந்த சமூகத்தில் இருந்து மேலெழும்பும் ஆயுதப் போராட்ட மொன்றின் தோல்வி என்ன வகையான சமூக நெருக்கடிகளைக் கொண்டு வரும் என்பதை முன்னர் எப்போதுமே நாம் நினைத்துப் பார்த்திருக்க மாட்டோம். அப்படி நினைக்க வேண்டிய தேவை களும் நம்மளவில் இருக்கவில்லை.

இன்று தமிழ்ச் சமூகம் என்பது ஒரு 'போருக்குப் பின்னரான சமூகம்' (Post war society) என்பதை நாம் தெளிவாகக் குறித்துக் கொள்ள வேண்டும்.

போருக்குப் பின்னரான சமூகத்தின் பிரச்சினைகளைத்தான் இன்று, போரில் நேரடியாக அகப்பட்ட மக்களும் முன் னாள் போராளிகளும் அனுபவித்து வருகின்றனர்.

**கையறுநிலைச் சமூக உருவாக்கம்**

தோல்வியடைந்த தமிழர் போராட் டம் ஒரு கையறு (Vulnerable Society) நிலைச் சமூகம் ஒன்றின் உருவாக்கத் திற்கு வழிவகுத்திருக்கின்றது என்பதே உண்மை.

இதில் எந்தவிதமான பின்புலமுமற்ற ஏழை மக்கள் தொடங்கி முன்னாள் போராளிகள் மற்றும் அவர்கள்தம் குடும்பங்கள் வரை அடக்கம்.

ஆனால், இங்கு மக்களது வாழ் நிலைமையும் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களின் வாழ்க்கை நிலைமையும் ஒன்றல்ல என்பதுதான் அடுத்து இங்கு நான் கண்டுகொண்ட விடயம்.

விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளி கள் எதிர் கொள்ளும் சமூக ரீதியான சிக்கல்கள் மிகவும் துயரமானவை.

இதில் குறிப்பாக பெண் போராளிகள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் மிகவும் சிக்கலானவை.

விடுதலைப்புலிகள் ஆயுத ரீதியாக வலுவாக இருந்த காலத்தில் ஓர் அரசுக் குரிய கட்டமைப்பைக் கொண்டிருந்த னர். பெரும்பாலும் அவர்கள் ஓர் அரசாகவே செயலாற்றினர்.

புலிகள் வலுவாக இருந்த காலத்தில் பெண் போராளிகள் சமூக ரீதியில் மிகவும் உயர்வாக மதிக்கப்பட்டனர்.

**பெண் போராளிகளின் அவலம்**

இந்தக் காலத்தில் பெண் விடுதலை பற்றி எழுதிய ஆய்வாளர் ஒருவர், "வரலாறு பின் நோக்கிச் செல்வதில்லை. புலிகளின் போராட்ட காலத்தில் நமது சமூகத்தின் மரபார்ந்த இறுக்க நிலை யில், சிந்தனைப் போக்கில் ஏற்பட்ட உடைவுகள், எப்போதுமே உடைவுண்ட பகுதிகள்தான் ஏனென்றால் வரலாறு பின் நோக்கிச் செல்வதில்லை". என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இன்றைய யதார்த்தத்தில் இருந்து நோக்கினால் இதில் எந்த உண் மையும் இல்லை.

புலிகளின் காலத்தில் பல பெண் போராளிகள் அமைப்பிற்குள்ளேயே திரு மணம் செய்து கொண்டனர்.

இவ்வாறு திருமணம் செய்து கொண்ட வர்கள் சாதி மற்றும், பிரதேச வேறுபாடு களைக் கடந்தவர்களாக இருந்த னர்.

அவ்வாறானதொரு சிந்தனை வலுவை புலிகள் அமைப்பு அவர்களுக்கு வழங்கி யது. ஆனால், இன்றைய யுத்தத்திற்கு பின்னரான சமூகத்தில் அவ்வாறான பெண் பேராளிகள் சிலர் சமூக ரீதியாக மிகவும் சிக்கலான நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர்.

சிலரது கதை இவ்வாறாகவும் உள்ளது. அதாவது,'பெண்போராளிமட்டக்களப்பைச் சேர்ந்தவர். அவர் போரில் கணவனை இழந்து விட்டார். கணவன் யாழ்ப்பாணத் தைச் சேர்ந்தவர். தற்போது கணவனின் பெற்றோர் அந்தப் பெண்ணை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர்.'

இவ்வாறு சாதி ரீதியான ஏற்றத்தாழ்வு களைக் கடந்து புலிகளின் மேற்பார்வை யில் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டவர்கள் பலர். அவ்வாறான பெண்களும் இப்படியான சிக்கல்களையே சந்திக்கின்றனர்.

போரில் கணவன் போராளி இறந்து விட்டான், அவனது வீட்டார் சாதியில் குறைந்த பிள்ளையை - மருமகளை ஏற்க மறுக்கின்றனர். சமீபத்தில் அவ் வாறானதொரு பெண் போராளியின் பிள்ளையை கணவனின் சகோதரன் பறித்துக் கொண்டு இந்தியாவிற்கு போன சம்பவம் ஒன்று கூட யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளது.

இவ்வாறான இடர்களை எதிர் கொள் ளும் பெண் போராளிகள் சிலரது நிலைமை மேலும் மோசமானது. கணவன் இல்லாத நிலையில் கணவனின் வீட்டாராலும் அதே நேரம் தங்களது பெற்றோராலும் ஒருமித்து நிராகரிக்கப் படும் சந்தர்ப்பங் களும் உண்டு. அவ்வாறானவர்கள் வாழ வழியற்று தனித்து அலைய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ளனர்.

விடுதலைப் புலிகள் அதிகாரத்தில் இருந்த காலத்தில் அனைத்து உறுப்பினர் களது வாழ்வியல் தேவைகளையும் பாரபட்சமின்றி நிறைவேற்றி வந்தனர் என்பது உண்மை.

**ஆதரவற்ற நிலையில்போராளிக் குடும்பங்கள்**

அவர்களின் காலத்தில் எல்லோருக்குமே காணிகள் இருந்தன. இவ்வாறு புலிகள் வழங்கிய காணிகளை [illegible] ஓர் அரச என்ற வகையில் அவர்களால் பகிர்ந்த ளிக்கப்பட்டது. இன்று ஒருஅழிவுக்கு பின் னர் அவ்வாறான அரச காணிகளை, இலங்கை அரசு போராளிகளின் குடும் பங்களுக்கு வழங்க முன் வருமா?

ஓர் உறுப்பினர் தனது அனுபவத்தை இவ்வாறு பகிர்ந்து கொண்டார். "எனக்கு வளவு என்றால் கிளிநொச்சியில் மட்டும் தான் உண்டு. இன்று யாழ்ப் பாணத்தில் வாடகை வீடொன்றில் தான் வாழ்கிறேன். ஆனால், எனது காணி எனக்கே கிடைக் குமா என்று தெரியவில்லை.

காணிக்கு சென்றால் ஊர் மக்களில் ஒருவரே எனக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்கிறார். இது முன்னர் நான் ஆயுதத்தைக் காட்டி வெருட்டி வாங்கியதாக கூறுகின்றார். பொலிஸ் அவரது கதையைத்தான் கேட்கிறது".

இது ஒருவரது கதை மட்டுமல்ல புலிகளின் காலத்தில் தங்களுக்கென்று காணித் துண்டொன்றை கொண்டிருந்த அனைத்து போராளிகள் மற்றும் அவர் களது குடும்பங்களின் நிலைமையும் இதுதான்.

நான் சாதாரணமாகக் கடையில் இருந்த ஒருவருடன் பேச்சுக் கொடுத்த போது அவர் சொன்னார், "பொட்டு அம்மானின் திருநகர் வளவுக்கே நான்கு பேர் உரிமை கொண்டாடுகின்றனர். இறுதியில் யாருக்கு கொடுப்பது என்று தெரியாமல் இராணுவம் அதனை சுவீக ரித்துக் கொண்டது".

இங்கு பிரச்சினை என்னவென்றால் இவ்வாறான விடயங்களில் இராணுவம், பொலிஸ் முடிவுகளை எடுக்க முடியாத ளவிற்கு பொதுமக்கள் மத்தியில் இருந்தே குழப்பமான தகவல்கள் வழங்கப்படு கின்றன.

பொதுவாக புலிகள் போரின் இறுதி நாள்களில் நடந்து கொண்ட அணுகு முறைகளால் அதிருப்தி அடைந்த மக்கள் விடுவிக்கப்பட்ட போராளிகள் மற்றும் போராளிக் குடும்பங்கள் தொடர்பில் அனுதாப உணர்வுடன் அவர்களை நோக்கும் நிலையில் இல்லை.

குறிப்பாக போரில் கணவனை இழந்து குடும்பத்தைத் தாங்கும் பொறுப்பில் தவிக்கும் பல முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களின் மனைவிமார் வாழ்வைக் கொண்டு நடத்துவதில் சமூகத்தின் ஆதரவும் உறவினர்களின் ஆதரவும் அற்று பெரும் துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

**அரவணைப்பும் இல்லாமல் தவிப்பு**

புலிகளின் பிரபலமான மூத்த உறுப்பி னர் ஒருவரின் மனைவி பிறிதொரு விடுவிக்கப்பட்ட உறுப்பினரிடம் தனது இயலாமையைச் சொல்லி அழுதிருக் கிறார்.

இத்தனைக்கும் அவர் அதிகாரத்தில் இருந்த காலத்தில் அவருக்கு புலம்பெயர் தேசங்கள் எங்கும் நண்பர்கள் நிரம்பி வழிந்தனர். ஆனால், அவரது குடும்பத் திற்கு உதவுவதற்கு இன்று யாருமற்ற நிலை இருப்பதாகவும் அந்த நண்பர் கவலையுடன் தெரிவித்தார்.

சமீபத்தில் பிரபல ஆங்கில ஊடக வியலாளர் டி.பி.எஸ்.ஜெயராஜ், முன் னாள் விடுதலைப்புலி உறுப்பினர் களின் மனைவிமார் சிலர் குடும்பத்தை கொண்டு நடத்த முடியாமல் விபச் சாரத்தை நோக்கிச் செல்லும் துர்ப்பாக் கிய நிலைக்கு ஆளாகியிருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார்.

உண்மையில் அவ்வாறான நிலைமை கள் ஏற்பட்டால் அது ஆச்சரியப்படக் கூடிய ஒன்றல்ல என்பதுதான் உண்மை.

அந்தளவிற்கு வறுமையும் சமூகத் தின் அரவணைப்பும் இல்லாமல் முன்னாள் போராளிகளின் குடும்பங்கள் அல்லல் படுகின்றன.

* *இறந்தவர்களைவிடத் தற்போது தடுப்புக் காவலில் உள்ள, படிப்படி யாக விடுதலையாகிக் கொண்டிருக்கும் இளைஞர், யுவதிகளின் நிலை என்ன?*
* *யுத்தத்தின் போது தமது கண் பார்வையை அல்லது அவயவங்களை இழந்தோரின் நிலை என்ன?*
* *முன்னாள் போராளிகளின் ஏழ்மை யான குடும்பங்கள் தமது பரிதாபகரமான வாழ்க்கையில் இருந்து விடுபடுவதற்கு வழி என்ன?*
* *புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக் கப்பட்டவர்கள் தமது வீடுகளில் தமக்கு உணவு கிடைப்பதில்லை என்று கூறுவது எவருக்காவது தெரியுமா?*
* *முன்னாள் பெண் போராளிகள், போராளிகளின் விதவை மனைவியர் தமது குழந்தைகளுக்கு உணவு ஊட்டு வதற்காக உலகின் மிகப் பழைமையான தொழிலில் ஈடுபட வேண்டி நேர்வது எவருக்காவது தெரியுமா?*
* *வெளிநாட்டில் உள்ள புலிகள் ஏராளமான பணம் வைத்திருக்கிறார் கள். ஆனால், இவர்கள் புலிகளுடன் இணைந்து போரிட்ட அல்லது வலுக் கட்டாயமாகச் சேர்க்கப்பட்ட கைவிடப் பட்ட நிலையில் உள்ள போராளி களுக்கு ஒரு சதமாவது வழங்கியிருக் கிறார்களா?*
* *விடுதலைப் புலிகளின் தலைவர் களின் மனைவிமார் உண்மையில் பிச்சைக்காரர்கள் போல் இருப்பது தெரியுமா?*

இணையத்தளத்தில் இது தொடர்பாக வெளியிடப்பட்ட கட்டுரைக்கு வாசகர் ஒருவர் கூறியிருந்த கருத்துக்களுக்கு பிரபல ஆங்கில ஊடகவியலாளர் டி.பி. எஸ்.ஜெயராஜ் மேற்கண்டவாறு பதில் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலைமைகளில் இருந்து அவர் களை மீட்டெடுக்க வேண்டியது, ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டத்தோடு இணைந்திருந்தவர்கள், அதனை ஆதரித்து நின்றவர்கள் என அனைவரது கடமையு மாகும்.

**புலம்பெயர்ந்தோர் கரிசனை தேவை**

ஒவ்வொருவரும் தமது துறை சார்ந்து இந்த விடயத்தில் தம்மால் முடிந்தவை அனைத்தையும் செய்தாக வேண்டும்.

குறிப்பாக நமது புலம்பெயர் சமூகம், அந்தச் சமூகத்தை வழிநடத்துவதாகக் காட்டிக் கொள்ளும் சகல அமைப்புக்களும் இது குறித்து தமது உடனடிக் கரிசனையை வெளிப்படுத்த வேண்டும்.

இங்கு நான் அவதானித்த ஒரு முக்கிய மான விடயம், முன்னாள் போராளிகள், போராளிகள் குடும்பங்கள் ஆகியோரைப் பொறுத்தவரையில் புலம்பெயர் தமிழ் சமூகம் உதவினால் மட்டுமே அவர்களுக்கு ஒரு சுபீட்சமான எதிர்காலம் உண்டு. இல்லாவிட்டால் அவர்கள் வறுமையால் சீரழிந்து போவதை எந்த வகையிலும் தடுக்க முடியாது.

அரசைப் பொறுத்தவரையில் தமிழர் கள் தமிழர்களுக்கு உதவுவதை அது தடுக்கப் போவதில்லை. ஆனால், அரசு பாதிக்கப்பட்ட நமது மக்களுக்காக பெரியள வில் எதனையும் செய்யப் போவதில்லை.

அரசைப் பொறுத்தவரையில் அதன் வாதம் மிகவும் தெளிவானது, இலங்கை யின் சகல பகுதிகளிலும் பல லட்சக் கணக் கான மக்கள் வறுமையில் வாடுகின்ற

(26ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி மனோன்மணி சோதிராசா

தோற்றம்
28.08.1935

மறைவு
14.01.2010

திதி: சதுர்த்தசி

அன்பின் உறைவிடமே!
நீங்கள் எமைப்பிரிந்து ஆண்டு ஒன்று ஆனதுவோ
இன்று போல இருக்கிறது உங்கள் பிரிவு
எப்படி நாம் ஆற்றுவோம்
குடும்பத்தின் உயர்வுக்காக பிணைப்புக்காக
நீங்கள் செய்த அர்ப்பணிப்புக்கள் தாம் எத்தனை
உறவினரை அயலவரை அன்புடனே நேசிக்கும்
அந்த நிறைவான இன்முகம்
கணவனை, பிள்ளைகளை
வாஞ்சையுடன் அரவணைக்கும்
அந்த அன்பு நிறை இன்முகம்
இனி எப்பிறப்பில் காண்போமம்மா
ஆலமரமாக எமக்கு நிழல் தந்தவரே
விழுதுகள் நாம் வழிதெரியாது தவிக்கின்றோம்
உங்களுடன் நாமிருந்த பசுமையான நாள்கள்
எம்மை மிக வாட்டி வதைக்குதம்மா
காணும் இடமெல்லாம் உங்கள் நினைவு
காலம் எங்கள் கவலைகளை மாற்றுமோ?
சிவன் நிழலில் உங்கள் ஆன்மா சாந்திபெற
உளமாரப் பிரார்த்திக்கின்றோம்.

34, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.
தொலை பேசி: 021 3737307, 0779217908.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(108333)

## வீதி சேதமடைந்ததால் போக்குவரத்து நெருக்கடி

சாவகச்சேரியிலிருந்து சங்கானைக்குச் செல்லும் 775 மார்க்க வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளதால் வாகனங்களில் செல்வோர் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக கனகன்புளியடிச் சந்தியிலிருந்து வண்ணாத்திப்பாலம் வரையிலான வீதியில் ஏற்பட்டுள்ள பெரும் குழிகளால் வாகனங்களில் செல்வோர் சிரமங்களை எதிர்நோக்குவதுடன் வாகனங்களுக்கும் பாதிப்பு ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. வீதி அகலிப்புத் திட்டத்தில் இந்த வீதியும் உள்ளடங்குவது குறிப்பிடத்தக்கது. (ம-207)

## பட்டாசு வெடித்து சிறுவனுக்குக் காயம்

புத்தாண்டு கொண்டாட வாங்கிய பட்டாசு வெடித்து சிறுவன் காயமடைந்தார்.

இச்சம்பவம் மந்துவிலில் இடம் பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த ச.துசிந்தன் (வயது 16) என்பவர் கை, கால் ஆகியவற்றில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார். (ம-207)


கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 பிறிமா, புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (100/=) 06.01.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவு செய்யவும். (பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப்படும்).

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.
(108305)

வடமாகாணத்தின் முதல் தர நிறுவனம் என்பது ஆன்றோரின் தெரிவு
தரம் 03 முதல் O/L வரை
தமிழ் / ஆங்கில மொழிமூலம்
3 ஆவது புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
அனுமதிக்கு முந்துங்கள்!!
- அதிபர்
The Express Institute
Irupalai, Kopay.


## மரண அறிவித்தல்

### திருமதி ஞானம்மா சிங்கநாயகம்
(வசாவிளான் வடமூலை)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் பத்தாவத்தை இளவாலையைத் தற்காலிக வசிப்பிடாகவும் கொண்ட திருமதி ஞானம்மா சிங்கநாயகம் (01.01.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சின்னப்பு தம்பதியரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி தமியாம்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சிங்கநாயகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, மரியரட்ணம், செபரட்ணம் மற்றும் திரேசம்மா, நேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஞானேஸ்வரி, குணேஸ்வரி, காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் தனேஸ்பரநாயகம், இராஜேஸ்வரி, சவுந்திரேஸ்வரி, லோகானந்தேஸ்வரி, செவ்வேஸ்வரநாயகம், மங்களேஸ்பரநாயம், சந்திரேஸ்பரநாயகம் (காப்புறுதி முகவர், இ.கா.கூட்டுத்தாபனம்) ஆகியோரின் பாசமிகு தாயும் தம்பிநாயகம், அமுதநாயகம், யூப்பிறேசியா, பத்திநாதர் (சமாதான நீதிவான்), காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் விஜயகுமார், புஸ்பராணி, ஜீவமலர், இரட்ணகுமாரி (ஆசிரியர்- யா/புனித ஹென்றி அரசர் கல்லூரி, இளவாலை) ஆகியேரின் அன்பு மாமியும் லில்லிதெரேசா, காலஞ்சென்ற தமிழ்ச் செல்வன் மற்றும் தேன்மொழி, தமிழ்ச்செல்வி (முகாமை உதவியாளர் க.தெ.ப.நோ.கூ.சங்கம், கிளிநொச்சி), அருந் தமிழ்ச்செல்வன் (கிராம அலுவலர்- கோணாவில்), அருங்க லைச்செல்வன் (பிரதம முகாமை உதவியாளர், கட்டடங்கள் திணைக்களம்- யாழ்ப்பாணம்), மருதநாயகம், மருதநாயகி, பத்மாதேவமலர் (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், கலாசாரத் திணைக்களம்- வவுனியா), மரியராணி (ஆசிரியர் C.C.T.M வவுனியா), அன்ரன் ஜெயராசா (முகாமை உதவியாளர்- தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்), ஜெயராணி, யேசுதாஸ், ஞானசிங்கம் (கல்வியியற் கல்லூரி- கோப்பாய்), விஜயகுமாரி (விவசாய பீடம், யாழ்.பல்கலைக் கழகம்), செல்வமலர், அன்ரன் செல்வகுமார், புஸ்பமலர், சந்திரமலர், ஜெசிமலர், டெய்சிமலர், நிமலினி, மரியநாயகம், சுதநாயகம் ஆகியோரின் பேர்த்தியும் மேர்சிலூட்ஸ், அன்ரனி தமிழ்ச்செழியன், வைமன், நோர்மன், நியூமன், சைமன், நிஷாந்தன், டனுஜா, சிலக்சனா, சிலக்சன், சபிதா, அபிதா, ரசிகன், நிரோஜன், கஜீவன், சஜீவன், குலதீபன், அனோசிகன், அனோசிகா, அனோஜன், லோசன்சியா, சனோ சிகன், சுமன், சோபன், டானியல், ஹருனி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (03.01.2011) திங்கட்கிழமை பிற்பகல் 1 மணியளவில் இளவாலை புனித அன்னாள் தேவாலயத்துக்கு கொண்டுசெல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்தாவத்தை,
இளவாலை.

(108368)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்
(இளைப்பாறிய ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்)



தென்மராட்சி, கோயிலாக்கண்டிப் பதியைப் பிறப்பிடமாகவும் யாழ். நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் (01.01.2011) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் ஏகபுத்திரனும் காலஞ் சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - பரிமளம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மனோரஞ்சிதத்தின் அன்புத் துணைவரும் கௌரிதேவி, பாலகேதீஸ்வரன், சாவித்திரிதேவி (உப அதிபர், ஸ்ரீபார்வதி வித்தியாசாலை, அரியாலை), காலஞ்சென்ற சாந்தி நிகேதன் மற்றும் தமயந்திதேவி, நளாயினிதேவி, சந்திரமௌலீசன் (கனிஷ்ட இடைநிலைப் பிரிவு மேற்பார்வையாளர், சென்.ஜோன்ஸ் கல்லூரி), சாயிலக்ஷ்மி (உபஅதிபர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பத்மநாதன் (U.K.), கௌசலாதேவி (Canada), யோகதாசன், கருணானந்தன், சிவபாலன்(Dubai), தயாநிதி, நேசகுமார் (யாழ். குரு முதல்வர் இலங்கைத் திருச்சபை) ஆகியோரின் அன்பு மாமனும் அதிசய சொரூபி (U.K.), ஜெயந்தன் (U.K.), நர்த்தனசொரூபன் (U.K.), சிவகாமி (Canada), சிவசாயீசன் (Canada), யோகவிநாயகன்(U.K.), கார்த்திகா, சத்தி நாயகி ( ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), நிற்சிந்தன், சிவாஜினி, சிவமைந்தன், சிவானுஜன், கௌரிபாலன், தானியா ஆகியோரின் அன்புப் பேரனும் லெவானா (U.K.), ஹரிஸ் (U.K.) ஆகியோரின் அன்புப் பூட்டனும் திருமதி பொன்னம்பலம் - மனோரஞ்சித சிவமணியின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2011) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாயன்மார்கட்டில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காகச் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'பாநேசர்',
செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

(108363)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
தொ.பே. [illegible]
0718474234

## நீங்காத நினைவலைகள்



தோற்றம்
15.10.1935

மறைவு
19.12.2006

### அமரர் கந்தையா சண்முகம்

திதி: 03.01.2011

நேற்றுவரை நிஜமாகி
இருந்தீர்கள்
இன்று நிழலாகி
எத்தனை ஆண்டுகள் ஆகின்றன
ஏணியாக இருந்து
ஏற்றமிகு வாழ்வினை
எமக்கு அளித்த தந்தையே
நெஞ்சங்கள் உள்ளவரை
உங்கள் நினைவுகள்
நிழலாடும்.

'நதியா நகைமாடம்',
321, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(108353)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலயம்




சிவபூமி என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணம் சைவசமயத்தையும், சமய நெறிமுறைகளையும் சிறப்பாகப் பின்பற்றி சமய அனுஷ்டானங்கள், திருவிழாக் களைக் கொண்டாடி வழிபட்டு முக்தி நிலையடைய முயற்சிக்கும் ஆன்மீக நாட்டமுள்ள பிரதேசமாகும். இந்த இறைவழிக்கு அழைத்துச் செல்லும் பாலமாக இந்துக் கோயில்களும் நிறுவனங்களும் விளங்குகின்றன.

'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பதற்கிணங்க முற்காலத்தில் மக்கள் குடியிருப்புகள் தோன்றும் போதே தமக்குரிய இஷ்ட தெய்வங்களுக்குக் கோயில்கள் அமைத்து அந்தத் தெய்வ அருளின் பாதுகாவலில் தமது வாழ்வை அமைத்துக் கொள்வது தொன்றுதொட்டு மனித வாழ்வியலோடு பின்னிப் பிணைந்தாகும்.

யாழ். நகரின் கிழக்கேயுள்ள பழைமை வாய்ந்த கிராமங்களில் கொழும்புத் துறையும் ஒன்றாகும். இந்தப் பகுதி யாழ். தீபகற்பத்தின் சமூக, பொருளாதார, வர்த்தக, போக்குவரத்து, பாதுகாப்பு போன்ற நடவடிக்கைகளின் கேந்திர கடல்வழி நுழைவாயிலாக அன்றும் இன்றும் விளங்கி வருகின்றது.

இந்தப் பகுதியில் கொழும்புத்துறை வீதியில் இலந்தைக் குளத்துடன் இணைந்த பகுதியில் எழில் கோலத்துடன் காணப்படுகின்றது கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீ வதரி பீட மன்றுளாடும் விநாயகர் ஆலயம். இந்தப் பதியிலே நம்பிக்கை வைப்பவர்களுக்குத் தும்பிக்கையால் அருள்பொழிந்து வினை தீர்க்கும் விநாயகன் அருளாட்சி செய்து வருகின்றான்.

யாழ்ப்பாணத்திலுள்ள பழைமை வாய்ந்த பிள்ளையார் கோயில்களில் கொழும்புத்துறை இலந்தைக்குளம் பிள்ளையார் கோயிலும் ஒன்றாகும். நீண்ட வரலாற்றையும் அமைவிடச் சிறப்பையும் கொண்டதாகும். இந்த ஆலயத்தின் வரலாறு இலங்கையை ஆட்சி செய்த பல தமிழ் அரசர்களோடு தொடர்பும் தொடக்கமும் உடையதாகும்.

யாழ். நல்லூர் இராசதானியில் இற்றைக்கு 700 வருடங்களுக்கு முன்பு ஸ்ரீ விஜய கூழங்கைச் சக்கரவர்த்தி அரசாண்டு வந்தார். இவர் தமது அரசுப் பணிகளுக்கெனத் தமிழ் நாட்டின் தென் மதுரையிலுள்ள திருமருங்கூர் என்ற கிராமத்தில் இருந்து கந்தச் செட்டி, கதிர்காமச் செட்டி, வேலுச் செட்டி எனப் பல குடும்பங்களைக் கடல் வழியாகத் தோணிகளில் மன்னாரில் உள்ள விடத்தல் தீவுக்கு வருவித்தார். அங்கிருந்து பூநகரி வழியாகக் கொழும்புத்துறை துறை முகத்தில் வந்திறங்கச்செய்து இந்தப் பகுதியில் குடியமர்த்தியதாகத் தோம்பு மூலமாகவும் கர்ண பரம்பரை வழியாகவும் அறியமுடிகிறது.

இவ்வாறு இங்கு அரசனால் பல செட்டி பரம்பரைக் குடிகள் குடியமர்த்தப்பட்டு வாழ்ந்து வந்தமையால் இந்த இடத்தைக் கொழும்புத்துறைச் செட்டித்தெரு என்றும் அழைப்பதுண்டு. இவர்கள் அரச நிர்வாகங்களில் பல பதவிகளை வகித்து வந்தனர். இன்றும் இந்தப் பகுதியில் பழைமை வாய்ந்த பல வீடுகள் காணப்படுகின்றன.

இங்கே வாழ்ந்துவந்த மூதாதையர்கள் தமது வழிபாட்டிற்கு ஆலயம் அமைக்க எண்ணி 14 ஆம் நூற்றாண்டளவில் அரசனின் உதவியுடன் முறைப்படி மூல மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்து யந்திரம், மந்திரம், தந்திரம் என்பவற்றால் ஸ்தாபித்து வழிபட்டு வணங்க வழிகோலினர். இலங்கை அந்நியர் ஆட்சிக்கு உட்பட்ட காலமாகிய 1623 ஆம் ஆண்டு காணிகளின் தோம்பு அரசினால் பதிவு செய்யப்பட்டது. அந்தப் பதிவில் இந்த ஆலயமும் இடம்பெற்றுள்ளதை அறியமுடிகிறது.

தமிழ் நாட்டில் வேதாரணியத்தில் அமைந்துள்ள மூலமூர்த்தியாகிய நடராஜப் பெருமானைத் தனது தந்தையாகவும் விநாயகமூர்த்தி பிள்ளையாரைத் தனது பெயராகவும் பெற்றதால் 'செட்டி வேதாரணியம் மன்றுளாடும் பெருமான் விநாயக மூர்த்தி பிள்ளையார் கோயில்' என இவ்வாலயம் அந்த தோம்பில் குறிப்பிடப் பட்டுள்ளது. எனவே, இங்குள்ள விநாயகர் விக்கிரகம் வேதாரணியத்திலிருந்து கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

அந்தக் காலத்தில் இந்தப் பகுதியைச் சூழ இலந்தை மரங்கள் நிறைந்து காணப் பட்டதாலும், குளத்தை அண்மித்து இருந்தமையாலும் இலந்தைக்குளம் பிள்ளை யார் என்றும் பெயர் பெற்று அழைக்கப்படுகின்றது. இன்றும் சில இலந்தை மரங்கள் இந்தப் பகுதியில் காணப்படுகின்றன. வதரி என்றால் இலந்தை எனப் பொருள்படும்.

இற்றைக்கு 350 வருடங்களுக்கு முன்னர் போர்த்துக்கேயப் படைகள் யாழ்ப்பாண இராச்சியத்தின் மீது படையெடுப்பை மேற்கொண்டனர். பூநகரி வழியாகக் கொழும்புத்துறைக்கு வந்திறங்கிய போத்துக்கேயப் படையணி இந்து சமயத்தையும் வழிபாட்டிடங்களையும் அழிப்பதில் ஈடுபட்டனர். அப்போது நல்லூர் இராசதானிப் படைகளுக்கும் போத்துக்கேயத் தளபதி பிலிட்டீ ஒலிவேராவின் படைகளுக்கும் இடையில் இப்பகுதியில் போர் மூண்டது. நல்லூர் அரசகுமாரன் எதிர்மனசிங்கன் இந்தக் கோயிலின் முன்றிலில் வைத்து சிரச்சேதம் செய்யப்பட்டான் என்றும் அந்த வேளையில் இந்தக் கோயில் குருக்களும் வாளேந்திப் போரிட்டு அரசகுமாரனுடன் வீர மரணம் அடைந்தார் எனவும் அறியமுடிகிறது.



(வளரும்)

# மக்களின் ஒன்றிணைப்புக்காக...

(சென்றவாரத்தொடர்ச்சி.....)

கிராம மட்டத்தில் பரவலாக்கப்பட்ட பரவலாக்கப் பட்ட பிராந்திய சபைகள், கொத்தணிகளுடன் 26 இணை அங்கத்துவ சங்கங்களும் சமாசத்தில் இணைந்து "கூட்டுறவுக்குக் கூட்டுறவு என்ற ரீதியில் பயன்பெற்று வருகின்றன. எனினும் நாட்டுச் சூழல் காரணமாக பல சங்கங்கள் இயங்க முடியாதுள்ளது. அத்துடன் தற்போது இயங்குகின்ற சங்கங்களிலும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை குறைவானதாகவும் காணப்படு கின்றது. சமாசம் பல சேமிப்புத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.




1982 ஆம் ஆண்டு முதல் சமாசத்தில் சாதாரண சேமிப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. இதன் மூலம் கிராம ரீதியாகச் சேகரிக்கப்பட்ட அங்கத்தவர்களிடமிருந்து 90% நிதியில் இருந்து சாதாரண கடன் சங்கத்திற்கு வழங்கப்படும்.

சேமிப்புக்கான வட்டி காலத்திற்கு காலம் நிலவும் வட்டி மாற்ற வீதத்திற்கேற்ப சமாச நிர்வாக சபையினால் தீர்மானித்து வழங்கப்படும்.

2001 ஆம் ஆண்டு கட்டாய சேமிப்புத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இது சாதாரண சேமிப்பு திட்டம் போல் அல்லாமல் குறித்த அங்கத்தவர் சங்கத்தை விட்டுவிலகும் போதே தனது சேமிப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் சாதாரண வட்டியை விட 1% வட்டி கூடுதலாகவே இதற்கு வழங்கப் படுகின்றது.

சங்கம் மேலதிகமாக உள்ள நிதியினைச் சமாசத் திடம் நிலையான வைப்பில் சேமிப்பில் வைக்கின்றது. இதனால் அக்கால வட்டி வீதத்துடன் சேர்ந்த வைப்புத் தொகையைக் கூடிய இலாபத்துடன் மீளப்பெற சமாசம் உதவி செய்கின்றது. சங்கங்களின் செயற்பாடுகளுக்கு அமைய 1986 ஆம் ஆண்டு பொ.செல்வரட்ணமும் 1988இல் ச.ஞானப்பிரகாசமும் சமாசத்தின் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்றார்கள். ச.ஞானப்பிரகாசம் ஞாபகார்த்தமாகவே தற்போது நடைமுறையில் உள்ள பரிசூதியத் திட்டம் 1991 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டு மரண சகாயத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு தற்போதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. 1982 லேயே சமாசம் பதிவு செய்யப்பட்டிருந்த போதும் 1983ஆம் ஆண்டில் தான் சங்கங்களுக்குக் கடன்கள் வழங்க ஆரம்பித்தது. சேமிப்பிலிருந்து 90வீதம் கடனாக வழங்கப்படுவதுடன் ஏனைய கடன் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டன.

சாதாரண கடன், சுயமுயற்சிக்கடன், வீடு திருத்தக்கடன், விவசாயக்கடன், வீடமைப்புக்கடன், வெளிநாட்டுக்கடன், உயர்கல்விக்கடன், விதவைக்கடன், மிக வறிய மக்கள் கடன், குறுங்காலக்கடன், [illegible] இளைஞர் [illegible]ன், அபிவிருத்திக்கடன், நுண்கருக்கடன், சுயதொழிற்கடன், வாகனக்கடன், விசேட ஊக்குவிப்புக்கடன், உற்பத்தி முயற்சிக்கடன், தேசிய நம்பிக்கை நிதியக் கடன் என 22 வகைக் கடன்கள் வழங்கப்பட்டன.

இவற்றில் 2004 ஆம் ஆண்டு வரை சுயதொழில் ஊக்குவிப்புக்கடன், உற்பத்தி முயற்சிக்கடன், விதவைக்கடன், மிகவறிய மக்கள் கடன், உயர் கல்விக்கடன், இளைஞர் கடன், விசேட சுய தொழில் ஊக்குவிப்புக்கடன் ஆகிய திட்டங்கள் நடை முறை யில் இருந்தன. ஆனால் தற்போது இந்தக் கடன் திட்டங்களின் எண்ணிக்கை சுருக்கப்பட்டு சாதாரண கடன், பொதுக்கடன், உயர்கல்விக்கடன், விவசாயக் கடன், பாரிய கூட்டுறவுச் சங்கங்களின் வியாபாரக் கடன் ஆகிய 5கடன் திட்டங்களே நடைமுறையில் இருக்கின்றன.

சமாசத்தில் அங்கத்துவ சங்கங்களுக்கு வழங்கப்படும் பெரும் பகுதிக்கடன்கள் உற்பத்தி முயற்சிக்காகவே வழங்கப்பட்டன. தற்காலசூழலில் உற்பத்தி முயற்சிகள் பெரும் பயன் அளிக்கக் கூடியதாக இல்லாவிட்டாலும் கிராமிய விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் கடன்கள் வழங்கப்படுகின்றன. அங்கத்தவர்களின் தேவை களை நிறைவு செய்யக்கூடிய வகையில் சமாசத்தில் நிதிப்பலம் இருப்பதால் சொந்த நிதியில் சுதந்திரமாக இது இயங்கி வருகின்றது.

நிசா, வாணி

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறைகள் வாடகைக்கு**

யாழ்.பல்கலைக்கழக மாணவிகளுக்கு மட்டும் அறைகள் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு:
516, தட்டாதெருச் சந்தி,
கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212228036


# வடமாகாண உள்ளூராட்சிச் சபையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை

குருநகர்,ஜன.03

வடமாகாணத்தில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளில் வெற்றிடமாகவுள்ள செயலாளர் பதவிகள் யாவும் பொருத்தமான உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதன் மூலம் நிரப்பப்படவுள்ளதாக வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ந.விஜயலட்சுமி வடமாகாணத்தில் இயங்கும் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சார்பான நிறுவனங்களில் தொடர்ச்சியாகச் சேவையாற்றியவர்கள், உள்ளூராட்சி மன்றங்களில் பொறுப்பான பதவிகளில் கடமைபுரிந்தவர்கள், உள்ளூராட்சிச் சபைகளில் 5 வருட சேவை நியமனத்தை உடைய பட்டதாரி பதவிகளுக்கான நியமனத்தைப் பெற்ற அலுவலர்கள், உள்ளூராட்சி நிறுவனங்களில் 5 வருட சேவை அனுபவத்தைக் கொண்ட தற்போது வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் கடமையாற்றும் முகாமைத்துவ சேவை அதிசிறப்பு உத்தியோகத்தர்கள் ஆகியவர்களிடமிருந்து விண்ணப்பங்களைப்பெற்று செயலாளர் உள்ளூராட்சி அமைச்சு, வடமாகாணம், கன்னியா வீதி வரோதயநகர் திருகோணமலை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு திணைக்களத் தலைவர்கள் கோரப்பட்டுள்ளனர். (201-51)

# கண்ணீர் அஞ்சலி



தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை யாழ்.மாவட்ட முகாமையாளர்
திரு.ஜெயரட்ணம்நோயல் ஜெயச்சந்திரனின் அன்புச் சகோதரர்

**அமரர் ஜெயரட்ணம் சாமுவேல் ஜெயமோகன்**

30.12.2010 காலமானார். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர்கள்
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை,
மாவட்டக் காரியாலயம், யாழ்ப்பாணம்.


මහජන සම්පත
மஹஜன சம்பத
**Mahajana Sampatha**

**31.12.2010**

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2338

வெற்றி எழுத்து: U வெற்றி எண்கள்: 8 3 6 3 1 0

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
| --- | --- | --- | --- |
| சுப்பர் பரிசு | U 8 3 6 3 1 0 | ரூபா.12,899,473/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 8 3 6 3 1 0 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | 3 6 3 1 0 | ரூபா. 100,000/= | பரிசுகள் 13 |
| 3 பரிசுகள் | 6 3 1 0 | ரூபா. 10,000/= | பரிசுகள் 137 |
| 4 பரிசுகள் | 3 1 0 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1401 |
| 5 பரிசுகள் | 1 0 | ரூபா. 100/= | பரிசுகள் 13852 |
| 6 பரிசுகள் | 0 | ரூபா. 20/= | பரிசுகள் 138185 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
| --- | --- | --- | --- |
| 7 பரிசுகள் | 8 3 6 3 1 | ரூபா. 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | 8 3 6 3 | ரூபா. 1,000/= | பரிசுகள் 140 |
| 9 பரிசுகள் | 8 3 6 | ரூபா. 100/= | பரிசுகள் 1389 |
| 10 பரிசுகள் | 8 3 | ரூபா. 50/= | பரிசுகள் 13871 |
| 11 பரிசுகள் | U | ரூபா. 20/= | பரிசுகள் 55365 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
**Rs. 12,429,650.00**

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை [illegible] பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட் சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி. கொழும்பு 03. தொலைபேசி 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல் www.nlb.lk


## UNIVERSITY OF JAFFNA

### Tender for the Supply of Uniform Materials - 2011

Sealed Tenders are invited from Reputed Suppliers for the following items.

| Serial No. | Item | Qty. |
| --- | --- | --- |
| 1. | White Polyester Shirting 80 / 20, 36"<br>6.75 m - 129 Nos. = 870.75<br>9.00 m - 1 No. = 9.00<br>15.08 m - 1 No. = 15.08<br>2.73 m - 4 Nos. = 10.92<br>10.39 m - 12 Nos. = 124.68<br>1030.43 | 1030.43 m |
| 2. | Black Skysuplin / Black Polyester Suiting 58"/60"<br>3.60 m - 145 Nos. = 522.00<br>4.80 m - 1 No. = 4.80<br>526.80 | 526.80 m |
| 3. | Light Blue Polyester Shirting 36"<br>3.65 m - 1 No. = 3.65<br>6.75 m - 50 Nos. = 337.50<br>341.15 | 341.15 m |
| 4. | Grey Skysuplin / Grey Polyester Suiting 58"/60"<br>9.60 m - 47 Nos. = 451.20 | 451.20 m |
| 5. | Dark Blue Skysuplin / Dark Blue Polyester Suiting 58"/60"<br>3.60 m - 46 Nos. = 165.60<br>18.51 m - 1 No = 18.51<br>184.11 | 184.11 m |
| 6. | White Skysuplin / White Tazoor Suiting 58"/60"<br>2.29 m - 43 Nos. = 98.47<br>4.58 m - 58 Nos. = 265.64<br>364.11 | 364.11 m |
| 7. | Cotton Saree / Polyester Saree 5.4 m each<br>Blue - 12 Nos | 12 Nos. |
| 8. | Socks – Black / Brown (Cotton / Nylon) | 94 Pairs |

All Tenderers are requested to pay a non refundable Tender fee of Rs. 1500.00 and refundable deposit of Rs. 5,000.00 by Money Order drawn in favour of the Bursar, University of Jaffna, payable at the Jaffna Post Office or in Cash at the Shroff Counter of the University of Jaffna. The Money Order/ Cash Receipt should be attached to the Tenders. The University may, at its discretion either increase or decrease the quantity of items to be purchased. If any special discount is allowed to the University that should be indicated in the Tender. The successful supplier should be prepared to deliver these items at the University of Jaffna and extend one month credit facility. After confirmation of the order, supply should be completed within three weeks time.

Tenders should be sent under registered cover, along with the sample of each variety in 6" x 6" size to the Bursar, University of Jaffna, Thirunelvely Jaffna. Top left hand corner of the envelope should be marked "Tender for Uniform Material" with No.: **UJ/F/PO/T/01/2011.** Tenders should be sent on or before 21-01-2011 at 02:00 pm. Tenders will be opened on the same day at 02:30 pm. Please contact on TP-No. 021-2222644 for further details, if any.

Registrar
University of Jaffna.


**PERSONAL & GROUP CLASSES**

CHEMISTRY-A/L 2013
MATHEMATICS-O/L
Contact-0776139307

**கட்ட வேலைகள் செய்து கொடுக்கப்படும்**

கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், வீட்டு வரைபடம், மாபிள் பதித்தல், வயரிங், பைப் லைனிங், பெயின்ரிங், தச்சு வேலைகள் போன்றன தரமான முறையில் செய்துகொடுக்கப்படும்.

தொடர்பு: 0750468200

**மோட்டார்சைக்கிள் விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள Honda MT 90 21 Series விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0773564772


# பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.3

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகக் குழுத் தெரிவும் எதிர்வரும் 16ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சங்கத் தலைவர் திருமதி பி.சிவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கு பழைய மாணவர்கள் அனைவரையும் சமுகம் அளிக்குமாறு சங்கத்தின் செயலர் திருமதி எ.சற்குணலிங்கம் அறிவித்துள்ளார். (ற)


## Jaffna College Institute of Technology –Vaddukoddai

**Established in 1974 under the Management Council of the Board of Directors of Jaffna College**

**A training Institute registered with the Tertiary and Vocational Educational Commission (TVEC) under P25/0014**

### Courses Commence in January 2011 first week

**Diploma Courses**

One Year Full time (two semester)

**I. Computer Programming & Data Processing**

System Analyzing & Design
Data base Management System
Fundamentals of Computer Technology
Data Processing
Application Packages
Visual Basic VB .net,
Java,C++,English, Oracle

**II. Civil Draughtsmanship**

Building Construction
Construction Materials
Sanitary Engineering
Engineering Science
Engineering Drawing
Draughtsmanship
Quantity Surveying
AutoCAD, English, Maths

New course

**III. Technician Certificate in Telecommunication & Electronics**

Covers City & Guilds Syllabus (London)

**Computer Certificate Courses**

2/3/4 months Part time

01. Microsoft Office
- Ms Word
- Ms Excel
- Ms Access
- Ms Power point

02. Computer Graphic Designer
- Page Maker
- Corel Draw
- Photoshop

03. Computerize Business Accounting
- Accpac
- Tally
- Quick Book

04.C++ Programming
05.Pascal
06.HTML
07.Auto CAT
08.Fundamentals of Maya
09.Visual Basic 6/vb.Net
10.Macro Media Flash
11.Computer Hardware Technician
12.[illegible]nication & Network
13.Internet & E-Mail

**Craft Certificate Courses**

Tamil medium

1. Electrical Wiring
2. Air Condition & Refrigeration]
3. Machine shop Practice
4. Radio, TV& Serving Practice
5. Aluminum Fitting & Fabrication
6. Motor cycle & pump repair
7. Domestic Electrician
8. Welding

**Why we are Special**

- Registered under Tertiary and Vocational Education Commission.
- Unlimited computer practical hours are offered.
- Payments could be made in 2 installments.
- Individual attention by qualified instructors.
- The computer laboratory is opened for flexible practical hours.

Facilities: Hostel, library & Sports etc

**More Information**

Director,
Jaffna College Institute of Technology
Vaddukoddai, Jaffna, Sri Lanka.
T.P No.021321 3139 021222 8275
E-Mail jcit@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மாவட்டத்தில்

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உலர் உணவு வழங்கக் கோரிக்கை

மட்டக்களப்பு,ஜன.3

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உலர் உணவுப்பொருள்கள் வழங்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் குறிப்பிடுகையில்:

''மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களைச் சந்தித்தேன். அத்துடன் பாதிக்கப்பட்ட பிர தேசங்களையும் பார்வையிட்டேன்.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களில் சிலருக்கு அரசால் சமைத்த உணவு வழங்கப்படுகிறது. எனினும், இன்னும் சிலருக்கு அரசின் சமைத்த உணவு கிடைக்கப்பெறவில்லை. சில பொது அமைப்புகள் இவர்களுக்கான சமைத்த உணவை வழங்கி வருகின்றன.

இடம்பெயர்ந்து உறவினர், நண்பர்கள் ஆகியோரின் வீடுகளில் தங்கியுள்ளவர்களுக்கும் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கும் எந்தவித உலர் உணவுப் பொருள்களும் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீரவின் கவனத்திற்கு கடந்த வியாழக்கிழமை மாலை கொண்டுவரப்பட்டது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்கத் தாம் நடிவடிக்கை எடுப்பார் என அமைச்சர் மஹிந்த அமரவீர என்னிடம் உறுதியளித்தார்''.- எனத் தெரிவித்தார். (ளி)




# நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள 1,300 குடும்பங்கள் வெள்ளத்தால் அவதி

## இடம்பெயர்ந்தோர் சங்கத் தலைவர் தகவல்

திருகோணமலை, ஜன.3

மூதூர் கிழக்கில் சொந்தக் கிராமங்களில் மீள்குடியேற அனுமதி மறுக்கப்பட்டு, நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள சுமார் 1,300 குடும்பங்கள் தற்போது பெய்துவரும் அடை மழையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

நலன்புரி நிலையங்களில் வெள்ளம் புகுந்துள்ளது. இதனால் தொற்று நோய் பரவும் அபாயத்தையும் இவர்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வாறு மூதூர் கிழக்கு இடம்பெயர்ந்தோர் சங்கத் தலைவர் குமாரசுவாமி நாகேஸ்வரன் தெரிவித்தார்.

கிளிவெட்டி, மணற்சேனை, பட்டித்திடல், கட்டைபறிச்சான் ஆகிய இடங்களில் உள்ள நலன்புரி முகாம்களில் இடம் பெயர்ந்த குடும்பங்கள் தங்கவைக்கப்பட்டுள்ளன.

கிளிவெட்டி முகாமில் 570 குடும்பங்களும், மணற்சேனை முகாமில் 90குடும்பங்களும், பட்டித்திடல் முகாமில் 230 குடும்பங்களும், கட்டைபறிச்சான் முகாமில் 372 குடும்பங்களும் தங்கவைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இவர்களின் சொந்தக் கிராமங்கள் சம்பூர் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்திற்குள் வருவதாகக் காரணம் காட்டி, மீள் குடியமர்வதற்கு அதிகாரிகளால் அனுமதி அளிக்கப்படவில்லை. சம்பூரில் அனல் மின் நிலையத்திற்கு ஒதுக்கப்பட்ட பிரதேசத்தைத் தவிர்த்து சம்பூர், கூனித்தீவு, சூடைக்குடா ஆகிய கிராமப் பகுதிகளில் மீள்குடியேற அனுமதிக்குமாறு இவர்கள் கோரியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், அரச அதிகாரிகள் இவர்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்கப்படும் எனக் கூறுகின்றனர். இதனை இந்த மக்கள் ஏற்க மறுத்து வருகின்றனர். இச் சூழ்நிலையில் நலன்புரி நிலையங்களில் வாழும் இக் குடும்பங்கள் தொழில்வாய்ப்பின்றி, வருமானமின்றி, கலாசார சீரழிவுக்கு முகம் கொடுத்து வாழ நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.- என்றும் அவர் கவலை தெரிவித்தார்.

இந்தக் குடும்பங்களை மீண்டும் அவற்றின் சொந்தக் கிராமங்களில் வாழ அனுமதிப்பது குறித்து அரச உயர்மட்டம் முடிவு செய்ய வேண்டும் என்று அதிகாரிகள் மட்டத்தில் கூறப்படுகின்றது. (ளி)

## தேங்கும் வெள்ளம்....



அவலம்: கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடைமழை காரணமாக பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியிருக்கின்றன.

# பட்டுன கடலில் படகு கவிழ்ந்தது மீனவர் ஒருவரைக் காணவில்லை

திருகோணமலை, ஜன.3

சேருவில, பட்டுன கடற்பரப்புக்கு மீன் பிடிக்கச் சென்ற மீன்பிடிப் படகொன்று கவிழ்ந்ததில் மீனவர் ஒருவர் காணாமல் போயுள்ளார். அவருடன் சென்ற இருவர் உயிர் தப்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கரையிலிருந்து சுமார் 800 மீற்றர் தொலைவில் வைத்தே மேற்படி மீனவர்கள் சென்ற படகு கவிழ்ந்துள்ளது. இந்த நிலையில் காணாமல்போன மீனவரைக் கண்டுபிடிக்கும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டு வருகின்றனர். (ளி)

# கம்பளை வீதிகளின் அபிவிருத்திக்கு ரூ.22 கோடி 50 லட்சம் நிதி ஒதுக்கீடு

கண்டி, ஜன.3

கண்டி மாவட்டத்தின் கம்பளைத் தொகுதியிலுள்ள வீதிகளை அபிவிருத்தி செய்யவென 22 கோடி 50 லட்சம் ரூபா நிதியொதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் டி. எம். ஜயரட்னவும், சுற்றாடல்துறை பிரதியமைச்சர் ஏ. ஆர். எம். அப்துல் காதரும் இணைந்து கம்பளை தொகுதியிலுள்ள வீதிகளின் நிலைமைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்குக் கொண்டு சென்றதை அடுத்தே இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியொதுக்கீடு தொடர்பாக பிரதியமைச்சர் ஏ.ஆர். எம்.அப்துல் காதர் தெரிவித்தவை வருமாறு:

கம்பளைத் தொகுதியிலுள்ள கண்டி வீதியையும், அம்பகமுவ வீதியையும் அபிவிருத்தி செய்யவென 15 கோடி ரூபாவும், கம்பளைத் தொகுதியிலுள்ள உள் வீதிகளை அபிவிருத்தி செய்யவென 7 கோடி 50 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கம்பளைத் தொகுதியிலுள்ள வீதிகள் நீண்டகாலமாக புனரமைப்புத் செய்யப்படவில்லை. இதனால் மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள்.

இது விடயமாக பிரதமர் டி. எம்.ஜயரட்னவும், நானும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்குக் கொண்டு சென்றோம். அதனையடுத்தே ஜனாதிபதி இந்த நிதியொதுக்கீட்டை மேற்கொண்டார். - என்றார். (ளி)

# சகல வசதிகளுடனும் நவீனமாக பேராதனை நகரம் அபிவிருத்தி

## விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

கண்டி, ஜன.3

பேராதனை நகரம் சகல வசதிகளையும் கொண்ட நவீன நகரமாகக் கட்டியெழுப்பப்படும் என்றுகண்டி மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் விளையாட்டுத்துறை அமைச்சருமான மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற பேராதனை கண்ணொருவ வீதியின் அபிவிருத்தி தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:

பேராதனை நகர் கடந்த வருடம் ஏற்பட்ட மண்சரிவினால் பெரிதும் பாதிக்கப்பட்டது. மண்சரிவு ஏற்பட்ட இடத்தில் இருந்து மண்ணும் கற்களும் முற்றாக அகற்றப்பட்டுள்ளன. நகரை அபிவிருத்தி செய்யும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நகரைஅபிவிருத்திசெய்து தருவதாக பல அரசியல் வாதிகளால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்பதை நான் நன்கு அறி வேன். ஆனால் இம்முறை எதுவித தடைகளும் இன்றி அபி விருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.- என்றார். (ளி)

# பன்றிக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட குழந்தை தியத்தலாவை வைத்தியசாலையில் மரணம்

பண்டாரவளை, ஜன.3

பன்றிக்காய்ச்சலாலும் நிமோனியாவினாலும் பீடிக்கப்பட்டிருந்த இரண்டு வயதுக் குழந்தை ஒன்று தியத்தலாவை ஆதார வைத்தியசாலையில் மரணமாகியுள்ளது.

பண்டாரவளை இழுக்தென்ன பிரதேசத்தில் வசித்த திலுஷானி எனும் குழந்தையே இவ்வாறு பரிதாப மரணத்தைத் தழுவிக் கொண்டுள்ளது.




காய்ச்சல், இருமல் குணங்குறிகளுடன் சேர்க்கப்பட்ட இக் குழந்தைக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் அது பலனளிக்கவில்லை.

இக் குழந்தையின் இரத்தம் கொழும்புக்கு அனுப்பி பரி சோதிக்கப்பட்ட போது அது பன்றிக்காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்டிருந்தமை நிரூபணமானது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ளி)

## கண்டி மெதவலை நகரில் ரூ.3 கோடியில் பஸ் நிலையம்

கண்டி ஹாரிஸ்பத்துவ பிரதேச சபைக்குட்பட்ட மெதவலை நகரில் மூன்று கோடி ரூபா செலவில் புதிய பஸ் தரிப்பிடம் ஒன்றை அமைப்பதற்கு பிரதேச சபை தீர்மானித்துள்ளது. கடந்த வியாழக் கிழமை இடம் பெற்ற பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. மெதவலைநகரில்நீண்ட காலமாக பஸ் தரிப்பிடம் இல்லாதது பெரும்குறையாக உள்ளது. உள்ளூராட்சி சபைக்ளைக் கலைப்பதற்கு முன் இதற்கான அடிக்கல் நடும் விழாவை நடத்தவுள்ளோம் என்று இங்கு கருத்துத் தெரிவித்த பிரதேச சபையின் தலைவர் அனந்த ஜயவிலால் கூறினார்.

# பொலீஸார் - பொதுமக்கள் மருதமுனையில் கைகலப்பு

## 11 பேர் காயமடைந்தனர்

கல்முனை, ஜன.3

கல்முனை வீதிப் போக்குவரத்துப் பொலிஸாருக்கும் மருதமுனைப் பொதுமக்களுக்கும் இடையே கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்ற கைகலப்பில் 3 பொலிஸாரும் 8 பொது மக்களும் காயமடைந்துள்ளனர்.

பிரதான வீதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிளில் பயணித்த பொது மக்கள் சிலரை நிறுத்தியுள்ளனர்.

இதனால் ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து பொலிஸார் மீது கற்கள் வீசப்பட்டுள்ளன.

தொடர்ந்து பொலிஸார் நடத்திய தாக்குதலில் பொது மக்கள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் கல்முனை ஆதாரவைத்தியசாலை, மருதமுனை வைத்தியசாலை ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூவரசம் மரமே புத்திகொடு




பூவரசம் மரத்தடியில் உட்கார்ந்த நிலையிலேயே தூங்கிக் கொண்டிருந்தார் பரமார்த்தர். திடீரென்று விழித்துக் கொண்டிருந்தார் பரமார்த்தர். திடீரென்று விழித்தெழுந்து, ''சீடர்களே! புத்தருக்குப் போதி மரத்தடியில் ஞானம் பிறந்ததாம். அதுபோல் இப்போது எனக்கு இந்தப் பூவரசம் மரத்தடியில் புத்தி பிறந்து விட்டது!'' என்று மகிழ்ச்சியுடன் கத்தினார்.

அதைக் கேட்ட சீடர்கள், ''புத்தருக்கு ஒரு போதி; எங்கள் பரமார்த்தருக்கு ஒரு பூவரசம்! புத்தி கொடுத்த மரமே, நீ வாழ்க!'' என்று அந்த மரத்தைச் சுற்றி வந்து வணங்கினார்கள்.

''சீடர்களே! நாம் யாருடனாவது கூட்டுச் சேர்ந்து பயிர் வைப்போம்; கொள்ளை இலாபம் அடிப்போம்!'' என்றார் குரு.

பரமார்த்தரின் யோசனையைக் கேள்விப்பட்ட ஒருவன் அவர்களுடன் கூட்டாகப் பயிர் செய்வதற்கு ஒப்புக்கொண்டான். எப்படியும் குருவும் சீடர்களும் ஏமாந்து விடுவார்கள் என்று நம்பினான்.

''கூட்டு வாணிகம் என்பதால், மண்ணுக்கு மேலே விளைவதை ஒருவரும், பூமிக்குக் கீழே கிடப்பதை இன்னொருவரும் எடுத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் இருவருக்கும் லாபம் சமமாக இருக்கும். உங்களுக்குப் பூமிக்குக் கீழே விளைவது வேண்டுமா? மேலே கிடைப்பது வேண்டுமா?'' என்று கேட்டான் கூட்டாளி.

குருவும் சீடர்களும் தனியாகச் சென்று யோசித்தார்கள். ''குருவே! பூமிக்கு மேலே இருப்பது வேண்டாம்! அதை யார் காவல் காப்பது? பூமிக்கு அடியில் இருப்பதையே எடுத்துக் கொள்வோம். எல்லாம் பத்திரமாக இருக்கும்!'' என்றனர் சீடர்கள்.

சீடர்கள் பேச்சை நம்பிய பரமார்த்தரும், ''பூமிக்குக் கீழே இருப்பது எல்லாம் எங்களுக்கே!'' என்று கூறி விட்டார்.

ஏமாற்ற நினைத்த கூட்டாளியோ, சோளம், கராம்பு, கீழ்வரகு என்று மண்ணுக்கு மேலே கிடைப்பவையாகப் பயிரிட்டான்!

செடிகள் நன்றாகச் செழித்து வளர்வதைக் கண்ட பரமார்த்தர், ''பலே! மண்ணுக்கு மேலேயே இவ்வளவு செழிப்பாக இருந்தால், அடியில் இன்னும் வளமாகக் காய்க்குமே! இந்தத் தடவை நமக்கு நல்ல லாபம் நிச்சயமாகக் கிடைக்கப் போகிறது!'' என்று மகிழ்ந்தார்.

சீடர்களும் நம் கூட்டாளியும் நன்றாக ஏமாந்து போனான். நம்முடைய திட்டம் அவனுக்குப் புரியவில்லை! என்று நினைத்தனர்.

அறுவடைக் காலம் வந்தது. குருவையும் சீடர்களையும் அழைத்து வந்த கூட்டாளி, ''இதோ பாருங்கள்! பேசிய பேச்சை மீறக்கூடாது. பூமிக்கு அடியில் இருப்பதை நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள். மேலே இருப்பதை மட்டும் நான் கொண்டு போகிறேன்'' என்று கூறினான்.

அவன் எல்லாவற்றையும் அறுத்துச் சென்ற பிறகு, குருவும் சீடர்களும் வெறும் மண்ணைக் கிளற ஆரம்பித்தார்கள்.

(தொடரும்...)

# பிறருக்காக



தன்னாலான எல்லா உதவிகளையும் பாமர மக்கள் தொடக்கம் பணக்காரர் வரைக்கும் எதிர்பார்ப்புகள் ஏதுமின்றிச் செய்து கொண்டிருந்தது இந்தப் பனைமரம். அதை ஒரு கோடாரி அற்ப தேவைக்காக தறிக்க முற்பட்டது. தன்னைத் தானே அழித்துப் பயன் தரும் மரத்தைக் காப்பாற்ற எண்ணிய பனங்காய் ஒன்று கோடாரிக்கு மேல் விழுந்தது, கோடாரி இரண்டு துண்டாக உடைந்து கீழே விழுந்தது.இதைப் பார்த்துக் கொண்டிருந்த வடலி சொன்னது -

பனை தறிப்பான்
தலை தெறிப்பான்.

ம.அஜித்தன்,
சரவணை கிழக்கு.

## உயிர்ப்பு எரிமலைகள் அமைந்துள்ள நாடுகள்

1. றஷ்யா
2. இந்தோனேசியா
3. ஐக்கிய அமெரிக்கா
4. யப்பான்
5. சிலி
6. எதியோப்பியா
7. பிலிப்பைன்ஸ்
8. ஐஸ்லாந்து

சி.லயுதர்சனம்.

## தமிழ் வருடங்களின் 60 பெயர்களில் சில..

தமிழ் ஆண்டுகள் ஒவ் வொன்றிற்கும் ஒரு பெயர் உண்டு. இது மொத்தம் 60 ஆகும். அந்த 60 ஆண்டுகளின் பெயர்களின் தொடர்ச்சி..

| | |
|---|---|
| 46. பரிதாப | 54. ரௌத்திரி |
| 47. பரமாதீச | 55. துன்மதி |
| 48. ஆனந்த | 56. துந்துப |
| 49. ராட்சச | 57. ருத்ரோத்காரி |
| 50. நள | 58. ரக்தாட்சி |
| 51. பங்கள | 59. குரோதன |
| 52. காளயுக்தி | 60. அட்சய |
| 53. சித்தார்த்தி | |

(முற்றும்.)

வினிதா




# ஈழமும் தமிழும்

தமிழ்த் தாயைப் பேணிவளர்த்த
பெருமை ஈழத்துக்குரியது.

பழைய ஏட்டுச் சுவடுகளை ஆராய்ந்தும் தொல்காப்பியம் இறையனார் அகப்பொருள், வீரசோழியம், கலித்தொகை, சூளாமணியம், முதலிய இலக்கண, இலக்கிய நூல்களை முதன் முதலாக அச்சிட்டுத் தமிழகத்தாருக்கு உதவியபெருமையும் யாழ்ப்பாணத்தில் தோன்றிய சி.வை. தாமோதிரம்பிள்ளை அவர்களுக்கே உரியது. இன்னும் அருந் தமிழ்ப் புலமையும் கட்டுரை வன்மையும் வாய்ந்து தமிழ் மொழிக்கும் சிவநெறிக்கும் அரும் பெருந்தொண்டு புரிந்த ஆறுமுக நாவலரை அறியாதவர்கள் இத் தமிழ் உலகில் உண்டா? நாவலர், ஈழத்திலும் இந்தியாவிலும் தமிழ் வளர்த்ததில் எல்லையற்ற புகழெய்தினார். அன்று அவர் நிறுவிய கல்விக்கழகங்கள் இன்றும்நடைபெற்று வருகின்றன. தமிழத்தொண்டு புரிந்த மற்றொரு நாவலர் யாழ்ப்பாணத்தவாரகிய சபாவதிநாவலராவார்.

இசைத்தமிழிற்கு இணையற்ற தொண்டுசெய்த புலவர் சிறந்த இசைக்கருவிகளாக விளங்கும் யாழின் திறத்தையும் இசை யின் நலத்தையும் ஆராய்ந்து யாழ். நூல் என்னும் வியக்கத்தகு நூலை இயற்றியவர் விபுலானந்த அடிகளாரே. நம் காலத்தவரா கிய நவாலி சோமசுந்தரப்புலவரின் தமிழ்ப்பணியை மறப்ப வர் யார் ? எமது நாட்டிலே தமிழ்ப்பணிபுரிந்த அனைவரும் சாதி, சமயம் பேதம் கருதாது சிறப்புறச் செய்தவர்கள்.

வா.எப்சிபா,
திருகுடும்ப கன்னியர்மடம்.

# பொது அறிவு

1. வெளிச்சமான இடத்தில் ஒளி செல்வது தடைப்பட்டால் யாது உண்டாகும்?
   நிழல்
2. இலங்கையில் முதற் பிரதம மந்திரி யார்?
   டி.எஸ்.சேனநாயக்கா
3. நைதரசன் அதிகளவில் அடங்கியுள்ள உரம் எது?
   யூரியா
4. இலங்கையில் பெரிய மாவட்டம் எது?
   அனுராதபுரம்
5. இலங்கையின் நிலப்பரப்பில் சிறிய மாவட்டம் எது?
   கொழும்பு

டிலக்ஷன்,
யா/கோண்டாவில்
கு.மா.வித்தியாலயம்.

# சிந்தனைத் துளிகள்

★சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் அது இதயத்தின் இசை! சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் அது சக்தியின் பிறப்பிடம்!

★விளையாட நேரம் ஒதுக்குங்கள் அது இளமையின் இரகசியம்! படிக்க நேரம் ஒதுக்குங்கள் அது அறிவின் ஊற்று!

★நட்புக்கு நேரம் ஒதுக்குங்கள் அது மகிழ்ச்சிக்கு வழி! உழைக்க நேரம் ஒதுக்குங்கள் அது வெற்றியின் விலை!

★நண்பரைக் காட்டல் வேண்டும் பகைவரை கழித்தல் வேண்டும் இன்பங்களைப் பெருக்கல் வேண்டும் துன்பங்களை வகுத்தல் வேண்டும்

★மெதுவாய்ப் பேசு, மெய்யே பேசு! இனிமையாய்ப் பேசு, இணக்கமாய்ப் பேசு! அன்பாய்ப் பேசு, அடக்கமாய்ப் பேசு! சிந்தித்துப் பேசு, சுருக்கமாகப் பேசு!

★உண்மை உயர்வை அளிக்கும் பொய்மை உயர்வை அழிக்கும் அன்பு துன்பத்தைக் குறைக்கும் செல்வம் துன்பத்தைப் பெருக்கும்

- கஜாஷா.

# தன்னம்பிக்கை

நமது எண்ணம், சொல், செயல் இவற்றிற்கிடையேயான இடைவெளியைக் குறைப்பதன் மூலம் நாம் சாதனையாளராகத் திகழ முடியும். உயர்வாகவே எண்ணவேண்டும். எண்ணியபடியே நமது சொற்களையும் செயல்களையும் வகுத்துக் கொண்டோமானால் எண்ணம் போல வாழ்வு கிடைக்கிறது.

எனவே, இளவயதிலேயே குழந்தைகளின் மனத்தில் உயர்வான எண்ணங்கள் உருவாக்கச் செய்வது பெற்றோரின் கடமையாகும். நல்ல நூல்கள், நல்ல நண்பர்கள், நல்ல சிந்தனையுள்ள செய்திகள் அவர்களைச் சென்றடைய வாய்ப்புகள் ஏற்படுத்தவும், குறித்த காலத்தில் எந்தக் காரியத்தையும் ஆரம்பிக்கவும் முடிக்கவும், குழந்தைகளுக்கு பெற்றோர் முன்மாதிரியாக விளங்க வேண்டும். இது அறவியல் யுகம். ஒரு நிமிடம் கூட வீனே கழிந்தால் திரும்பக் கிடைக்காது என்பதை அறிவுறுத்தி எண்ணப்படி வாழ்க்கையை அமைக்க நாம் வழிகாட்டியாக இருப்பது நலம்.

# அம்மா



அம்மா எந்தன் அம்மா
என்னை பத்துத் திங்கள் சுமந்து
பற்றோடு பெற்றெடுத்தாள்

தாய் இன்றி எவரும் இல்லை
தாய்க்குச் சொல்ல வார்த்தையும் இல்லை
கடவுளாய் காணும் தெய்வமும் தாய் தான்

தாய் சொல்லைத் தட்டக் கூடாது
தாய் இன்றி ஓர் அணுவும் அசையாது
தாயின் அந்த அணுவை அசைக்கக்கூடாது

நாம் கடவுளை வணங்க வேண்டும்
கடவுளைக் கண்ணால் காணமுடியாது
ஆனாலும்
நாம் ஒவ்வொருவரும் கண்டு
கொண்டிருகின்றோம் தாயை

சி. பானுயன்,
யாழ். இந்து ஆரம்பபா சாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்தில் கார்க் குண்டு வெடிப்பு 21 பேர் சாவு; 24 பேர் காயம்

கெய்ரோ, ஜன. 03

எகிப்தில் கிறிஸ்தவர்கள் அதிகமாக வாழும் அலெக்சாண்டிரியாவிலுள்ள தேவாலயத்தில் வெள்ளிக்கிழமை புத்தாண்டு தின வழிபாடு நடந்து கொண்டிருந்தபோது இடம்பெற்ற கார்க் குண்டு வெடிப்பில் 21 பேர் பலியாயினர்; 24 பேர் காயமடைந்தனர்.

இஸ்லாமிய நாடான எகிப்தில், கிறிஸ்தவர்கள் 10 சதவீதம் பேர் உள்ளனர். அலெக்சாண்டிரியாவில் கிறிஸ்தவர்கள் கணிசமான அளவில் வசிக்கின்றனர். அங்குள்ள, 'புனிதர்கள் தேவாலயம்' மிகப் பிரபலமானது.

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு அங்கு வெள்ளிக்கிழமை நள்ளிரவில் நூற்றுக்கணக்கானோர் கூடி வழிபாடு நடத்திக் கொண்டிருந்தனர். அப்போது, தேவாலயத்துக்கு வெளிப்புறம் நிறுத்தப்பட்டிருந்த ஒரு கார் திடீரென வெடித்துச் சிதறியது. இதில் 21 பேர் பலியாயினர்; 24 பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்துக்கு எந்த ஓர் அமைப்பும் இதுவரை பொறுப்பேற்கவில்லை. சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர், உள்ளூர் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், ஸ்கோடா கார் ஒன்று நள்ளிரவில் தேவாலயம் அருகில் வந்து நின்றது. அதில் வந்தவர்கள் வெளியேறிச்சென்ற சில நிமிடங்களில், கார் வெடித்துச் சிதறியது -என்றார்.

குண்டு வெடிப்பால் தேவாலயம் அருகிலுள்ள மசூதிக் கட்டடங்கள் பலத்த சேதமடைந்தன. இச்சம்பவத்தால் கொதிப்படைந்த கிறிஸ்தவர்கள், அருகிலிருந்த மசூதியைத் தாக்கியதில் அங்கிருந்த ஜன்னல்கள் சேதமடைந்தன. இறந்தவர்களின் உறவினர்கள் அவர்களது சடலங்களைப் பெற்றுக்கொள்ள மறுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## நைஜீரியாவில் தொடர் வன்முறை குண்டுத் தாக்குதல்கள் நீடிப்பு

அபுஜா, ஜன. 03

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில், கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டி நடந்த வன்முறை, குண்டுவெடிப்பு ஆகிய சம்பவங்கள் தொடர்கின்றன.

தலைநகர் அபுஜாவில் புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் போது, நடந்த குண்டுவெடிப்பில் 30 பேர் பலியாகினர். நைஜீரியாவில், கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே தொடர்ந்து மோதல் நிகழ்ந்து வருகிறது. கடந்த 25ஆம் திகதி கிறிஸ்மஸ் தினத்தன்று, ஜோஸ் நகரில் நடந்த வன்முறை, அதைத் தொடர்ந்து நடந்த தொடர் குண்டுவெடிப்பு ஆகியவற்றில் 86 பேர் பலியாயினர். 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்திற்கு 'போக்கோ ஹராம்' என்ற பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றது. இந்நிலையில், தலைநகர் அபுஜாவில் இராணுவச் சிப்பாய்களின் குடியிருப்பு அருகேயுள்ள சந்தையில் சிப்பாய்களும் பொதுமக்களும் கூடி, புத்தாண்டு தினக் கொண்டாட்டமான 'பியர் விருந்தில்' ஈடுபட்டிருந்த போது குண்டு வெடித்தது. இதில், 30 பேர் பலியாயினர். 12 பேர் காயமடைந்தனர். தாக்குதலைத் தீவிரவாதிகள்தான் நடத்தினர் என்று அரசு குற்றஞ்சாட்டியது.

## 157 வங்கிகளுக்கு அமெ.வில் மூடுவிழா

நியூயோர்க், ஜன. 03

அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி இன்னும் முழுமையாகத் தீரவில்லை. 2010 ஆம் ஆண்டு மொத் தம் 157 வங்கிகள் இழுத்து மூடப்பட்டுள்ளன. சராசரியாக மாதம் 13 வங்கிகள் நட்டமடைந்துள்ளன. அமெரிக்காவில் 2008 இல், 'லெமன் பிரதர்ஸ்' என்ற 'வால்ஸ்ட்ரீட்'டின் மிகப் பெரிய நிதி நிறுவனம் நட்டமடைந் ததையடுத்து, அந்நாட்டின் பொருளாதாரம் மளமளவென சரிந்தது.

இதையடுத்து, உலகப் பொருளாதாரமும் பாதிப்புக்குள்ளானது. அந்த ஆண்டில், 311 வங்கிகள் நட்டமடைந்தன. 2009இல் 140 வங்கிகள் மூடப்பட்டன. வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்துள்ளதோடு, சிறு, நடுத்தர ஆகிய வங்கிகளின் பாடு மிகவும் மோசமாகி விட்டன. பெடரல் டிபாசிட் இன்சூரன்ஸ் கோர்ப்பரேஷன் (எப்.டி.ஐ.சி.,) வெள்ளிக் கிழமை வெளியிட்ட செய்தியில், ''2010இல் மட்டும் 157 வங்கிகள் நட்டமடைந் துள்ளன. ஏப்ரலில் மட்டும் 23 வங்கிகள் இழுத்து மூடப்பட்டுள்ளன.'' - என்று தெரிவித்துள்ளன.

### தொடரும் அடக்குமுறை...



மேற்குக் கரையில் அமைக்கப்படும் சர்ச்சைக்குரிய தடுப்புச் சுவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாலஸ்தீனியர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தை அடக்குவதற்குத் தயார் நிலையில் நிற்கின்றனர் இஸ்ரேலியப் படையினர்.

## நாய், பூனைக்கு ஜப்பானில் வரி

டோக்கியோ, ஜன. 3

ஜப்பானில் மனிதர்களின் பிறப்பு விகிதம் குறைந்து கொண்டே இருக்கிறது, ஆனால் செல்லப் பிராணிகளின் பிறப்பு விகிதமோ பெருகிக் கொண்டே போகிறது.

பெருகிப் போன செல்லப் பிராணிகளும் வீடுகளில் இருந்து வெளியேறி வீதிகளில் வந்து அல்லாடுவதும் அதிகரித்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக் கணக்கான செல்லப் பிராணிகள் இவ்வாறு கைவிடப்படுகின்றன.

ஜப்பானிய அரசுக்கும் அதிகாரிகளுக்கும் இது பெரும் தலையிடியாக மாறி உள்ளது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்துடன் செல்லப் பிராணிகள் வைத்திருப்பவர்கள் அதற்கென்று வரியைக் கட்ட வேண்டும் என்ற புதிய திட்டம் ஒன்றை ஜப்பான் அதிகாரிகள் கொண்டு வருகின்றனர். இந்தத் திட்டத்திற்கு வரவேற்பு மற்றும் எதிர்ப்பு என்று இரண்டுமே உள்ளன. ஜப்பானில் செல்லப் பிராணிகளுக்கு வரி விதிக்கும் திட்டம் நடைமுறைக்கு வந்தால், வாடகைக்கு எடுக்கப்படும் நாய்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் எனக் கருதப்படுகின்றது.

# பெனாஸிரைக் கொல்ல தளபதி வீட்டில் சதி

### புதிய பரபரப்புத் தகவல்

இஸ்லாமாபாத், ஜன. 03

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ கடந்த 2007ஆம் ஆண்டு டிசம்பர் 27 ஆம் திகதி தேர்தல் பிரசார ஊர்வலத்தின்போது தற்கொலை தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்டார்.

இந்தச் செயலில் பாகிஸ்தான் தலிபான் முன்னாள் தலைவர் பைதுல்லா மசூத் தலைமையிலான தீவிரவாதிகள் ஈடுபட்டனர் எனக் கூறப்பட்டது. ஆனால் 2009ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் அமெரிக்கா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் பைதுல்லா மசூத் கொல்லப்பட்டார்.

தற்போது இந்தக் கொலை வழக்கு விசாரணையை உள்துறை அமைச்சகம் மேற்கொண்டுள்ளது. பெனாஸிர் கொலையில் 9 பேர் கொண்ட குழு ஈடுபட்டது என்றும், அவர்களில் ஒருவர் பாகிஸ்தான் இராணுவத் தளபதி என்றும் தெரிய வந்துள்ளது.

பெனாஸிரை கொலை செய்வதற்கான சதித் திட்டம் அந்த இராணுவத் தளபதியின் வீட்டில் நடந்தது என்ற திடுக்கிடும் தகவலும் வெளியாகியுள்ளது.

கொலை சதியில் ஈடுபட்ட 9 பேரில் 5 பேர் இன்னும் உயிருடன் உள்ளனர். மேலும் சதியில் ஈடுபட்டவர்கள் பெனாஸிரை கொலை செய்ய கூலிப் படையை அமர்த்தியுள்ளனர்.

இதற்கிடையே பெனாஸிரை கொல்ல சதித் திட்டம் தீட்டிய இராணுவத் தளபதி யார்? என்ற விவரம் வெளியிடப்படவில்லை. அவர் ஓய்வு பெற்றவரா? அல்லது தற்போது பணியில் இருக்கிறாரா? என்ற விவரமும் தெரிவிக்கப்படவில்லை.

விசாரணை அறிக்கையை உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக், ஜனாதிபதியும் பெனாஸிரின் கணவருமான சர்தாரியிடம் சமர்ப்பித்து விட்டார் எனக் கூறப்படுகிறது.

பெனாசிர் பூட்டோ தேர்தலில் போட்டியிடுவதற்காக நாடு திரும்பியபோது கொல்லப்பட்டார்.

## நெருக்கடியில் இந்திய விவசாயம்

இந்தியாவின் விவசாயத்துறை கடுமையான ஒரு நெருக்கடியை எதிர்கொள்கிறது என்று பிரபல வேளாண்மை விஞ்ஞானியும் விவசாயிகளுக்கான தேசிய ஆணையத்தின் தலைவருமான டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார். சிறு விவசாயிகள் தங்களது தொழிலை மேற்கொள்ள பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனவும், நாட்டில் 50 சதவீதமானவர்கள் தங்களது தொழிலான விவசாயத்தைக் கைவிடும் நிலை யில் உள்ளனர் என்றார் அவர்.

## பறவைகள் போன்று குரல் எழுப்பும் எலிகள்

**ஜப்பான் விஞ்ஞானிகள் சாதனை**

டோக்கியோ, ஜன. 03

மரபணு மாற்றம் மூலம் பறவைகள் போன்று குரல் எழுப்பும் எலியை, ஜப்பான் விஞ்ஞானிகள் உருவாக்கி சாதனை புரிந்துள்ளனர். இதன் மூலம், ''மனிதனுக்கு பேச்சாற்றல் வந்த இரகசியம் குறித்து அறிந்துகொள்ள முடியும்'' என அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். பரிணாம வளர்ச்சிக்கு 'மியூட்டேசன்' என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும், மரபணுவில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் முக்கிய காரணியாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், பரிணாம வளர்ச்சியின் இரகசியங்களை அறிந்து கொள்ளும் வகையில், ஜப்பானைச் சேர்ந்த ஒசாகா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தீவிர ஆய்வில் களமிறங்கினர். எலிகளின் மரபணுக்களில் மாற்றம் செய்து ஆய்வு நடத்தினர். இதில், மரபணு மாற்றம் செய்யப்பட்ட எலிகளில் ஒன்று பறவைகள் போன்று குரல் எழுப்பியது தெரிந்தது. இதையடுத்து ஆய்வை தீவிரப்படுத்தியுள்ளனர்.

## 'ரைம்ஸ்' முகப்பில் அசேஞ்ச் ஓவியம்

கோலாலம்பூர், ஜன. 03

மாற்றுத் திறனாளியான மலேசிய ஓவியர் வரைந்த ஜூலியன் அசேஞ்சின் உருவப்படம், 'ரைம்ஸ்' பத்திரிகை அட்டைப்படத்தில் இடம்பெற்றுள்ளது.

'விக்கிலீக்ஸ்' இணையதளத்தின் மூலம், பல்வேறு நாடுகளின் இரகசிய தகவல்களை வெளியிட்டு, உலகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருபவர் ஜூலியன் அசேஞ்ச். இவ [illegible] புகளும் குவிந்த வண்ணம் உள்ளன.

இதனிடையே, பிரபல 'ரைம்ஸ்' பத்திரிகையின் இந்த இதழ் (டிசெ. 27 - ஜன. 3) அட்டைப் படத்தில், ஜூலியன் அசேஞ்சின் ஓவியம் இடம்பெற்றுள்ளது.

இந்த ஓவியத்தை வரைந்தவர் நியூயோர்க்கை பூர்வீகமாகக் கொண்ட மலேசிய ஓவியர் லியோன் லிம் என்பவர். இவர் காது கேளாத மாற்றுத் திறனாளி.

அசேஞ்சை, லியோன் லிம் இதுவரை நேரில் பார்த்ததில்லை. இணையதளங்களில், அசேஞ்ச் குறித்து வெளியான தகவல்களை வைத்து இந்த ஆஸ்திரேலிய பத்திரிகையாளரின் முகத்தை ஓவியமாக வரைந்துள்ளார். 3 நாள்களில், அசேஞ்சின் ஆறு ஓவியங்களை வெவ்வேறு கோணங்களில் லிம் வரைந்துள்ளார். பின்னர், அதனை ரைம்ஸ் பத்திரிகைக்கு அனுப்பியுள்ளார்.

''இந்த ஆண்டின் சிறந்த மனிதராகக் கருதப்படும் ஜூலியன் அசேஞ்ச் குறித்த எனது எண்ணங்களை பகிர்ந்துகொள்ளவே, இந்த ஓவியங்களை உருவாக்கி, அனுப்பினேன். அந்தப் பத்திரிகையின் ஓவியக் குழுவினர், அதை ஆய்வு செய்து, அட்டைப் படத்தில் இடம்பெறச் செய்தனர்'' என்றார் லியோன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
### பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

I. உபவிடுதிக் காப்பாளர்:- ஆண்

தகைமைகள்:

* க.பொ.த சா/தரத்திற்குக் குறையாத கல்வித் தகைமை.
* வயதெல்லை 30 - 60
* விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம்; உணவும் தங்குமிட வசதியும் இலவசம்
* விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும், இல்லப்பிள்ளைகளைப் பரிவோடு கவனிப்பதிலும், சைவாசாரம் பேணுவதிலும், வழிகாட்டுவதிலும் அர்ப்பணிப்போடு ஈடுபடுபவராகவும் இருத்தல் வேண்டும்.
* ஊதியம்:-ரூபா 7,700

II. சமையலாளர்:- ஆண்

* தேகாரோக்கியமும், சுறுசுறுப்பும், பெருமளவில் சமையல் செய்த அனுபவமும் அத்தியாவசியம்.
* வயதெல்லை 35 - 55
* இல்லத்தில் தங்கக் கூடியவர் முன்னுரிமை பெறுவர்.
* ஊதியம்:- ரூபா 8,700

III. காவலாளி

* தேகாரோக்கியமும், சுறுசுறுப்பும் அனுபவமும் அத்தியாவசியம்
* வயதெல்லை 35-60
* ஊதியம்:- ரூபா 7,500

விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி:- 14.01.2011

க.வை.குணசேகரம்,
செயலாளர். (சி/574180)

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## சுங்கத் திணைக்களத்தின் சோதனை; அரசுக்கு 150 கோடி ரூபா வருமானம்

கொழும்பு,ஜன.3

விமான நிலையத்தின் சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது நாட்டைவிட்டு வெளியேறும், உள்வரும் பயணிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட சட்டவிரோதப் பொருள்கள், போதைப் பொருள்கள் போன்றவற்றுக்கு விதிக்கப்பட்ட அபராதங்கள் கடந்த வருடம் 150 கோடி ரூபாவைத் தாண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகள் 63 முக்கிய பரிசோதனைகளை மேற்கொண்டு 150 பேரைக் கைது செய்துள்ளதாக சுங்க அதிகாரி பராக்கிரம பஸ்நாயக்க தெரிவித்தார்.

போதைப் பொருள்கள், தங்கள், பணம், மாணிக்கக்கற்கள், கையடக்கத் தொலைபேசிகள், உதிரிப்பாகங்கள் போன்ற பிரதான கடத்தல்கள் 68 பிடிபட்டுள்ள என அவர் மேலும் தெரிவித்தார். (ம-5)

### நாவற்குழி-தனங்கிளப்பு ஊடாக பஸ்சேவை ஆரம்பம்

தென்மராட்சி, ஜன. 3

தென்மராட்சி சிற்றூர்தி சேவைகள் சங்கத்தினால் தென்மராட்சி தெற்குப் பிரதேச மாணவர்கள், ஆசிரியர்களின் நலக் கருதி இன்று முதல் தினமும் நாவற்குழி, தனங்கிளப்பு ஊடாக சாவகச்சேரிக்கான பஸ் சேவையை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ் சேவை காலை 6.50 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந் தும் பிற்பகல் 2.10க்கு சாவகச்சேரியிலிருந் தும் புறப்படும் எனத் தெரிவிக்கப் படுகின்றது. (ற-207)

### இலங்கை மாணவனுக்கு லண்டன் பல்கலையில் பட்டம்

கொழும்பு, ஜன.03

இலங்கை மாணவன் ஒருவர் லண்டனிலுள்ள 'யுனிவர்சிட்டி ஈஸ்ட் லண்டன்' பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பொறியியல் துறையில் சித்தியடைந்து பட்டம் பெற்றுள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவரான மயூரன் பரசுராமன் என்பவரே இவ்வாறு பட்டம் பெற் றுள்ளார். (சி)

### விவசாயிகளை பதிவு செய்யுமாறு அறிவுறுத்தல்

வித்தகபுரம் விவசாய சம்மேளனத்தில் அந்தப் பகுதி விவசாயிகளைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகள் எதிர்வரும் 11 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பன்னாலை சேர் கனக சபை வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து விவசாயிகளும் தமது காணிப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கீரிமலை கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (201)

### ஆய்வரங்கு

அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பின் ஏற்பாட்டில் குடாநாட்டில் புதிய தொழில் வாய்ப்பு என்னும் தொனிப்பொருளிலான மாதாந்த ஆய்வரங்கு எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அரசடியில் அமைந்துள்ள அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்புச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. (ற)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
02.01.1955





மறைவு
05.12.2010

அமரர்
### அருணகுலசிங்கம் தர்மகுலசிங்கம்

*05.12.2010 அன்று ஜேர்மனியில் அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (04.01.2011) செவ்வாய்க்கிழமை அன்று காலை 6.00 மணிக்கு வியாபாரிமூலை தெணியம்மன் கோயிலில் நடைபெறும். தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதோடு மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

வீரபத்திரர் கோயிலடி,
பன்வையம்பதி, பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

## பத்தாவது வருட நினைவுகளுடன்



வர்ணவாருதி

அமரர்
### இரத்தினம் கனகராஜா
(ஸ்தாபகர், கலைவாணி கலையகம்)
திதி:சதுர்த்தசி

மண்ணுக்கு
15★02★1950

விண்ணுக்கு
24★12★2000

*சுமை நிறைந்த வாழ்வை வென்று*
*குடும்ப நலன்பேணி நின்றீர்!*
*மனித வாழ்வின் மகத்துவம் கருதி*
*ஆலயம்தோறும் ஓவியம் படைத்தீர்!*
*வாழ்வை முடித்து நீர் மறைந்தாலும்*
*கோயிலில் உள்ள ஓவியம் சொல்லும்*
*உமது புகழை!*

(108379)

கலைவாணி கலையகம்,
அம்மன் வீதி,
பத்திரகாளி கோயிலடி, திருநெல்வேலி.

என்றும் உம் நினைவுகளுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி ரூபமணி இரத்தினம் (போபி)



மலேஷியாவைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் வடக்கை நிரந்தர வதிவிடமாகவும் கொண்டு கொழும்பில் வசித்து வந்தவருமாகிய திருமதி ரூபமணி இரத்தினம் 01.01.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் (ஓய்வுபெற்ற வங்கி உத்தியோகத்தர், H.S.B.C) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனியர் தம்பிஐயா -அருளம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா- தங்கம்மா தம்பதியரின் பெறாமகளும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை-ஆசைப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் தவரஞ்ஜினி (லண்டன்), மதிரூபன் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் H.S.B.C தற்போது DFCC வர்த்தனா வங்கி), ரூபரஞ்சனி (சுடர்ஒளி, கொழும்பு), இன்பரஞ்சனி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் உருத்திரமாணிக்கம் (லண்டன்),சத்தியவதி (கொழும்பு), ஸ்கந்தபாலா (கண்டி), உதயகுமாரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் அனுக்ஷன் (லண்டன்), கிருத்திகான் (கொழும்பு), நிந்துஜா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம் (மலேஷியா), குணபூசணி (மலேஷியா), பரராஜசிங்கம் (மலேஷியா) மற்றும் தனசிங்கம் (இந்தியா), தர்மலிங்கம் (அமெரிக்கா), இரட்ணசிங்கம் (கொழும்பு), பாக்கியலிங்கம் (கொழும்பு), கணேசலிங்கம் (கனடா), சிவலிங்கம் (தொட்டிலடி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இன்று (03.01.2011) திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு தெகிவளை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப் பட்டு தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

| | |
|---|---|
| திருமதி ஆர். தவரஞ்சனி | தொடர்பு : 00442085007815 |
| ஆர்.மதிரூபன் | தொடர்பு : 0112360526 |
| திருமதி எஸ்.ரூபரஞ்ஜினி | தொடர்பு : 0779039444 |
| திருமதி உ.இன்பரஞ்ஜினி | தொடர்பு : 0019053030912 |

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை கமலநாதன்
(ஓய்வு பெற்ற மேற்பார்வையாளர்-மலேரியா தடுப்புப் பிரிவு)



அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கமலநாதன் கடந்த 31.12.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- நல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான துரையப்பா- செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாம்பிகையின் பாசமிகு கணவரும், சுரேஸ்குமார் (லண்டன்), சுரேந்தினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், றஜனி, ஈஸ்வரமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், சகானா, சனோத், சந்தோஷ்குமார்,கார்த்திக், சுவிஸ்க்கா ஆகியோரின் அன்புப் பேரனும், பவளராணி, மோகனராணி, ஜெகநாதம், ஜெயராணி, காலஞ்சென்ற லிங்கநாதன், வசந்தராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிங்கராசா, காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் (நடுவில்) மற்றும்ஜெயகுமார், லீலாவதி, சறோ, சண்முகரத்தினம், கனகரத்தினம், நடராசா, துரைராசா, சந்திராதேவி, சாந்திதேவி ஆகியோரின் மைத்துனரும் உதயராஜா கலாராணி, தனராணி, சாரதா, தனுஷா, ஜசிந்தன், சத்தியா, லாவண்யா, லஜித்தா, சாரங்கன், சாஜினி, கஜேந்திரன், ஜேந்திரன், விஜேந்திரன் ஆகியோரின் மாமனாரும் லீனா, ஜெனி, நிரூபா, சுகந்தன், சுகுணன் ஆகியோரின் பெரியதந்தையும் சர்மிலன், பயிரதி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2011) திங்கட்கிழமை இல.24, மலர்மகள் வீதி, அரியாலையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.24, மலர்மகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(108383)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.க. - காங். கூட்டணியை வீழ்த்தும் அணியை உருவாக்குவார் ஜெயலலிதா

## வைகோ தெரிவிப்பு

சென்னை, ஜன.03

தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியை வீழ்த்தக் கூடிய அணியை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா உருவாக்குவார் - என்று ம.தி. மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறினார்.

புத்தாண்டையொட்டி சென்னை, எழும்பூரில் உள்ள ம.தி.மு.க. தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் வைகோ செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் கூறியவை வருமாறு -

அலைக்கற்றை ஒதுக்கீட்டில் நடந்த ஊழல் தொடர்பான பல உண்மைகள் தொடர்ந்து மூடிமறைக்கப்படுகின்றன. இந்த ஊழலில் தொடர்புடையவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே ஆ.ராசா மீது நடவடிக்கை எடுப்பதால் மத்திய அரசுக்கு பாதிப்பு ஏற்பட்டால், ஆட்சியைப் பாதுகாக்கும் வழியை நான் காட்டுகிறேன் என்று ஜெயலலிதா கூறினார்.

ஜெயலலிதா அவ்வாறு கூறியது ஓர் அரசியல் உத்தி. அவர் அவ்வாறு கூறிய பின்னர்தான் அலைக்கற்றை ஊழல் தொடர்பான அடுக்கடுக்கான பல உண்மைகள் அடுத்தடுத்து வெளிவந்ததுடன், பல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

அ.தி.மு.க.வுடன் எதிர்காலத்தில் காங்கிரஸ் கட்சி கூட்டணி சேருமா என்பது போன்ற யூகமான கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்வது சரியான வியூகமாக இருக்க முடியாது. அ.தி.மு.க. பொதுக்குழுவில் ஜெயலலிதா பேசும்போது, காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைப்போம் என்று கூறவில்லை. தொண்டர்கள் விரும்பும்கூட்டணியை அமைப்பேன் என்றுதான் கூறினார்.

தி.மு.க. - காங்கிரஸ் அணியை வீழ்த்தக்கூடிய அணிதான் தொண்டர்கள் விரும்பும் கூட்டணி. அத்தகைய கூட்டணியை அமைப்பதாகத்தான் ஜெயலலிதா கூறியுள்ளார்.

தி.மு.க. வீழ்த்தப்பட வேண்டும். காங்கிரஸ் கட்சியும் வீழ்த்தப்பட வேண்டும். இதுதான் ம.தி.மு.கவின் நிலைப்பாடு. இதில் நாங்கள் எப்போதும் சமரசம் செய்து கொண்டதில்லை.

பா.ம.கவை நாங்கள் மதிக்கிறோம். அதேபோல் தே.மு.தி.கவையும் நாங்கள் மதிக்கிறோம். எனினும், இந்தக் கட்சிகளை அ.தி.மு.க. அணியில் சேர்ப்பது பற்றி ஜெயலலிதாதான் முடிவு செய்வார். தி.மு.க. - காங்கிரஸ் அணியை வீழ்த்தக்கூடிய வகையில் ஜெயலலிதா அமைக்கும் கூட்டணிக்கு ம.தி.மு.க. துணை நிற்கும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

பேட்டியின்போது ம.தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் மல்லை சத்யா, கட்சியின் செய்தித்தொடர்பாளர் ஜி.நன்மாறன் ஆகியோர் உடனிருந்தனர்.



குஜராத், ஆமதாதாத் நகரில் புத்தாண்டு தினமான நேற்றுமுன்தினம் பிறந்த இந்தக் குழந்தை முதலாம் திகதி, முதலாம் மாதம், 2011 ஆம் ஆண்டில் மு.ப. 11 மணிக்கு எல்லாமே 1 இல் முடியும் வகையில் (01.01.11 மு.ப. 11 மணி) பிறந்துள்ளது. குழந்தையுடன் அதன் பெற்றோர் சைதாலி மற்றும் நதீம் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# எந்தக் குழு முன்பும் பிரதமர் ஆஜராக தேவையில்லை என்கிறார் பிரணாப்

கொல்கத்தா, ஜன.03

2 ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் பொதுக் கணக்குக் குழு முன்பு ஆஜராகத் தயார் என பிரதமர் மன்மோகன் சிங் அறிவித்ததற்கு நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆட்சேபம் தெரிவித்தார்.

பொதுக் கணக்குக் குழு முன் ஆஜராகத் தயார் என பிரதமர் எங்களைக் கலந்து ஆலோசிக்காமல் முடிவு எடுத்துவிட்டார். அவர் என்னிடம் இதுகுறித்து விவாதித்திருந்தால் அவ்வாறு கூற வேண்டாம் என்று தெரிவித்திருப்பேன் என பிரணாப் முகர்ஜி கூறினார்.

அரசமைப்புச் சட்டப்படி பிரதமர் மக்களவைக்குத்தான் பதில்கூறக் கடமைப்பட்டவர். எந்தக் குழுவுக்கும் அவர் பதிலளிக்கத் தேவையில்லை என்றும் முகர்ஜி கூறினார்.

# சத்தியராஜ்ஜின் மகள் திவ்யா ஈழத் தமிழருக்குச் சிகிச்சை



சென்னை, ஜன. 03

சென்னையில் உள்ள வைத்தியசாலையில் மனநல வைத்தியராகப் பணிபுரிந்துவரும் சத்தியராஜ்ஜின் மகள் திவ்யா, தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழர்களுக்கான அகதிகள் முகாம்களுக்குச் சென்று அவர்களின் மன ஆரோக்கியத்தை மீட்டெடுக்க சிகிச்சை அளித்துள்ளார்.

நடிகர் சத்தியராஜ்ஜின் மகள் திவ்யா, நடிகையாக வேண்டும் என்ற விருப்பத்திலிருந்தவர். இவர் தந்தையின் விருப்பப்படி இப்போது மனநல வைத்தியராகியிருக்கிறார்.

சத்தியராஜ்ஜின் மனைவி கடவுள் நம்பிக்கை உள்ளவர். எனினும் அவரது மகளுக்குத் தந்தையைப் போலவே கடவுள்நம்பிக்கை இல்லை. இவ்விடயத்தில் மட்டுமல்ல, இன விடயத்திலும் தந்தைதான் திவ்யாவுக்கு ரோல் மொடல்.

# திருவள்ளுவர் சிலையைப் பார்வையிட கன்னியா குமரிக்கு படையெடுக்கும் மக்கள்

## ஒரே மாதத்தில் 2 லட்சத்து 5 ஆயிரம் பேர் வருகை

கன்னியாகுமரி, ஜன.3

கன்னியாகுமரியில் கடந்த டிசெம்பர் மாதத்தில் மட்டும்

திருவள்ளுவர் சிலை மற்றும் விவேகானந்தர் நினைவு மண்டபத்தை 2 லட்சத்து 5 ஆயிரம் பேர் பார்வையிட்டுள்ளனர்.

கன்னியாகுமரிக்கு நாள்தோறும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர்.

அவர்கள் கடலில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலை மற்றும் விவேகானந்தர் நினைவு மண்டபத்தைப் பார்வையிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இவற்றை பார்வையிட பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் சார்பில் குகன், பொதிகை, பாகீரதி ஆகிய 3 படகுகள் இயக்கப்படுகின்றன. தற்போது சபரிமலை சீசன் என்பதால் கன்னியாகுமரிக்கு வரும் சுற்றுலா பயணிகள் வருகை அதிகமாக உள்ளது.

பழுதடையும் நிலையிலுள்ள பகிரதி படகுக்குப் பதிலாக புதிய படகை வாங்க பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் முடிவு செய்துள்ளது.

# 2ஜி ஊழல் பற்றி சபையில் விவாதிப்பது பயனைத் தராது; பா.ஜ.கட்சி தெரிவிப்பு

2 ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் தொடர்பாக நாடாளுமன்றக் கூட்டுக் குழு(ஜே.பி.சி.) விசாரணை வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானதுதான் என பா.ஜ.க. தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துவது பலன் தராது என்றும் அக்கட்சி கூறியுள்ளது.

"ஜே.பி.சி. தொடர்பாக நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் விவாதம் நடத்த மறுப்பதை அரசு விமர்சித்துள்ளது. விலைவாசி உயர்வு தொடர்பாக ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் நாடாளுமன்றத்தில் ஒரு முறை, இரு முறை அல்ல 10 இற்கும் மேற்பட்ட தடவைகள் விவாதம் நடத்தியுள்ளோம். விவாதத்தால் என்ன பலன் கிடைத்தது" - என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் கேள்வி எழுப்பினார்.

# அயோத்தியில் இராமர் கோயில் கட்ட 67 ஏக்கர் நிலத்தையும் ஒதுக்கீடு செய்க

## விசுவ இந்து பரிஷத் வலியுறுத்து

அயோத்தியில் இராமர் கோயில் கட்ட மொத்தமுள்ள 67 ஏக்கர் நிலத்தையும் ஒதுக்க வேண்டும் - என்று விசுவ இந்து பரிஷத் (வி.எச்.பி.) வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பின் தலைவர் அசோக் சிங்கால் அயோத்தியில் செய்தியாளர்களிடம் சனிக்கிழமை கூறியவை வருமாறு -

அயோத்தி விவகாரம் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்பார்த்து காத்திருக்கிறோம். இராமர் கோயில் கட்டுவதற்கான கற்களைச் செதுக்கும் பணிகள் ஒரு மாதத்துக்குள் தொடங்கும்.

கோயில் கட்டுமானப் பணிகள் தொடங்கிவிட்டால் ஒன்றரை ஆண்டுக்குள் சுவாமி சிலைகளை நிறுவிவிடலாம் என்று கட்டடவியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதர கட்டுமானப் பணிகள் ஆண்டுக்கணக்கில் நீடிக்கலாம். எனவே, கோவில் கட்டுமானப் பணிகளுக்காக இராம பக்தர்கள் தாராளமாக நிதி அளிக்க வேண்டும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

**இந்தியச் செய்திகள்**

# ஊழலைத் தடுக்க அவசரச் சட்டம்; தீவிரமாகப் பரிசீலிக்கிறது மத்திய அரசு

## சோனியா, மன்மோகன் பங்கேற்பு

அடுக்கடுக்காக நடைபெற்று வரும் ஊழல்களைத் தடுக்க அவசரச் சட்டம் கொண்டுவருவது குறித்து மத்திய அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது; அரச ஊழியர்கள் மட்டுமல்லாது அரசியல் தலைவர்களும் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்படும் வகையில் இந்த அவசரச் சட்டம் இருக்கும் - என்று அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காங்கிரஸ் கட்சியின் உயர் நிலைத் தலைவர்கள் பங்கேற்ற ஆலோசனைக்கூட்டம் டில்லியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

ஆதர்ஷ் ஊழல், கொமன்வெல்த் ஊழல், 2 ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேடு என்று அடுக்கடுக்காக ஆட்சிக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்துவதுடன் பொதுப் பணத்தையும் விரயம் செய்யும் இந்த ஊழல்களைத் தடுப்பதற்கும், தவறு செய்தவர்களை விரைவாக விசாரித்துத் தண்டிப்பதற்கும் உரிய சட்டப்பூர்வ நடவடிக்கைகள் குறித்து தலைவர்கள் ஆலோசனை நடத்தினர்.

பிரதமர் உட்பட உயர் பதவியில் உள்ள அரசியல்வாதிகள், அரசு ஊழியர்கள் மீதான ஊழல் முறைப்பாடுகளை விசாரித்து தீர்ப்பு வழங்க லோக்பால் என்ற அமைப்பை ஏற்படுத்துவதற்கான பிரேரணை தயாராக இருக்கிறது. அதன் விசாரணை வரம்பில் பிரதமரையும் சேர்க்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அந்தப் பிரேரணையிலேயே மேலும் சில பிரிவுகளைச் சேர்த்து ஊழல் வழக்குகளை தனி நீதிமன்றங்கள் மூலம் விரைந்து விசாரிக்க வழிசெய்வது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

# சேலம் மாவட்டத்தில் பயங்கர விபத்து ஐயப்ப பக்தர்கள் 9 பேர் பரிதாபப் பலி!

சேலம், ஜன 03

சேலம், ஓமலூர் அருகே நேற்று நடந்த பயங்கர விபத்தில் ஐயப்ப பக்தர்கள் 9 பேர் பரிதாபமாகப் பலியாகினர்.

ஆந்திர மாநிலம் குப்பத்தை சேர்ந்தவர் வெங்கட்ராமன். இவரது மனைவி பாப்பம்மாள் (வயது - 50) அய்யப்ப பக்தர். இவரும் இவரது குடும்பத்தினர் 10 பேரும் சபரிமலை செல்ல இருமுடி கட்டி இருந்தனர்.

இவர்கள் கடந்த 30 ஆம் திகதி குவாலிஸ் காரில் சபரிமலைக்குப் புறப்பட்டுச் சென்றனர். சபரிமலை சென்று ஐயப்பனைத் தரிசித்து விட்டு நேற்றுமுன்தினம் சொந்த ஊருக்கு காரில் திரும்பினார்கள். நேற்று அதிகாலை 4 மணியளவில் சேலம் மாவட்டம் தீவட்டிப்பட்டி அருகில் உள்ள தொப்பூர் பக்கம் கார் வந்துகொண்டிருந்தது.

தொப்பூரில் கார் வந்துகொண்டிருந்த போது கண் இமைக்கும் நேரத்தில் வீதியோரம் ஓரம் நிறுத்தப்பட்டிருந்த [illegible] மோதியது. இதில் கார் சுக்கு நூறாக நொறுங்கியது. இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே 8 பேர் உடல் நசுங்கிப் பரிதாபமாக இறந்தனர். இறந்தவர்களில் 7 பேர் ஆண்கள், ஒருவர் பெண்.



விபத்தில் படுகாயமடைந்த இருவ்ரில் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்றுக் காலை இறந்தார். இதனால் சாவு எண்ணிக்கை 9ஆக உயர்ந்தது.

இந்த விபத்தால் தொப்பூர் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. விபத்தை அறிந்த திரளான பொதுமக்கள் சம்பவ இடத்தில் திரண்டனர். இந்த விபத்துக் குறித்து மேச்சேரி பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகிறார்கள்.

இதேவேளை, புத்தாண்டைக் கொண்டாட ஏற்காட்டிற்கு காரில் 4 பேர் சென்றனர். இவர்கள் சேலம் திரும்பினர். அப்போது கார் மலைப்பதை சுவற்றில் மோதி 300 அடி பள்ளத்தில் விழுந்தது. இதில் பஸ், லொறி உரிமையாளர் ராஜேந்திரன் என்பவர் இறந்து விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை அனர்த்த அழிவுகளில் இருந்து பயிர்களை பாதுகாக்கும் தந்திரோபாயங்கள்



(சென்றவாரத் தொடர்ச்சி)

✱காலபோகத்தில் ஏற்படும் உயர் மழைவீழ்ச்சியிலிருந்து மரக்கறிச் செய்கையினைப் பாதுகாத்தல்

அ. உயர்மழைவீழ்ச்சி பெறும் காலங்களில் வெள்ளம் மற்றும் நீர்தேங்கி நிற்றல் என்பனவற்றிலிருந்து பயிரினைப் பாதுகாப்பதற்கு வரம்புசால் முறையில் நீர் வழிந்தோடக் கூடியவாறு வரம்பின் உயரத்தை மேலும் அதிகரித்து மரக்கறிப் பயிர்களை நாட்டுதல்.

ஆ. மழை பெய்யும் போது மரக்கறிப் பயிர்களில் ஏற்படக் கூடிய தகைப்பினைக் குறைப்பதுடன் பயிர்கள் வாழ்வதற்கு உகந்த சூழலையும் உருவாக்கக்கூடிய மழைவீடு (Rain Shelter) இனை அமைத்து மரக்கறிகளை உற்பத்திப் செய்யும் முறையைக் கைக்கொள்ளல்.

✱உயரங்கூடிய பயன்தரு மரங்களைப் புயல் மற்றும் வெள்ள அனர்த்தங்களிலிருந்து பாதுகாத்தல்



நிசாப் புயலில் பாதிக்கப்பட்ட வாழை மரங்கள், நீர்வேலிப் பகுதிகள்.

அ. விவசாயத் திணைக்களத்தின் வழிகாட்டலின்கீழ் மாமரங்களில் மேலதிகமாக இருந்த கிளைகள், நோய்வாய்ப்பட்ட கிளைகள், குருவிச்சை போன்ற ஒட்டுண்ணித் தாவரங்களினால் பாதிக்கப்பட்ட கிளைகள் போன்றன கத்திரிக்கப்பட்டன. மேலும் மரத்தின் மையப் பகுதியிலிருந்து சூரியஒளி படும்வகையில் மேல் நோக்கி வளர்ந்து செல்லும் கிளைகள் கத்தரிக்கப்பட்டன. இச்செயன்முறை காரணமாகக் கூடியளவு உற்பத்தியையும் தரமான பழங்களையும் பெறக் கூடியதாக இருந்ததுடன் நிசாப் புயல் அனர்த்தத்தின் போது இம்மரங்கள் சேதத்திற்குட்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. எனவே உயரங் கூடிய பயன்தரு மரங்களைப் புயல் அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பதற்கு கத்தரித்தல் அவசியமானதாகும்.

## களமும் புலமும்

ஆ. வீடுகளில் பயன்தருமரங்கள் சிபாரிசு செய்யப்பட்ட இடைவெளிகளிலில்லாது மிகவும் நெருக்கமாக நாட்டப்பட்டுள்ளன. இம் மரங்கள் இயற்கை அனர்த்தங்களின்போது கூடியளவில் சேதமடைவதுடன் வீட்டிற்கும் குடும்ப உறுப்பினர்களுக்கும் சேதத்தை ஏற்படுத்துகின்றது. எனவே பயன்தரு மரங்களை சிபாரிசு செய்யப்பட்ட இடைவெளிகளில் நாட்டப்படல் வேண்டும்.

இ. நிழலிற்காகவும், விறகிற்காகவும் பயன்படும் மரங்களில் உற்பத்தி குறைவான, நலிவடைந்த சோடை மரங்களை அகற்றி புதிய மரங்களை நடுகை செய்தல் வேண்டும்.

✱புயல் மற்றும் தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்று (சோழகம்) அனர்த்தத்திலிருந்து வாழைச் செய்கையைப் பாதுகாத்தல்

வாழைக்கு மிண்டு கொடுத்தல், குலை வந்த பின்பு வாழையின் 1/3 பகுதி இலைகளை விட்டு ஏனைய இலைப் பகுதிகளை அகற்றல், வாழைத் தோட்டத்தைச் சூழ கிளிசிறியா போன்ற உயர் வேலிகளால் காற்றுத்தடை அமைத்தல், நெருக்கமான வாழைச் செய்கை முறை என்பனவற்றை அறிமுகப்படுத்தலும் விரிவுபடுத்துதலும்.

✱இடைப்போகப் பயிர்ச்செய்கையில் வெள்ளத்தினால் பயிர்களுக்கு ஏற்படக்கூடிய சேதத்தினைக் குறைத்தல்,

அ. செய்கைக்கு உட்படுத்தப்பட்ட வயலினுள் மேலதிக நீர் வடிந்தோடக் கூடிய வகையில் கான்களை உருவாக்கல்

ஆ. மேற்கூறப்பட்ட கான்களிலுள்ள மேலதிக நீரைத் தேவையேற்படும் சந்தர்ப்பத்தில் வடிந்தோடக் கூடிய வகை



இடைப்போகப் பயிரச்செய்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்கள்

யில் வடிகால்களை உருவாக்குதலும், பேணுதலும்.

✱இடைப்போகத்தில் நெற்காணிகளில் செய்கை பண்ணப்படும் மரக்கறிப் பயிர்களை வறட்சியிலிருந்து பாதுகாத்தல்.

அ. விதைகளை நடுகை செய்வதற்கு முன்னர் நீர்த்தகைப்பை சகித்து வளர்வதற்காக - நன்கு தடித்த சோறு வடித்த கஞ்சியினுள் ஒரு கிலோ விதையை இட்டு நன்றாகக் கலந்தவுடன் 500 கிராம் மரச்சாம்பலையிட்டு சாம்பல் விதையுடன் சேரத்தக்கவாறு கலந்து நிழலில் உலர்த்தி விதைத்தல்.

2மூல் செறிவுடைய மியூறேற்றப் பொட்டாஸியக் கரைசலை (2 கிராம் M.O.P யை 1 லீற்றர் நீரில்) தயாரித்து அதில் 10 நிமிடம் ஊறவைத்து நிழலில் உலர்த்தி விதைத்தல்.

ஆ. சேதனப் பசளைகளுடன் மும்மை அடர் சுப்பபொஸ்பேற் (T.S.P) கலந்து தயாரித்த ஊட்ட மேற்றிய சேதனப் பசளைகளை அடிக்கட்டுப்பசளையாகப் பயன்படுத்தல்


இ. மண்ணின் மயிர்துளை விசையால் ஏற்படக்கூடிய நீர் இழப்பினைக் குறைப்பதற்கு முட்கலப்பையைப் பயன்படுத்தி ஆழமற்ற உழவை மேற்கொண்டு விதைப்பை மேற்கொள்ளல்

ஈ. மண்ணிலிருந்து நீர் இழப்பைக் குறைப்பதற்கு பத்திரக் கலவையாக வைக்கோல், கிளிசீரியா இலை மற்றும் வீட்டுக் கழிவுகளை இடுதல்

உ. காலபோகம் மற்றும் இடைப் போகத்தில் பெறப்படும் மழைநீரை வயற்காணிகளில் துரவு போன்ற ஆழமான குழிகளை அமைத்து குழிகளின் உட்பகுதிக்குப் பொலித்தீன் படை ஒன்றை இடுவதன் மூலம் நீர் வடிந்து செல்வதைத் தடுத்து மழைநீரை சேமித்து இடைப் போகத்தில் செய்கை பண்ணப்படும் மரக்கறிப் பயிர்களுக்கு நுண்நீர்பாசன முறையைக் கடைப்பிடித்து விளைபயன் மிக்க முறையில் நீர்ப்பாசனத்தைச் செய்து உற்பத்தியை அதிகரிக்க முடியும்.

✱நிலத்தடி நீரினை வினைத்திறனாகப் பயன்படுத்தல்


வறட்சி நிலவும் காலங்களில் கிடைக்கக்கூடிய குறைந்தளவு நிலத்தடி நீரினை சொட்டு மற்றும் தூவல் நீர்ப்பாசன தொகுதி, சூரிய சக்தியிலான சொட்டு நீர்பாசனத் தொகுதி ஆகிய நுண்நீர்ப்பாசன முறைமைகளைப் பயன்படுத்தி வெற்றிகரமாகப் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளல்.




வரைபு 1

✱உயர் வெப்பநிலைக் காலங்களில் வீதிமுறைப் பயிர்ச் செய்கை முறையில் மரக்கறிப் பயிர்கள்

உயர் வெப்பநிலை நிலவும் காலங்களில் வீதிமுறைப் பயிர்ச்செய்கை முறையினைக் கையாண்டு பயிர்களை உற்பத்தி செய்ய முடியும். இம் முறையில் கிளிசீறியா, இப்பிலிப்பில் போன்ற அவரையினத் தாவரங்களை வரிசைகளில் நாட்டி வளர்த்தல் வேண்டும். இவ் வரிசைகளிற்கு இடையே கத்தரி, தக்காளி, பயிற்றை, கறிமிளகாய், மிளகாய் போன்ற ஆண்டுப் பயிர்களை நாட்டும் போது அவற்றுக்குப் பொருத்தமான வெப்பநிலை கிடைக்கின்றது.



மழை வீட்டில் மரக்கறிப் பயிரச்செய்கை மேற்கொள்ளல்

காலநிலை மாற்றங்களினால் ஏற்படக் கூடிய இயற்கை அனர்த்தங்களை எம்மால் தடுத்து நிறுத்த முடியாது. இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படக் கூடிய சேதங்களைக் குறைப்பதற்கு அல்லது தவிர்ப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை திட்டமிட்டுச் செயற்படுத்தல் காலத்தின் தேவையாகும். விவசாய நடவடிக்கைகளின் பங்காளர்களான விவசாயிகளும், விவசாயத்துறை அபிவிருத்தியில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களும் இணைந்து இயற்கை அனர்த்தத்தினால் பயிர்ச்செய்கைக்கு ஏற்படக்கூடிய இழப்புக்களைக் குறைப்பதற்கு அல்லது தவிர்ப்பதற்குரிய செயற்பாடுகளை எடுத்தல் வேண்டும். ✱


சி.சிவகுமார்,
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி),
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆஷஸ் கடைசி மோதல் சிட்னியில் இன்று ஆரம்பம்

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான கடைசி டெஸ்ட் போட்டி, சிட்டினியில் இன்று ஆரம்பமாகிறது. இந்தப் போட்டிக்கான ஆஸ்திரேலிய அணியின் தலைவராக கிளார்க் செயற்படுவார்.

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 5 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர், ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவருகிறது. முன்னர் நடந்து முடிந்த நான்கு போட்டிகளில் முடிவில் 2-1 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி முன்னிலை வகிக்கிறது. இந்நிலையில், இன்று கடைசி ஆட்டம் சிட்னியில் ஆரம்பமாக வுள்ளது. இந்தப் போட்டியில் கட்டாயம் வென்றாக வேண்டிய நிலையில் ஆஸ்திரேலிய அணி களமிறங்குகிறது. இந்தப் போட்டியில் தோற்றாலோ அல்லது சமநிலையில் முடித்தாலே ஆஸ்திரேலிய அணி தொடரை இழக்கும். அதேவேளை, இன்று ஆரம்பமாகும் போட்டியை எப்படியாவது சமநிலைப்படுத்தவோ அல்லது வெற்றியில் முடிக்கவோ இங்கிலாந்து அணி முனையும். அதேவேளை, தோற்றுவிட்டால் தொடரைச் சமனிலையில் முடிக்கும் நிலைக்குத் தள்ளப்படும். எனவே, இந்தப் போட்டி இரு அணிகளுக்குமே மிக முக்கிய ஆட்டமாகும்.



# அம்லா, கலிஸ் உதவியால் மீண்டது தென்னாபிரிக்கா

கேப்டவுன், ஜன. 03

கேப்டவுன் டெஸ்டில் அம்லா, கலிஸ் ஆகியோர் அரைசதம் அடிக்க, தென்னாபிரிக்க அணி சரிவிலிருந்து மீண்டது.

இந்திய அணி தென்னாபிரிக்காவில் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இரு அணிகளும் தலா ஒரு ஆட்டத்தில் வெற்றி பெற்றுள்ளன. தொடர் 1-1 என்ற நிலையலி சமப்பட்டுள்ளது.

வெற்றியாளரை முடிவு செய்யும் மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நேற்று, கேப்டவுன், நியூலாண்ட்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகியது. இந்திய அணியில் இருந்து முரளி விஜய் நீக்கப்பட்டு, காம்பீர் இடம்பெற்றார். தென்னாபிரிக்க அணியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. நீண்ட இடைவெளிக்குப் பின், நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் தோனி, களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்பத்தில் அதிர்ச்சி காத்திருந்தது. ஜாகீர் கான் வேகத்தில் மீண்டும் ஒரு முறை தென்னாபிரிக்கத் தலைவர் ஸ்மித் (6) வீழ்ந்தார். இவர், ஜாகிர் பந்தில் ஆட்டமிழந்தது இது 11ஆவது முறை. தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டுக்கு 21 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது மழை குறுக்கிட்டது. உணவு இடை வேளைக்குப் பின், தாமதமாக போட்டி ஆரம்பமாகியது. இம்முறை இஷாந்த் சர்மாவின் பந்தில் பீற்றர்சன் (21) வெளியேறினார். பின் கலிஸ், அம்லாவுடன் இணைதார். 61 ஓட்டங்களுக்கு 2 விக்கெட் என்ற நிலையில், போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் மீண்டும் நிறுத்தப்பட்டது.



மீண்டும் ஆட்டம் ஆரம்பித்த தும், அதிரடியாக ஆடிய அம்லா, ஜாகீர் கான் ஓவரில் 3 பவுண்டரிகள் விளாசினார். அடுத்து ஸ்ரீசாந்த் பந்து வீச்சில் அச்சத்லாக ஒரு சிக்சர் அடித்தார். தனது 19 ஆவது அரைசதத்தைப் பூர்த்தி செய்தார். ஸ்ரீசாந்தின் 2 ஓவரில் 23 ரன்கள் எடுத்து மிரட்டிய ஆம்லா (59), கடைசியில் இவரிடமே சிக்கினார். பின் கலிஸ், டிவிலியர்ஸ் இணைந்து நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினீர். அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய கலிஸ், அரைசதம் அடித்தார். டிவி லியர்ஸ் (26), ஸ்ரீசாந்த் வேகத்தில் அவுட்டானார். முதல் நாள் ஆட்ட நேர முடிவில், தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்சில் 4 விக்கெட் இழப்புக்கு 232 ரன்கள் எடுத்து இருந்தது. கலிஸ் (81), பிரின்ஸ் (28) அவுட்டாகாமல் இருந்தனர். ஸ்ரீசாந்த் 2, ஜாகீர் கான், இஷாந்த் சர்மா ஆகியோர் தலா 1 விக்கெட் வீழ்த்தினர்

# கரோலினை வீழ்த்தினார் பெல்ஜியத்தின் கிளிஸ்டர்



ஹுவா ஹின், ஜன. 03

கண்காட்சி டென்னிஸ் போட்டியில் பெல்ஜியத்தின் கிம் கிளிஸ்டர்ஸ் வெற்றி பெற்றார். தாய்லாந்தில் உள்ள ஹுவா ஹின் நகரில், கண்காட்சி டென்னிஸ் போட்டி நடந்தது.

இதில் பெல்ஜியத்தின் கிளிஸ்டர்ஸ், உலகின் உலகின் முதல் வீராங்கனையான டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கியுடன் மோதினார். ஆட்டத்தின், முதல் செற்றை கிளிஸ்டர்ஸ் வென்றார். இரண்டாவது செற்றை, கரோலில் கைப்பற்றினார். வெற்றியாளரைத் தீர்மானிக்கும் கடைசிச் சுற்றை கிளிஸ்டர் வென்றார். இறுதியில், 6-3, 4-6, 12-10 என்ற செற் கணக்கில் கிளிஸ்டர்ஸ் வெற்றி பெற்றார்.

## பங்களாதேஷ் அணியின் தலைவராக அல் ஹசன்

பெப்ரவரி மாதம் தொடங்கவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான பங்களாதேஷ் அணியின் தலைவராக சகலதுறை வீரர் ஷகிப் அல் ஹசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

சக வீரரான மோர்டாசா காயத்தால் அவதிப்பட்டு வருவதால் தற்காலிகமாக அணித் தலைவர் பொறுப்பை ஏற்ற அல்ஹசன் தலைமையிலான பங்களாதேஷ் அணி, நியூஸிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடரையும்(4-0), சிம்பாப்வேக்கு எதிரான ஒரு நாள் தொடரையும் (3-1) கைப்பற்றி அசத்தியது.

இதனால், உலகக் கிண்ணத் தொடருக்கான அணியை வழிநடத்தும் வாய்ப்பும் அவருக்குக் கிடைத்துள்ளது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான தமிம் இக்பால் துணை அணித்தலைவராகச் செயற்படுவார் என்று பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

# பெடரரை வெற்றிகொண்டார் நடால்

அபுதாபி, ஜன. 03

உலக டென்னிஸ் சம்பியன்ஷிப் தொடரில், ஸ்பெயினின் ரபெல் நடால் சம்பியன் பட்டம் வென்றார். அபுதாபியில், முபடலா உலக சம்பியன்ஷிப் கண்காட்சி டென்னிஸ் தொடர் நடந்தது.

இதன் இறுதிப் போட்டியில் உலகின் முதல் நிலை வீரரான ஸ்பெயினின் நடால், தரவரிசையில் இரண்டாவது இடத்தில் உள்ள வீரரான ரோஜர் பெடரரை சந்தித்தார். இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய நடால், 7-6, 7-6 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.



# முதலிடத்தை இழந்தார் ஆனந்த்



இந்தியாவின் செஸ் வீரரான விஸ்வநாதன் ஆனந்த் உலகத் தரவரிசையில் முதலிடத்தை இழந்துள்ளார். லண்டன் டென்னி தொடரில் சம்பியன் பட்டம் வென்ற நோர்வே வீரரான மேக்னஸ் கால்சன் முதலிடத்தைப் பிடித்தார். இந்தியாவின் பிரபல செஸ் வீரரான விஸ்வநாதன் ஆனந்த், 2810 புள்ளிகளுடன் தரவரிசையில் இரண்டாவது இடத்தில் உள்ளார். ஆர்மீனிய வீரரான அரோனியன் 3ஆவது இடத்தையும், ரஷ்ய வீரரான கிராம்னிக் 4 ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

# ஸ்மித்தைத் திட்டியமைக்காக ஸ்ரீசாந்தை எச்சரித்தார் டோனி

கேப்டவுண், ஜன. 03

டர்பன் டெஸ்ட் போட்டியின் போது ஸ்ரீசாந்த், தம்மை தனிப்பட்ட முறையில் திட்டினார் என தென்னாபிரிக்க அணித் தலைவரான ஸ்மித் பகிரங்கமாக குற்றஞ்சாட்டியிருந்தார். இதையடுத்து ஸ்ரீசாந்துக்கு இந்திய அணித்தலைவரான டோனி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய அணியின் சர்ச்சைக்குரிய பந்துவீச்சாளர் ஸ்ரீசாந்த். களத்தில் அளவுக்கு அதிகமாக ஆக்ரோஷமாகச் செயற்படுவார். சமீபத்திய டர்பன் டெஸ்ட் போட்டியின்போது இவர் வீசிய பந்து, தென்னாபிரிக்க அணித் தலைவரான ஸ்மித்தின் விரல் பகுதியைத் தாக்கியது. இதனால், ஆத்திரமடைந்த ஸ்மித், தனது துடுப்பு மட்டையை நீட்டி ஏதோ கூறினார். பதிலுக்கு ஸ்ரீசாந்தும் ஏதோ கூறினார்.

இப்பிரச்சினை தற்போது பெரிதாகியுள்ளது. தமது குடும்பத்தைப் பற்றி தனிப்பட்ட முறையில் ஸ்ரீசாந்த் திட்டினார் என ஸ்மித் தெரிவித்தார். இது குறித்து அவர் கூறியவை வருமாறு:- நான் 90 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றுள்ளேன். ஆனால், டர்பன் டெஸ்டில் நடந்தது போல எதுவும் நடந்ததில்லை. ஸ்ரீசாந்த் வரம்பு மீறி எனது குடும்பத்தைப் பற்றி தனிப்பட்ட முறையில் விமர்சித்தார். இதை டோனியிடம் தெரிவித்தேன். இது குறித்து ஆட்ட நடுவரிடம் முறையிட நான் விரும்பவில்லை. இந்தச் சம்பவத்தால் இரு அணிகளுக்மிடையிலான உறவில் எந்தப் பாதிப்பும் வராது.



ஏனெனில், ஒரு குறிப்பட்ட வீரரால்தான் பிரச்சினை. நானும், டோனியும் இதைப் பேசித் தீர்த்துக்கொள்வோம். - என்றார். ஸ்ரீசாந்தின் செயற்பாடு குறித்து இந்திய அணித்தலைவரான டோனி அதிருப்தி தெரிவித்துள்ளார். அவர் எல்லை மீறக்கூடாது என எச்சரித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்வி ரட்ணசிங்கம் யசோதா

ஆலங்குழாய், சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ரட்ணசிங்கம் யசோதா நேற்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ரட்ணசிங்கம்- ஞானமலர் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், சுபத்திரா, கந்தகுமார்(ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், க.மோதுவர்தனி(மாணவி, யாழ். மகாஜனாக் கல்லூரி) க.நிஷாந்தினி (மாணவி, யா/மகாஜனாக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.01.2011) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆலங்குழாய்,
சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய். (108396)

தகவல் :
குடும்பத்தினர்.

## வைத்தி செல்லர்



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதி விடமாகவும் கொண்ட வைத்தி செல்லர் நேற்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு., திருமதி வைத்தி தம்பதியரின் அன்பு மகனும் திரு., திருமதி மாணிக்கம் தம்பதியரின் மருமகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பொன்னம்மா மற்றும் கனகம்மா காலஞ்சென்ற சின்னையா, செல்லம்மா மற்றும் சீனியர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் முத்துலிங்கம், அரசலிங்கம், புஸ்பலீலா, கிருபா, யோகநாதன் (தாசன்), நிர்மலா (அலிஸ்), அகிலா, பிறேமதயாளன் (றகு-இ.போ.ச. சாரதி), றாதிகா, சுரேஸ்(ஜீவா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ராசம்மா, ஞானம்பிகை, கந்தசாமி, தங்கராஜா, ராணி, மகேஸ்வரன், ரூபன், ஜெயந்தி, கருணதாசன், இந்திரா ஆகியோரின் மாமனும் கமல், நிமல், சுமன், பிருந்தா, தட்சனா, சிவகிரி, சுதன், நிஷா, கஜாந்தினி, ருஷாகரன், ருஷானி, பிரகாஸ், மதன், கவிகா, காயத்திரி, பிரணவி, தரணிகா, யதுர்சன், யானு, கஸ்தூரி, ஜெனகன், ஜெதுகுலன், சுஜித்துலன், நிலானி, விதுர்ஷன், அமலா, அருண், நிதர்ஷன் ஆகியோரின் பேரனும் சுருதிகா, சதுர்மியா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2011) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் கோப்பாய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். 0213006671,
0778501048, 0777317560 (108399)

தகவல்:
குடும்பத்தினர்.

## சுப்பிரமணியம் நடராசா



கொத்தியாவத்தை, சுன்னாகம் மேற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நடராசா நேற்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-குட்டிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தங்கச்சியம்மா மற்றும் இராசம்மா ஆகியோரின் அன்புக்கணவரும் சத்திய மூர்த்தி (நெதர்லாந்து), கெங்காதரன் (ஜேர்மனி), சத்தியபாமா ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலச்சந்திரன், தர்மாவதி (நெதர்லாந்து), தயாநிதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் அனுஜன், விதுஷன், கர்ஜன் (ஜேர்மனி), சிந்திகா, கீர்த்தனா, கபீர்த்தனா, ஜீவிர்த்தனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2011) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம். (108402)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி சோமசுந்தரம் இராஜலட்சுமி



யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, நீராவியடியைப் பிறப்பிடமாவும் வண்ணார்பண்ணை ஐயனார் கோயி லடியை வசிப்பிடமாகவும் தற்போது வவு னியா, பூந்தோட்டத்தில் வசித்தவரு மான திருமதி சோமசுந்தரம் இராஜலட் சுமி நேற்று (02.01.2011) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந் தரம் (ராஜன் அரிவு மில்) அவர்களின் அன்பு மனைவியும் கனகராஜா (பவா), நளினி, கோகிலதாஸ், குகதாஸ், றஜனி, தயாளினி, கமலதாஸ், குமரதாஸ், சர்மினி ஆகியோரின் அன்புத் தாயாரும் அகிலா, குகதாஸன், றஜிதா, சிவநேசன், ஜெயக்குமார், சங்கீதா, தர்சினி, சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(108401)

தகவல்:
குடும்பத்தினர்.

### [illegible] ....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

**அரசுக்கு எதிராக சதித்திட்டம்**

அரசுக்கு எதிராக சில அரசுசாரா அமைப்புகள் சதி செய்வதில் இறங்கியுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சரவையில் அறிவித்தார். கடந்த புதன் கிழமை ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்தில் பேசுகையில் சில அரசுசாரா நிறுவனங்கள் வடக்கு - கிழக்கில் சீர்குலைவு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு சதிபுரிந்துவருவதாகக் கூறியதுடன் இது தொடர்பாக சில நிறுவனங்கள் இரண்டு வருடத்திட்டம் ஒன்றை வைத்திருப்பதாகவும் கூறினார். அரசுசாரா அமைப்புகளின் சதித்திட்டங்கள் தொடர்பாக அமைச்சர்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். வட பகுதிக்குள் நுழைவதற்கு சில அமைப்புகள் நன்கொடைகளைப் போர்வையாகப் பயன்படுத்தப் பார்க்கின்றன. இதன் அடிப்படையில் சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா சமர்ப்பித்த சில அமைப்புகளின் வடபகுதிக்கான மீள் கட்டுமானத்திட்டங்கள் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் கிடப்பில் வைக்கப்பட்டது. இம் மாதிரி நிதியளிப்பானது நாடுமுழுவதற் குமாக வரவேண்டும். ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு மட்டும் என்று இருக்கக்கூடாது என்று ராஜபக்ஷ அறிவுறுத்தினார். ஐ.நா. செயலாளர்நாயகம் நியமித்துள்ள தமக்கு யோசனை கூறுவதற்கான நிபுணர்கள் குழு இலங்கைக்கு வருமா என்பதில் ஏற்பட்டுள்ள நிச்சயமற்ற தன்மையும் அரசுக்கு ஏற்பட்டுள்ள இன்னொரு பிரச்சினையாகும். அந்தக் குழுவினர் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவைச் சந்திக்கமட்டுமே அனுமதிக் கப்படும். வேறு எந்த அதன் நடவடிக்கையும் அனுமதிக்கப் படமாட்டாதென அரசு கடந்தவாரம் மீண்டும் வலியுறுத்தியிருந்தது. ஐ.நா.பேச்சாளர் பர்ஹான் ஹக் நியூயோர்க்கில் கடந்த வாரம் பத்திரிகையாளர்களிடம் பேசும் போது நல்லிணக்க ஆணைக் குழுவைச் சந்திப்பதற்குமாத்திரம் இலங்கைக்குப் போக குழு விரும்பவில்லை அதைவிட விஸ்தாரமான ஆணையொன்று அதற்கு இருக்கிறது என்று கூறினார்.

இந்தச் சூழ்நிலையில் ஐ.நா. நிபுணர் குழுவின் அலுவலர்கள் தலைவர் றிச்சர்ட் பென்னற் தமது இலங்கைக்குச் செல்லும் திட்டத்தைக் கைவிட்டுள்ளார். மூவர் அடங்கிய நிபுணர்குழுவின் இலங்கை விஜயத்துக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக அவர் இலங்கை வரவிருந்தார். குழுவினர் நல்லிணக்க குழுவின் முன் கருத்துத்தெரிவிக்கமட்டுமே அனுமதிக்கப் படுவார்கள் என்று அரசு கண்டிப்பாக இருந்ததன் விளைவாகவே இது நடைபெற்றிருப்பதாகத் தெரிகின்றது. இது தொடர்பாக அதிகாரபூர்வமான அறிவித்தல் ஒன்று எதிர்வரும் நாள்களில் வெளியிடப்படலாம்.

### கையறுநிலை....

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர். அதில் ஒரு பகுதிதான் இவர்கள்.

முன்னர் கூட்டமைப்புடனான சந்திப்பின்போது இலங்கை ஜனாதிபதி மஹிந்த, பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடுகளைக் கட்டித்தர முடியாது என்று வெளிப்படையாகவே குறிப்பிட்டதை யும் இங்கு நாம் குறித்துக்கொள்ளலாம். எனவே, இலங்கை அரசுதான் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று புலம் பெயர் சமூகம் ஒதுங்கிக் கொள்வது நாம் நம்பிய ஒன்றுக்காக வாழ்ந்த, அதற்காக எல்லாவற்றையும் கொடுத்து விட்டு நிர்க்கதியாக நிற்பவர்களை நாமே ஏறி மிதிப்பதற்கு ஒப்பானதாகும்.

யுத்த காலத்தில் புலிகளை வலுப்படுத்துவதற்காக ஆண்டு தோறும் சுமார் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை புலம்பெயர் சமூகம் வழங்கியதாக ICG & International Crisis Groups எனப்படும் முரண்பாடுகளுக்கான சர்வதேச குழாம் குறிப்பிடுகிறது. புலிகளின் வளர்ச்சிக்காக உதவிய புலம் பெயர் மக்கள், இன்று அந்த எழுச்சியின் பக்கபலமாக இருந்தவர்களையும், அனைத்து தமிழர்களின் கனவுகளை ஈடேற்றுவதற்காக தங்களை முழுமையாக அர்ப்பணித்தவர்களையும் நடுக் கடலில் விட்டு நமக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையே! என்று ஒதுங்கிக் கொள்வது எந்த வகையில் நீதியானது?

அது சரியான ஒன்றுதானா?

(நன்றி: புதினப்பலகை)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா நடராசா



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லையா நடராசா நேற்று (02.01.2011) ஞாயிற்றுக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இளையபிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும் ஜெயபாலன் (ஜேர்மனி), ஜெயகுமார் (லண்டன்), ஜெயசீலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் வனஜா (ஜேர்மனி), மகாலோஜி (லண்டன்), காலஞ்சென்ற தர்சினி ஆகியோரின் மாமனும் சிந்துஜன் (ஜேர்மனி), ஜேசனா (லண்டன்), ஜேசிகா (லண்டன்), தர்சனன், தனுசனன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2011) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வைரவர் கோயிலடி,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (108391)

தகவல் :
ந.ஜெயசீலன்
(மகன்).

## திருமதி தங்கச்சிப்பிள்ளை சரவணமுத்து

சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கச்சிப்பிள்ளை சரவணமுத்து நேற்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்துவின் மனைவியும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற நந்தகுமார் மற்றும் கலாவாணி, ஜீவ குமார், விஜயகுமார் (நீர்வேலி ப.நோ.கூ சங்கம்), இளையகுமார் ஆகியோரின் அன்புத் தாயும் தவேந்திரன் (சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்), ஜெயராணி, அமிர்தலிங்கம், நவீந்தினி (ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரின் மாமியும் ஜெனனி (ஆசிரியை, செட்டிக்குளம் நலன்புரி நிலையம்), ஜெனகன் (David Picris Motor Company Limited, Jaffna), ஜெயந்தன், ஜெயரூபன், பிருந்தாபன், கயரூபன், நிரூபன் ஆகியோரின் பேர்த்தியும் சிறுப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற சேதுப்பிள்ளை மற்றும் சுப்பிரமணியம், நவரட்ணம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2011) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.30 மணியளவில் பூவோடை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (108389)

தகவல் :
குடும்பத்தினர்.

## திருமதி செல்வரத்தினம் அன்னலட்சுமி

கண்டி வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் அன்னலட்சுமி நேற்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும் லீலாவதி (வவுனியா), லோகேஸ்வரி (அரியாலை), சற்குணவதி (ஜேர்மனி), கணேசரத்தினம், ஜீவரத்தினம், தர்மபாலன், திலகரட்ணம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பத்மநாதன், சத்தியசீலன், மலர் (ஜேர்மனி), வசந்தி, தர்மகுலசிங்கம், கிரிசா, மனோகரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

205, கண்டி வீதி,
அரியாலை. (108397)

தகவல்:
திருமதி லோகேஸ்வரி
சத்தியசீலன்.

## பரராஜசேகரம் சேகர்

**(முன்னாள் ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், C.M.I.W.U வடபிராந்திய பிரதிநிதி)**



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட பரராஜசேகரம் சேகர் நேற்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரராஜசேகரம் - லீலாவதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - காகரத்தினம் தம்பதியரின் அருமை மருமகனும் ரோகிணியின் (அருட்செல்வி) அன்புக் கணவரும் ஜனனியின் (2ஆம் வருடம், விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக்கழகம்) பாசமுள்ள தந்தையும் கலாவல்லி, அமுதவல்லி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இலங்கரத்தினம் மற்றும் மனோகரன், அனுஷா ஆகியோரின் அன்பு மைத்துனரும் புலேந்திரனின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2011) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

66, மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (108390)

தகவல் :
ரோகிணி சேகர்
(மனைவி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### சின்னப்பு சண்முகராசா

ஒட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும், முள்ளி வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிட மாகவும் கொண்ட சின்னப்பு சண்முகராசா நேற்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் நகுலனின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2011) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.11 மணியளவில் காக்கைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முள்ளி வீதி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர், நகுலன் (மகன்).


**கணக்கீடு**
A.P.பகீரதன்
B.B.A. (Fm Spl.)
A/L 2012
புதிய பிரிவுகள் ஆரம்பம்
கட்டுப்பாட்டுக் க/கு
Tue, Thur 6.15-7.15 A.M.
வங்கிக் கணக்கிணக்கக் கற்று
Sat, Sun 5.00-6.00 P.M.
Paper Class
Tue, Thur 5.00-6.00 P.M.
A/L 2013
ஆரம்பம்
03.01.2011 (Mon 5.00 P.M.)
அனுமதிகள் இன்றுமுதல்
IBS சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.


## சாவகச்சேரி நீதிவான் மட்டக்களப்புக்கு மாற்றம்

தென்மராட்சி,ஜன.03

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக கடமையாற்றிய நூர் முகமது முகமது அப்துல்லா மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது இடத்துக்கு வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த முதலாம் திகதி அமுலாக்கப்பட்டு நீதி அமைச்சின் செயலாளரினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (ஐ-207)


**மணமகள் தேவை**

MBAபடித்துவிட்டு லண்டனில் Strategy Specialistஆக வேலை பார்க்கும் 35 வயதுடைய கௌரவ குடும்பம் 5 அடி 9 அங்குல உயரம் கொண்டவரும் 8 இல் செவ்வாயுடன் உத்தரட்டாதி நட்சத்திரத்தையும் உடைய மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. மணமகள் படித்தவரும் வெளிநாட்டில் வேலை செய்யும் திறனும் பெற்றவராக இருத்தல் விரும்பத்தக்கது.

விவரங்களுக்கு : 0213216397


## மரண அறிவித்தல்

### திருமதி முத்துலிங்கம் பரமேஸ்வரி



சூராவத்தை, சுன்னாகத்தைச் சேர்ந்த முத்துலிங்கம் பரமேஸ்வரி நேற்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துலிங்கத்தின் அன்பு மனைவியும் பாக்கியநாதனின் அன்புத் தாயும் செல்வநாயகியின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான மூத்தவி (ஸ்தாபகர், யா/ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்) தம்பதியரின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற வைரவநாதனின் (அதிபர்) அருமைச் சகோதரியும் செந்தூர்நாதன், தணிகன், உமாசுதன், மால்மருகன், அபிஷேகன், சக்ராயுதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2011) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சூராவத்தை,
சுன்னாகம்.
0212240483

(108387)

தகவல் :
மு.பாக்கியநாதன் (மகன்).

## இருவருக்கு பிணை

தென்மராட்சி, ஜன.03

சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கியின் தன்னியக்கப் பணப் பரிவர்த்தன இயந்திரத்தைச் சேதப்படுத்தி திருட்டு முயற்சியில் ஈடுபட்ட இருவரையும் சாவகச்சேரி நீதிமன்றினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த இருவரும் ஆஜர் செய்யப்பட்ட போது வழக்கினை விசாரித்த நீதிவான் என்.எம்.எம்.அப்துல்லா தலா 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா 2 லட்சம் ரூபா பெறுமதியான ஆள்பிணையிலும் செல்ல அனுமதித்தார்.(ஐ-207)

## பட்டம் ஏற்றும் சீசன் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.03

வடமராட்சிப் பகுதியில் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு பட்டம் ஏற்றும் சீசன் ஆரம்பமாகியுள்ளது.

கொக்கு, பருந்து, நட்சத்திரம், வீடு, மணிக்கூடு, ஆள், வட்டம், சதுரம் போன்ற அமைப்பிலான பட்டங்கள் ஏற்றப்பட்டு வருகின்றன.

இந்தப் பட்டங்களை சிறுவர்கள் முதல் இளைஞர்கள் வரை ஏற்றி வருகின்றனர். கடைகளிலும் இவ்வாறான பட்டங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

பொங்கல் தினத்தன்று பட்ட மேற்றும் போட்டியும் இடம் பெறவி [illegible] (ஐ-78)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி பசுபதி

யாழ்ப்பாணம், பலாலியைப் பிறப்பிடமாகவும் படித்த மகளிர் திட்டம், துர்க்காபுரம், மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பசுபதி நேற்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2011) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கரியைக்காக எழுதுமட்டுவாள் வடக்கு இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மிருசுவில் துர்க்கை அம்மன்
படித்த மகளிர் திட்டம்,
மிருசுவில்.

(பி/574195)

தகவல் :
குடும்பத்தினர்.

### முருகேசுபிள்ளை நாகலிங்கம் (செல்லத்துரை)

(ஓய்வுபெற்ற புகையிரத பரிசோதகர், சோதிடர்)

மீசாலை கிழக்கைச் சேர்ந்த முருகேசுபிள்ளை நாகலிங்கம் நேற்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசுபிள்ளை (கணக்கர்) - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் குணமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தாமோ தரம்பிள்ளை, துரைச்சாமி மற்றும் செல்வமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமலிங்கம் (புகையிரதப் பாதை பரிசோதகர், ஹட்டன்), றஞ்சிதமலர் (முதலமைச்சர் செயலகம், கிழக்கு மாகாணம்), மனோறஞ்சிதம் (மீசாலை), நவறஞ்சிதம் (ஜேர்மனி), சுசீலா (சுவிஸ்), இந்திரா (ஜேர்மனி), புஸ்பா (லண்டன்), தனுசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராசலட்சுமி, யோகறாஜா (வீதி அபிவிருத்தி அமைச்சு, திருகோணமலை), பாண்டியன் (மீசாலை), காலஞ்சென்ற சுமேந்திரன் மற்றும் சிவலோகநாதன் (சுவிஸ்), வசீகரன் (ஜேர்மனி), சுவேந்திரா (லண்டன்), சுவந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2011) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3 மணியளவில் பூதவுடல் கெற்புலவு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
மீசாலை. (பி/574196) மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

### திருமதி சவிரிமுத்து விக்டோறியா (தங்கபொன்)



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சவிரிமுத்து விக்டோறியா (தங்கபொன்) நேற்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.01.2011) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

386, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.


(108403)

தகவல் :
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### ஆழ்வார் செல்லையா

(யாழ். ஐக்கிய வாலிபர் சங்கத்தின் முன்னாள் தலைவரும் செயலாளரும்)



இல. 05, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வார் செல்லையா கடந்த 30.12.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவயோகத்தின் அன்புக் கணவரும் செல்வபத்மாவதி, காலஞ்சென்ற கபிலராஜன் மற்றும் இராகுலராஜா, விமலராஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தந்தையும் சின்னத்துரை, ரஞ்சினி, மஞ்சுளா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான சண்முகம், மாணிக்கம் (ஓய்வுபெற்ற புகையிரத உத்தியோகத்தர்) மற்றும் அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் வனஜா (U.K.), கலாரூபன், வினோபாகரன் (U.S.A.),சுதர்சன் (பிரான்ஸ்), சுதர்சினி (பிரான்ஸ்), நிஷாந்தினி, சதானந் (கனடா), சாருஜன், சுதேஸ் (பிரான்ஸ்), அரவிந்தன் (பிரான்ஸ்), மயூரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2011) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 05, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

(107774)

தகவல் :
செ.ரகுலராஜா (மகன்).


**Children's World**
Child Development Centre
Pre School
சிறுவர் செயலகத்தின் தேசிய கொள்கைக்கு அமைவானது.
Open The Door To Your Child's Future
அனுபவ முதிர்ச்சி பெற்ற ஆசிரியர்களின் வழிகாட்டலில்
✓ Language Development
✓ Knowledge Development
✓ Skill Development
✓ Values Development
✓ Speach & Drama Class.
✓ Creative Arts and Crafts
✓ Gama Abacus in Rainbow Programme.
மாதாந்த கட்டணம் 1000/= மட்டுமே
மேலதிக கட்டணங்கள் எதுவுமில்லை
2011ம் ஆண்டுக்கான அனுமதிகள் தற்போது வழங்கப்படுகிறது.
2 1/2 வயது முதல்
Play- based "Learning Through Play" British curriculum
No 14, 2nd Lane,Palaly Road,Jaffna. T.P ;- 0777729525


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்சான் சூகீயை விட மோசமாக நடத்தப்படுகிறார் பொன்சேகா

## கரு ஜயசூரிய குற்றச்சாட்டு

மியன்மாரின் எதிர்க்கட்சித் தலைவி ஆங் சான் சூ கீயை விடவும் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா மோசமாக நடத்தப்படுகிறார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய குற்றம் சாட்டியுள்ளார்.

மியன்மார் இராணுவ ஆட்சியாளர்களை விடவும், அரசு சரத் பொன்சேகாவை மோசமாக நடத்தி வருகிறது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளை இல்லாதொழிப்பதற்காக அர்ப்பணிப்புடன் சரத் பொன்சேகா போராடி வந்தார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மியன்மார் ஆட்சியாளர்கள் ஆங் சான் சூகீயை வீட்டுக் காவலில் தடுத்து வைத்தனர் எனவும், இலங்கை அரசு சரத் பொன்சேகாவைச் சிறையில் அடைத்து வைத்திருக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மக்கள் புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டு வரும் சந்தர்ப்பத்தில், சரத் பொன்சேகா சிறையில் வாடி வருகிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவிற்கு உரிய மருத்துவ வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் எனவும், இந்தப் புத்தாண்டிலேனும் சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வரும் சந்தர்ப்பத்தில், சரத் பொன்சேகா கடுமையான நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகிறார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே.க. வெற்றி பெறுவது நிச்சயம் என்கிறார் மங்கள

மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு ஐ.தே.க கட்சி தயாராகவுள்ளது என்று அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார். மாத்தறையில் நேற்று கட்சியின் செயற்பாட்டாளர்களைச் சந்தித்து உரையாடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஐ.தே.கட்சி எந்த முறையில் சென்றாலும் இம்முறை எமது வெற்றி தெளிவாகியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். கட்சி செயற்குழுவிலுள்ள பலர் ரணிலும், சஜித்தும் தேவை என்று கூறுகின்றனர் என்றும் தெரிவித்தார்.


புதிய நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.
கல்வியாண்டு 2011
தரம் 1 முதல் O/L வரை
பிரிவு 2 ஆரம்பம் :
05-01-2011
புதன் 3.30 மணி

இரசாயனவியல்
83/19, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
A/L - 2013
05.01.2011 (புதன்)
4.30 P.m
கலா
T.P : 0212229650

"தரம் 4, 5 மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஒரு நற்செய்தி"
இன்று முதல் வெளிவருகின்றது...





புலமைச் சுடர் 2011-2012
"ஒரு வாரகாலம் கற்பதற்குப் போதுமான ஆக்கங்கள் ஒரே கையேட்டில்"

36ஆவது வருடக் கல்விச் சேவையில்
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
A/L கலை, வர்த்தக வகுப்புகள்
2013 ஆரம்பம்- ஜனவரி- 8.(8மணி)
கலைப் பிரிவு

| | | |
|---|---|---|
| Tam N.துரந்தை | H.C Mr.பத்மராஜா | P.sci Mr.நிரங்கநாத் |
| ECo N.B.சுஜீதரன் | Geo P.S.V.தினேஸ் | Log Mr.வாகீசன் |
| Hin N.T.தரன் | Chi S.K.ஜூட் | Ram T.கஜநரன் |
| His Mr.தாஸ் | வர்த்தகப்பிரிவு | |
| Acc A.B.மகீதன் | Eco N.B.சுஜீதரன் | B.st N.மகேசு |

விக்னா கல்வி நிறுவனம்
★ அனுமதிகள் இன்று முதல்
★ கலை, வர்த்தக Day Class ஆரம்பமாகிவிட்டது
Mon- To Fri 8.00 - 1.00
★ விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும்

A/L Day Class
கலை, வர்த்தக
கணித, உயிரியல்
பிரிவு - 2
ஆரம்பம் : 03-01-2011 திங்கள் 8.00 மணி
வழமையான ஆசிரியர் குழாம்
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

வருமான வரிக் கணக்குகள்
தற்போது நடைமுறையிலுள்ள வருமானவரி, வியாபாரப் புரள்வு வரி (B.T.T), வற் (VAT) வரி போன்ற வரிகளுக்கும், 01.01.2011இல் இருந்து நடைமுறைக்கு வரும் வருமான வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (N.B.T), வற் வரி (VAT) போன்ற வரிகளுக்கும் கணக்குகள் தயாரித்து திரட்டுக்களும் பூர்த்தி செய்து வழங்கப்படுவதுடன் வரிகள் பற்றிய ஆலோசனைகளும் வழங்கப்படும்.
தொடர்பு : 96, மணிக்கூட்டு கோபுர வீதி, (பெருமாள் கோயிலடி), யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212220127

A/L 2013
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஜனவரி - 03
காலை - 08.00
DMI

A/L 2013 ஆரம்பம் 08-01-2011 சனி 8.00 மணி
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

CHEMISTRY CENTRE
300, பலாலி வீதி, கந்தர்மடம்.
A/L 2013

| English Medium | Tamil Medium |
|---|---|
| Inaugurate on 03.01.2011 Mon. 6.00 Pm | ஆரம்பம் 03.01.2011 Mon. 5- 6 Pm |

By: அன்பு

விஞ்ஞானம்
தரம் 9, 10, 11
இரா.செல்வவடிவேல்
பல வருட அனுபவங்கொண்ட சிரேஷ்ட ஆசிரியரின் வகுப்புகள் 04.01.2011 இலிருந்து ஆரம்பமாகிறது.
தனிப்பட்ட அனுமதி வழங்கப்படும்
றோயல் அக்கடமி
நல்லூர்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு 01: 14.01.2011
பிரிவு 02: 23.10.2011
பிரிவு 03: 30.01.2011
பிரிவு 04: 31.01.2011
காலை 10.00 மணி

IIS Computer Courses
Certificate Courses
Office Solution Development
Hardware Technology
Eng.Drawing & AutoCAD
Database Management System
Computerized Accounting
Desktop Publishing
Web Designing
Networking
Multimedia
Java Programming
Visual Programming
Diploma Courses
Software Development
Computer Hardware & Networking Eng.
Business Information System
"IIS உங்கள் ஒளிமயமான எதிர்காலத்தின் வழிகாட்டி"
INSTITUTE OF INFORMATICS STUDIES
#100, Clock Tower Road, Jaffna.
T.P.No : 021 222 2831 E.Mail : iis@iis.edu.lk

A/L தமிழ் 2013 Day + 2011
புதிய பிரிவு
புதன் } 3.30 -
வியா. } 4.30
ல.தமிழிந்திரன்
உயர் தமிழ்க் கல்லூரி,
ஊரெழு
(கணேசா H.T.C அருகில்)

கட்டட வேலைகள் செய்துகொடுக்கப்படும்
வீடு கட்டுதல், திருத்துதல், குளியலறை கட்டுதல், மாபிள் பதித்தல், சுற்றுமதில் கட்டுதல், வர்ணம் பூசுதல், Electric வேலைகள், Plumbing வேலைகள் அனைத்தும் தரமாகவும் நியாயவிலையிலும் செய்துகொடுக்கப்படும்.
AXSHAYA CONSTRTUCTION, JAFFNA.
தொடர்பு : 0776679564, 0213207202, 0213218088

SCC
2010 O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பம் 05,08.01.2011
விசேட கணனிப் பயிற்சி நெறிகள்
Dip. In MS Office
Dip. In Desktop Publishing
Dip. In Eng. Drawing & Auto CAD
Dip. In Computerized Accounting
Dip. In Audio & Video Editing
Dip. In Visual Basic
Dip. In Web Designing
4000/=
Free
Dip. In Hardware Engineering
Dip. In Internet e-mail
ONLINE CLASSESக்கும் மாணவர் அனுமதிக்கப்படுவர்
மேலதிக விபரங்களுக்கு
Softview Computer College
43, Arasady Rd,Thaddatheru Junction, Jaffna.
T.P: 021 2225170

Quick Learning Course
Spoken English with Grammar
Duration 1 Month Rs.1000.00
உரையாடல் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்தில் அமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசீ Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935
BCHS
10-01-2011
Batch 9 : 09.00 AM - 01.00 PM
Batch 10 : 01.30 PM - 05.30 PM


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்... யார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org